























25வது வெள்ளி விழா 2021

UTHAYAN

# உதயன்

சிந்திக்கும் தமிழ் உலகின் உலகில் எத்திக்கும் ஒளி வீசும்

$1.00

416-752-1524
416-752-6703

உதயம் 1296 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday February 5, 2021


# கனடாவில் தேசிய ஊடகங்களுக்கு இணையாக பல்கலாச்சார ஊடகங்கள் ஊடகப் பணியாற்றுகின்றன



## ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் புகழாரம்

(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என்.லோகேந்திரலிங்கம்)

"கனடா ஒரு பல்கலாச்சார நாடு. இங்கு உலகெங்கும் உள்ள நூற்றுக்கணக்கான நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்த பல்வேறு இன, மத. மொழி சார்ந்த மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றன. இந்த மாகாணத்தின் முதல்வர் என்ற வகையில் நான் கடந்த சில வருடங்களாக அவதானித்தது என்னவென்றால் இங்கு பல வருடங்களாக இயங்கிவரும் பத்திரிகைகள், தொலைக் காட்சிகள் மற்றும் வானொலிகள் ஆகிய தேசிய ஊடகங்களுக்கு இணையாக கடந்த அரை நூற்றாண்டுக்கு உட்பட்ட காலத்தில் கால்பதித்த பல்கலாச்சார ஊடகங்கள் ஊடகப் பணியாற்றுகின்றன. அவற்றின் ஊடகச் சேவையை முதல்வர் என்ற வகையில் நானும், எனது அமைச்சர்களும், ஏனைய மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கண்டு வருகின்றோம். அவற்றின் பயன்பாடுகளை நாங்கள் தெரிந்து கொண்டுள்ளோம்"

(உள்ளே விபரமான செய்தி: 17ம் பக்கம்)

# 'TORONTO VOICE OF HUMANITY' ஏற்பாட்டில் ஹட்டன் பிரதேசத்தில் இருபது-இருபது அமைப்பு மூலமாக மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பெற்றன

கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் வுழசுழுவேழு ஏழுஐஊநு ழுகு ர்ருஆயுஜேவுலு என்னும் 'ரொரன்ரோ மனித நேயக் குரல்' அமைப்பின் ஏற்பாட்டில் இலங்கையின் மலை நாட்டில் ஹட்டன் பிரதேசத்தில் அமைந்துள்ள வெளிஓயா கீழ் டிவிசன்-பகுதியில் இயங்கும் இருபது-இருபது இளைஞர்கள் அமைப்பு மூலமாக அங்கு வாழும் தமிழ் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பெற்றன.





இந்த பணியை ஏற்று நிறைவோடு நடத்திய . இருபது – இருபது இளைஞர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவருக்கும் நன்றி.. அத்துடன் சென்னையில் நண்பன் இணையத்தளத்தின் பொறுப்பாளர் அருண் கதாகரன் அவர்களுக்கும் இந்த நற்பணிக்கு ஆதரவு வழங்கிய நண்பர்களை அனைவருக்கும் நன்றி.

இந்நிலையில், மேலும் பல நற்பணிகளுக்கு தொடர்ச்சியாக எமது அமைப்பிற்கு வேண்டுதல்கள் வந்த வண்ணம் உள்ளன. எனவே சிறு தொகை அன்பளிப்புக்களை வழங்க விரும்புவோர் அமைப்பின் பின்வரும் முக்கிய உறுப்பினர்களோடு தொடர்பு கொள்ளவும்.

திரு சங்கர் நல்லதம்பி 416-270-4343    திரு மரியாம்பிள்ளை மரியராசா-416-669-6437
திரு லோகேந்திரலிங்கம்- 416 732 1608










THE GUARDIAN
HOME REALTY INC.,BROKERAGE
Independently Owned and Operated

Where life begins...



வீடு வாங்க விற்க அல்லது
அது தொடர்பான விடயங்களை அறியவும்,
இலவச ஆலோசனைகளை
பெற்றுக்கொள்ளவும்

THE GUARDIAN
HOME REALTY INC.

Real Estate
முகவராக விரும்பும்
அன்பர்களே

*We recruit* and train personnels who want to become a real estate agent as a career.

*We provide* tthem an opportunity as an agent in our company.

Contact us
F119 - 80 Nashdene Road
Scarborough ON M1V 5E4
Phone: (416) 989 - 6565 web: www.theguardianhomes.com

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள்
Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

GHURUS TOWING
Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire
We pay scrap up to $1000

NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

COMPUTER REPAIR
Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN:
(416) 894-6244

உதயன் கதிரோட்டம்

# இன மத பிரதேச இடைவெளிகளை நிரப்பிய வண்ணம் தொடரும் 'பொத்துவில் முதல் பொலிகண்ட வரை' நடைப்பயணம்

வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாணசபையை சீரழித்துவிட்டு இனவாதக் குதிரையின் மீது ஏறி சவாரி செய்கிறது சிங்கள பௌத்த இராணுவ ஆட்சி. இந்து-இஸ்லாம்-கிறிஸ்தவம் என மதங்களுக்கிடையே ஒற்றுமையை சீர்குலைத்து கொக்கரித்து நின்றது இனவாத அரசு. வடக்கிலும் கிழக்கிலும் பௌத்தத்தின் ஆழமான சின்னங்களை நிறுவுவதற்காக இந்துக்களின் புராதன மத அடையாளங்களையும் அழகு மிகு ஆலயங்களையும் சிதைத்து வருகின்றது இந்த கோட்டாபாய அரசாங்கம்.

மியன்மாரில் தோன்றியுள்ள இராணுவ ஆட்சியைப் பார்த்து சம்பந்தமில்லாதவர்கள், அரசியல் அறிவற்றவர்கள் இலங்கையிலும் விரைவில் இராணுவ ஆட்சி வரும் என்று தமிழ் மக்களை மீண்டும் ஏமாற்றுகின்றார்கள். தமிழ் மக்களைக் கவருவதற்காக, வார்த்தைக் கோர்த்து கலை வடிவங்கள் என நினைத்து கட்டுரைகளை வடிக்கின்றார்கள். ஆனால் இவ்வாறான கருத்துக்கள் எவ்வளவு முட்டாள்தனமானவை என்பதை அவர்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள்.

இலங்கையில் தற்போது எந்த ஆட்சி நடைபெறுகின்றது என்று நாம் அவர்களிடம் இந்த இக்கட்டான நேரத்தில் கேட்கின்றோம்.

எமது மக்கள், கைகளில் எவ்வித ஆயுதங்களும் இன்றி வீதிகளில் நடந்து தமிழ் சிங்கள முஸ்லிம் கிராமங்களையும் நகரங்களையும் கடந்து செல்கின்றார்கள். வழியில் எது நடந்தாலும் பரவாயில்லை என்று அவர்கள் துணிச்சலோடு தொடர்கின்றார்கள் தங்கள் நடை பயணத்தை.

இந்த நேரத்தில் இலங்கையில் முன்னாள் இராணுவச் சிப்பாயும் பின்னாளின் பாதுகாப்புச் செயலாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான கோட்டாபாயவின் தலைமையில் நடைபெறுகின்ற ஆட்சி ஒரு இராணுவ ஆட்சிதான் என்பதை எமது அரசியல்வாதிகள் மறந்து போய் வார்த்தைகளோடு விளையாடுகின்றார்கள். மக்கள் தங்களை மீண்டும் ஈர்த்துக் கொள்ள வேண்டும் என்று மனதிற்குள் நினைத்துக்கொள்கின்றார்கள்.

இந்த நாட்கள் எமது ஈழத் தமிழர் வரலாற்றில் மிகவும் முக்கியமானவை. எத்தனையோ ஆண்டுகளாக இந்த பேரினவாத அரசாங்கங்களிடமிருந்து எமதுஇதேவேளை இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாத அரசால் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட இன அழிப்புப்போரில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கேட்டு கிளிநொச்சி கந்தசாமி கோயில் முற்றத்தில் நடைபெற்று வரும் பட்டினிப்போராட்டமும், பொத்துவிலிலிருந்து தொடங்கியிருக்கும் நடைப்பயணமும் நம்பிக்கையைத் தருகிறது. சிங்களப்பேரினவாத ஆட்சியாளர்களின் கோர அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் நெஞ்சுரத்தோடு போராட்டத்தை முன்னெடுத்திருக்கும் முன்வரிசை அகிம்சைப் போராளிகள் பாராட்டுக்குரியவர்கள்.

இனப்படுகொலை நிகழ்ந்து பத்தாண்டுகளாகியும் அதுகுறித்து எவ்வித சர்வதேச விசாரணையும் நடத்தப்படாத நிலையில் அதற்கான நீதியைக் கேட்டு நிற்கும் எமது மக்களை அனைத்துலக நாடுகளும் கைவிட்ட கையறு நிலையிலும் சர்வதேச சமுகத்திடம் அவர்கள் மன்றாடி வருகின்றார். உலகெங்கும் பரந்து வாழும் எமது தமிழ் உறவு தாயகத்தில் அகிம்சைப் போரில் குதித்துள்ள மக்களுக்காக தொடர்ந்து குரல் கொடுக்கின்றார்கள்.

தமிழர்களின் போராட்டங்களுக்குச் செவிசாய்க்காத பேரினவாத அரசு இனவழிப்பு நடவடிக்கைகளை இன்னும் தீவிரப்படுத்தியுள்ளதை அண்மைக்காலமாக எமது தாயகத்தில் நடைபெறும் நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை முழுக்க இராணுவமயமாக்குவது, தமிழர் காணிகளை ஆக்கிரமிப்பது, புதிய சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி, பூர்வக்குடிகளான தமிழர்களின் இருப்பைக் குறைப்பது, இருநூறுக்கும் மேற்பட்ட தமிழர் வழிபாட்டுத் தலங்களைச் சிதைத்தழிக்க முயல்வது, புத்த விகாரைகளைப் புதிதாக நிறுவுவது, தமிழ் மக்களின் இன, மொழி, பண்பாடு ஆகியவற்றுக்கான வரலாற்று அடையாளங்களை முற்றிலுமாக அழிப்பது என மறைமுகமாகவும், நேரடியாகவும் இனவழிப்பில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

இவ்வாறான அநீதிகளை எதிர்த்து நின்று போராட எம்மிடம் வளங்கள் இல்லையென்றாலும் தற்போதைய போராட்டங்கள் வடக்கையும் கிழக்கையும் மீண்டும் இணைக்க வல்ல நற்காரியத்தை நிறுவப் போகின்றது என்பதையும் நாம் உணர்ந்து இவ்வகையான போராட்டங்களுக்கு எமது ஆதரவை வழங்கவேண்டும்

# துடிப்போடு தமிழ்த் தொண்டாற்றிய கனடா சுப்பிரமணியம் சிவநாயகமூர்த்தி அவர்கள்

## *உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம் விடுத்துள்ள அனுதாபச் செய்தி*



கனடாவில் கடந்த ஜனவரி 2021, 30ம் திகதி காலமான முன்னாள் கல்வி அதிகாரி சுப்பிரமணியம் சிவநாயகமூர்த்தி அவர்கள் கனடாவில் கடந்த பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்ததோடு பல சமூக, பண்பாடு மற்றும் தமிழ் மொழி சார்ந்த அமைப்புக்களோடும் தன்னை இணைத்துக் கொண்டு எமது மொழிக்காகவும் இனத்திற்காகவும் சேவையாற்றியவர். எப்போதும் மிகுந்த துடிப்போடு இயங்கிவந்த அவரது இழப்பு கனடிய தமிழ்ச் சமூகத்திற்கு மட்டுமல்ல, உலகெங்கும் கிளைகளைக் கொண்டியங்கும் எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

இவ்வாறு கனடாவில் இயங்கிவரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமை-யகம் வெளியிட்டு அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

திடீர் மறைவுற்ற சுப்பிரமணியம் சிவநாயகமூர்த்தி அவர்கள் யாழ்ப்பாணம் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது கல்வியை பூர்த்தி செய்து கொண்ட பின்னர் ஆசிரியப் பணியில் தன்னை இணைத்துக் கொண்ட அவர் இலங்கையின் பல பகுதிகளிலும் ஆசிரியராகவும் அதிபராகவும் பின்னர் பதவி உயர்வு பெற்று வட்டாரக் கல்வி அதிகாரியாகவும் பணியாற்றினார். அப்போது தனது நிர்வாகத்தின் கீழ் இருந்த பல பாடசாலைகளின் முன்னேற்றத்திற்காகவும் ஆசிரிய ஆசிரியைகளின் நலன்களுக்காவும் அருஞ்சேவையாற்றியவர் என்பது இங்கு குறிபிடத்தக்கது.

தொடர்ந்து 30 வருடங்களுக்கு முன்னர் கனடாவிற்கு குடியேறிய அவர் அந்த நாட்டிலும் பாடசாலைகளின் தமிழ் கற்பிக்கும் ஆசிரியராக இணைந்தார். பின்னர் பல அமைப்புக்களோடு இணைந்து பணியாற்றினார். கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவராக சில ஆண்டுகள் பணியாற்றிய அவர் தொடர்ந்து உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக்கிளையின் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்று பணியாற்றினார். பண்பாட்டு இயக்கத்தின் அனைத்துலக கி-ளைகளோடும் □தொடர்புகளைக் கொண்டு மிகுந்த விருப்புடன் தமிழ்ப் பண்பாட்டுப் பணியில் ஈடுபட்டு வந்த அமர் சுப்பிரமணியம் சிவநாயகமூர்த்தி அவர்களின் இழப்பினால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அகிலத் தலைவர் திரு வினாசித்தம்பி துரைராஜா, அகில அமைப்பின் செயலாளர் நாயகம் திரு துரை கணேசலிங்கம், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் வட அமெரிக்கப் பிரிவின் தலைவர் திரு சிவா கணபதிப்பிள்ளை, உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளையின் தலைவர் திரு ஆர். என். லோகேந்திரலிங்கம் ஆகியோர் கையெழுத்திட்ட அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஹாங்காங்லிருந்து குடிவரவாளர்களை கனடாவுக்கு அழைக்கும் திட்டங்களை கனடிய குடிவரவு அமைச்சர் அறிவித்தார்

ஹாங்காங் தேசத்திலிருந்து குடிவரவாளர்களை கனடாவுக்கு அழைக்கும் புதிய திட்டங்களை கனடிய குடிவரவு அமைச்சர் நேற்று முன்தினம் அறிவித்தார் கனடாவையும் ஹாங்காங்கையும் இணைக்கும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் பட்டதாரிகளையும் தொழில் தேர்ச்சிபெற்ற தொழில்நுட்பவியலாளர்களையும் கனடாவில் குடியமர்த்த ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் கனடிய குடிவரவு அமைச்சர் மார்கோ மென்டிசினோ அறிவித்துள்ளார்.

கனடாவின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் வாழ்க்கையில் பெரும் பங்களிப்பை முதன் முதலாக வழங்கியவர்கள் வழங்கியவர்கள் ஹாங்காங்கில் வசிப்பவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது என்றும் அமைச்சர் கூறியுள்ளார். அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் குறிப்பாக 150 ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் இங்கு வந்தனர். கனடா தொடர்ந்து ஹாங்காங் மக்களுடன் தோளோடு தோள் நிற்கிறது, மேலும் புதிய தேசிய பாதுகாப்புச் சட்டம் மற்றும் அங்கு மோசமடைந்து வரும் மனித உரிமை நிலைமை குறித்து ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது. இந்தப் பின்னணியில், நவம்பர் 2020 இல், குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் மார்கோ ஈ. எல். மெண்டிசினோ, அதிகமான ஹாங்காங் குடியிருப்பாளர்கள் கனடாவுக்கு வர உதவும் பல புதிய முயற்சிகளை அறிவித்தார்.

இந்த அறிவிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

இன்று, பிப்ரவரி 8, 2021 முதல் ஹாங்காங் குடியிருப்பாளர்கள் புதிய திறந்த விசா பெற்று பணி அனுமதிகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என்று அமைச்சர் மெண்டிசினோ அறிவித்தார். 3 ஆண்டுகள் வரை செல்லுபடியாகும், இந்த அனுமதிகள் ஹாங்காங் குடியிருப்பாளர்கள் மதிப்புமிக்க வேலைவாய்ப்பு அனுபவத்தைப் பெறவும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கவும் அனுமதிக்கும் கனடா. ஹாங்காங்கில் வசிப்பவர்கள் கடந்த 5 ஆண்டுகளில் கனேடிய பிந்தைய இரண்டாம் நிலை டிப்ளோமா அல்லது பட்டம் பெற்றிருக்க வேண்டும், அல்லது அதற்கு சமமான வெளிநாட்டு நற்சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். டிப்ளோமா திட்டம் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் இருக்க வேண்டும்.



தற்போது கனடாவில் உள்ள ஹாங்காங் குடியிருப்பாளர்கள், பார்வையாளர்கள், மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் உட்பட அனைவரும் தற்காலிகமாக கனடாவிலிருந்து இணைய வழி ஊடாக விண்ணப்பிக்கலாம். வெளிநாட்டிலிருந்து விண்ணப்பிப்பவர்கள் தற்போதைய பயணக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இருக்கிறார்கள், அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை அல்லது பயண விலக்கு அளிக்கப்படாவிட்டால் மற்றும் அனைத்து பொது சுகாதாரத் தேவைகளுக்கும் இணங்காத வரை இந்த நேரத்தில் கனடாவுக்கு வர முடியாது.

திறந்த பணி அனுமதிகளுக்கு மேலதிகமாக, இளம் ஹாங்காங் குடியிருப்பாளர்களுக்கு நிரந்தர வதிவிடத்திற்கான பல வழிகளை கனடா அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது, இது இந்த ஆண்டின் பிற்பகுதியில் அறிவிக்கப்படும். முதலாவது கனடாவில் குறைந்தது 1 வருட பணி அனுபவம் மற்றும் மொழி மற்றும் கல்வி அளவுகோல்களை பூர்த்தி செய்யும் ஹாங்காங் குடியிருப்பாளர்களுக்கு கனடாவில் நிரந்தர வதிவிடத்திற்கு நேரடியாக விண்ணப்பிக்க முடியும். இவ்வாறு கனடிய குடிவரவு அமைச்சரின் புதிய அறிவிப்பு தெரிவிக்கின்றது.

# வீடுகளை விட பாடசாலைகளே தற்போது பாதுகாப்பு அதிகம் நிறைந்த இடமாக விளங்குகின்றது

## ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் கூறுகின்றார்



"தற்போதைய நோயின் தாக்கம் நிறைந்துள்ள காலத்தில் மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு வீடுகளை விட பாடசாலைகளே தற்போது பாதுகாப்பு அதிகம் நிறைந்த இடமாக விளங்குகின்றது. எனவே தான் எமது அரசாங்கம் பாடசாலைகளில் நேரடியாக கல்வி கற்பதைத் தூண்டி வருகின்றது. எனவே பெற்றோரும் ஆசிரியர்களும் இதனை நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்".

இவ்வாறு தெரிவித்தார் கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் மாகாண கல்வி அமைச்சர். நேற்று பிற்பகல் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பல் மொழி ஊடகங்களின் பிரதிநிதிகளையும் பத்திரிகை ஆசிரியர்களையும் இணையவழி ஊடாக சந்தித்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் இந்த ஊடகச் சந்திப்பின் இணைப்பாளராக விளங்கினார்.



அங்கு அமைச்சர் மேலும் பேசுகையில், எமது மாகாண முதல்வரின் தலைமைத்துவத்தின் கீழ் நான் மாகாணத்தின் கல்வி அமைச்சர் என்ற வகையில் எனது பணிகளைச் செய்துவருவதில் மகிழ்ச்சியடைகின்றேன. தற்போது நாம் திறந்து வைத்துள்ள பாடசாலைகளில் 10 இல் 8 பாடசாலைகள் எவ்விதமான நோய்த் தொற்றும் இன்றி பாதுகாப்பாக உள்ளன. எமது பாடசாலைகளின் மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஏனைய பணியாளர்களையும் கவனிக்க வைத்திய தாதிகள் கடமையாற்றுகின்றனர். எனவே நாம் அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்துள்ளோம். மாணவர்களுக்கு பாதுகாப்பானதும் உறுதியானதுமான முகக் கவசங்களை வழங்குகின்றோம். நாமும் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளின்படியே நடக்கின்றோம்.

பள்ளிச் சூழலை கோவிட்-19 நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு ஒன்றாரியோ அரசு மேலதிக நிதியினை வழங்குகிறது. அத்துடன் புதிய ஏற்பாடுகளாக பல விடயங்களை அறிமுகம் செய்துள்ளோம். இவை மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்தோடு தான் அறிமுகம் செய்யப்படுகின்றன.

கனடிய மத்திய அரசின் கோவிட்-19 தொற்றிலிருந்து பள்ளிச் சூழலைப் பாதுகாக்கும் திட்டத்தின் கீழ், ஒன்றாறியோ அரசாங்கம் மேலதிகமாக 381 மில்லியன் டொலர்களை வழங்குகிறது. இந்நிதியானது, பாடசாலைகளின் உள்ளே சுத்தமான காற்றோட்ட வசதிகளைச் செய்யவும், இணையவழிக் கற்றலுக்கான ஆதரவினை வழங்கவும், மாணவர்களின் உளநலத்தை மேம்படுத்தவும், மேலதிகமான பணியாட்களை நியமிக்கவும் பயன்படுத்தப்படும். பள்ளிகளுக்கு வழங்கப்படும் 1.6 பில்லியனுக்கும் அதிகமான இப்புதிய நிதியுதவி மூலம், மாணவர்கள், ஊழியர்கள் ஆகியோரின் குடும்பங்கள் பாதுகாக்கப்படும்.

பெப்ரவரி 08, 2021 முதல் ஒன்றாறியோவின் பல பகுதிகளில் 520,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் நேரில் பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்கவுள்ளனர். மீளவும் கல்விக்கூடங்களை ஆரம்பிப்பதற்கு ஏதுவாகவும், மாணவர்கள் மற்றும் கல்விப் பணியாளர்களின் பாதுகாப்புக் கருதியும், நிபுணர்களின் அறிவுரைகளின் அடிப்படையில் பின்வரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒன்றாரியோ அறிமுகப்படுத்தியுள்ளது:

- 1 முதல் 3ஆம் வகுப்பு வரையான மாணவர்களுக்கு வகுப்பறையிலும், போதியளவு தனி மனித இடைவெளியைப் பேண முடியாத பாடசாலையின் வெளிப்புறங்களிலும் முகக்கவசம் அணிதலை கட்டாயமாக்குதல், மேல்நிலை மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கான பரிசோதனைகளை அதிகப்படுத்துதல், பாடசாலை ஆரம்பிக்கும் முன்பு மாணவர்கள் ஒன்றாக உள்ளே செல்வது, பாடசாலை முடிந்த பின் மாணவர்கள் ஒன்றாக வெளியேறுவது போன்றவற்றைத் தவிர்த்து புதிய வழிமுறைகளைக் கொண்டுவருதல், தற்போதைய சூழலில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் தட்டுப்பாட்டை சமாளிக்க, 2021ஆம் ஆண்டில் ஆசிரியப் பட்டப்படிப்பை நிறைவு செய்யவிருக்கும் தகுதியானவர்களுக்கு தற்காலிக சான்றிதழ்களை வழங்கி பணிக்கமர்த்துதல்.

# சுகாதாரத் துறைக்குச் செய்வது செலவல்ல. அது ஒரு முதலீடு என்கிறது "இந்து" பத்திரிகை

இந்தியாவின் முதல் கொரோனா நோய்த்தொற்று கண்டறியப்பட்டு ஓராண்டு நிறைவுபெற்றிருக்கும் வேளையில் இந்த ஓராண்டும் இந்தியாவுக்கு எவ்வளவு சோதனை மிகுந்த காலகட்டமாக இருந்தது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. இதுவரை சுமார் ஒரு கோடியே 7 லட்சத்து 36 ஆயிரம் பேருக்கு இந்தியாவில் கொரோனா தொற்று ஏற்பட்டு ஒரு லட்சத்து 54 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இவையெல்லாம் பதிவுசெய்யப்பட்டவை. பதிவுசெய்யப்படாத தொற்றுகளையும் மரணங்களையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கைகள் இன்னும் கூடுதலாக இருக்கவே வாய்ப்புள்ளது.

இந்தியாவுக்கு முன்னுதாரணமில்லாத வகையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கொரோனா நம் பலவீனங்கள் பலவற்றையும் வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளது.

மிக முக்கியமாக சுகாதாரத் துறைக்கு இந்தியா எந்த அளவுக்கு முக்கியத்துவம் தருகிறது என்ற கேள்வி எழுந்துள்ளது. எவ்வளவு பலவீனமாக இருந்தாலும் சுகாதாரத் துறையானது தனது மருத்துவர்கள் செவிலியர்கள் தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட ஊழியர்களைக் கொண்டு இந்தப் பெருந்தொற்றுக் காலகட்டத்தைத் திறம்படச் சமாளித்ததை ஒருபக்கம் பாராட்டியாக வேண்டும்.

என்றால் இன்னொரு பக்கம் சுகாதாரக் கட்டமைப்புக்கு அரசு எந்த அளவுக்குச் செலவிடுகிறது என்பதையும் பார்க்க வேண்டும். 2018-2019-ல் சுகாதாரத் துறைக்கு இந்திய அரசு தனது மொத்த செலவினத்தில் 4.5 சத வீதம் மட்டுமே செலவிட்டிருக்கிறது இது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.3 சத வீதம் ஆகும்.

இந்தோனேஷியா, சீனா, பிரேசில் போன்ற நாடுகள் தங்கள் நிதிநிலை அறிக்கையில் 7 சத வீதத்தில் இருந்து - 10 சத வீதம் வரை சுகாதாரத்துக்குச் செலவிடுகின்றன. சுதந்திரத்துக்குப் பிறகு சுகாதாரத்தின் மீதான இந்திய அரசின் உதாசீனமான போக்கையே இது வெளிப்படுத்துகிறது.

இந்தியாவில் கிட்டத்தட்ட 80 கோடி ஏழைகளும் 30-35 கோடி நடுத்தர வர்க்கத்தினரும் வாழ்கிறார்கள். இவர்கள் குடும்பத்தில் ஒருவருக்குப் புற்றுநோய் இதயநோய் உள்ளிட்ட செலவு அதிகம் பிடிக்கும் கொடிய நோய்கள் ஏற்பட்டால் அந்தக் குடும்பத்தின் பொருளாதார நிலையே செயலிழந்துபோகும் நிலைதான் காணப்படுகிறது. அரசு மருத்துவமனைகளில் மேல்சிகிச்சை இல்லாமல் போகும்போது பலரும் தனியார் மருத்துவமனைகளையே நாட வேண்டியுள்ளது. எத்தனையோ அரசு மருத்துவமனைகள் இருந்தாலும் இந்தியாவில் ஒவ்வொரு குடும்பமும் தனது ஒட்டுமொத்த மருத்துவச் செலவில் 60 சத வீதம் வரை தங்கள் கையிலிருந்துதான் செலவுசெய்ய வேண்டியிருக்கிறது என்று ஒரு கணக்கு சொல்கிறது.

இந்தியா சுகாதாரத் துறைக்குச் செய்வதை செலவு என்று நினைக்கக் கூடாது வளமான முதலீடு என்றே நினைக்க வேண்டும். ஏனெனில் ஆரோக்கியமான ஒரு நபரின் உற்பத்தித் திறன் கணிசமான அளவு அதிகமாக இருக்கிறது. அதேபோல் ஆரோக்கியமான குழந்தைகள் படிப்பிலும் விளையாட்டுகளிலும் நன்கு கவனம் செலுத்துகின்றன. ஆகவே கொரோனா காலத்துக்குப் பின் ஒன்றிய அரசானது பெற்ற விழிப்புணர்ச்சியைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்வதோடு இந்திய மருத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்குத் தனது நிதிநிலை அறிக்கையில் இதுவரை ஒதுக்குவதைவிட இரண்டு மடங்குக்கும் மேல் ஒதுக்க வேண்டும். அப்போதுதான் கரோனா பெருந்தொற்றையும் சரி... அது போன்ற எதிர்கால அச்சுறுத்தல்களையும் சரி நம்மால் உறுதியாக எதிர்கொள்ள முடியும்.

# இலங்கையில் கொரோனா தொற்றினால் வைத்தியர் ஒருவர் உயிரிழந்தார்

இலங்கையில் ராகம வைத்தியசாலையில் சேவையாற்றிய இளம் வைத்தியர் ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

32 வயதுடைய கஜன் தந்தநாராயண என்ற வைத்தியரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்த முதலாவது வைத்தியர் இவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் காலியில் உள்ள கராபிட்டி வைத்தியசாலையில் ஒரு வாரமாக தீவிர சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இன்று காலை உயிரிழந்துள்ளார் என அரச மருத்துவ அதிகார சங்கத்தின் மருத்துவர் ஹரிதா தெரிவித்துள்ளார். திருமணமான இவர் கராபிட்டி போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்துள்ளார்.

கொரோனா தொற்றிய நிலையில் முல்லேரியா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் பின்னர் கராபிட்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

நுகேகொடை லைசியம் சர்வதேச பாடசாலையில் கல்வி கற்ற கயான் தந்தநாராயண சீனாவின் ரியான்ஜின் மருத்துவ பல்கலைக்கழகத்தில் தனது மருத்துவ கற்கையை நிறைவு செய்து இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வைத்தியராக தெரிவானார். அதனைத் தொடர்ந்து ராகமை போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த அவர் கொரோனா தொற்றுக்குள்ளானார்.

அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிலருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொவிட்-19 தொற்றுடன் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட இவரது நோய் நிலை உக்கிரமடைந்ததைத் தொடர்ந்து கராபிட்டிய வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் மரணமடைந்துள்ளார்.

கொவிட்-19 தொற்று காரணமாக இலங்கையில் இதுவரை 323 மரணங்கள் பதிவான நிலையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இவரது மரணத்தை அடுத்து இதுவரை இலங்கையில் 324 கொரோனா மரணம் பதிவாகியுள்ளது.

# மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை உரிய நேரத்தில் பதிலளிக்கும் என்கிறார் கெஹலிய



- நல்லாட்சி அரசாங்கத்தின் இணை அனுசரணையில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனையை திருத்தி அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

மனித உரிமைகளை மீறியதாக இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்கு ஆற்றல் இருப்பதாகவும் இதுதொடர்பில் வழங்கப்பட வேண்டிய பதில் உரிய நேரத்தில் வழங்கப்படும் என்றும் அமைச்சரவை பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

2010 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் இராணுவம் தொடர்பில் அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அப்போது இருந்த எமது அரசாங்கத்தின் நிலைபாடு மிகவும் தெளிவாக முன்வைக்கப்பட்டது.

எமக்கிடையில் பல உடன்பாடுகள் ஏற்பட்டன. இறுதியாக 2015 ஆம் ஆண்டு அரசாங்கம் மாற்றமடைந்தது அப்பொழுது இருந்த வெளிநாட்டு அமைச்சரினால் 30⁄.1 என்ற ஆலோசனைக்கு அமைய இணைய அனுசரணையுடன் நாம் தவறு செய்ததாக பிரேரணை சமர்பிக்கப்பட்டது. அதன் பெறுபேரையே நாம் அனுபவிக்கின்றோம் என்று அமைச்சர் கூறினார்.

அப்போதைய நிர்வாகத்தில் இருந்த அமைச்சர் திலக் மாறப்பன தமது உரையில் இந்த ஆலோசனை நாட்டின் அரசியல் அமைப்புக்கு முரண்பட்டது என்றும் அதே போன்று மீண்டும் தெரிவான எமது அரசாங்கத்தின் வெளிநாட்டு அரசாங்கத்தின் அமைச்சர் தினேஸ் குணவர்தனவினால் உத்தியோகபூர்வமாக தெரிவிக்கப்பட்டது.

இதில் இருந்து விலகுவது சரியானது என்பதை விரிவாக தெரிவிக்க எதிர்பார்ப்பதாகவும் இதுதொடர்பில் விரிவான வகையில் விடயங்களை சமர்பிக்க முடியும் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான யோசனையை அரசாங்கம் முற்றாக நிராகரித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அடிப்படை அற்றவை என்றும் ஒன்றுக்கொன்று முரணானவை என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் இணை அனுசரணையில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனையை திருத்தி அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

# இந்தியாவை எப்போதும் விமர்சிக்கும் விமல் வீரவன்ச கொழும்பு துறைமுக விடயத்தில் ஆதரவு

ஒரு குழப்பவாதியாகவும் இனவாதியாகவும் தன்னைக் காட்டிக்கொண்டு வரும் இலங்கை அரசியல்வாதியும், அமைச்சருமான விமல் வீரவன்ச கொழும்பு துறைமுக மேற்கு முனையத்தை இந்தியா வழங்கும் விடயத்தில் தனது ஆதரைவைக் காட்டியுள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் இந்தியா அல்லது வேறு நாடுகள் மேற்கிந்திய தீவுகளுடன் இணைந்து அபிவிருத்தி செய்தாலும் அதில் பிரச்சினை இல்லை என்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "அதற்கான அனுமதியை கடந்த தேர்தலில் 69 லட்சம் மக்கள் வழங்கியுள்ளார்கள்" என்று குறிப்பிட்டு, அரசியல்வாதிகளை தப்பிக்க வைக்கும் வகையில் கருத்துரைத்துள்ளார்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் தனியார் துறை அல்லது வேறு தரப்புடன் இணைந்து மேற்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய முடியும் எனவும் குழப்பவாதியான அமைச்சர் விமல் வீரவன்ச மேலும் அந்த விவகாரத்தை நியாயப்படுததியுள்ளார்.

# தெற்காசியாவில் இந்தியாவில்தான் கொரோனா காரணமாக அதிக மருத்துவர்கள் பலி: மொத்தம் 162

இந்தியாவில் கொரோனாவைரஸ் பாதிப்பால் 162 மருத்துவர்கள், 107 செவிலியர்கள், 44 ஆஷா பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர் என மாநிலங்களவையில் இந்திய மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

கொரோனாவைரஸால் இந்தியாவில் எத்தனை மருத்துவர்கள் சுகாதாரப் பணியாளர்கள் உயிரிழந்தனர் என்று மாநிலங்களவையில் இன்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் அஸ்வினி குமார் சவுபே பதில் அளித்தார்.

அவர் கூறுகையில், ஜனவரி 22-ம் தேதிவரை கிடைத்த புள்ளிவிவரங்களின் அடிப்படையில் இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பால் 162 மருத்துவர்கள் 44 ஆஷா பணியாளர்கள் 107 செவிலியர்கள் உயிரிழந்துள்ளனர்.

அதேசமயம் இந்திய மருத்துவ அமைப்பு கொரோனா வைரஸ் பாதிப்பால் உயிரிழந்த மருத்தவர்கள் எண்ணிக்கை குறித்தும் சுகாதாரப் பணியாளர்கள் குறித்த எண்ணிக்கையையும் தெரிவித்துள்ளது. அதுகுறித்தும் கவனத்தில் கொள்ளப்படும். பிரதான் மந்திரி கரீப் கல்யான் திட்டம் மூலம் இழப்பீடு தொகை வழங்கப்படும். உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள் உயிரிழந்தது குறித்து மாநில அரசு அல்லது மத்திய அரசு சான்று மருத்துவர்கள் சான்று பணிபுரிந்த இடம் அலுவலகம் ஆகியவை குறித்த சான்றுகள் இழப்பீடு பெறுவதற்கு அவசியம் எனத் தெரிவித்தார்.

தெற்காசியாவில் கொரோனாவில் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு லட்சம் பேருக்கு உயிரிழந்தவர்களில் இந்தியாவில்தான் அதிகம். அதற்கான காரணம் குறித்துக் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு மத்திய இணையமைச்சர் அஸ்வினி குமார் பதில் அளிக்கையில் தெற்காசிய நாடுகளான வங்கதேசம் இலங்கை பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் கொரோனாவில் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களோடு இந்தியாவை ஒப்பிடுவது சரியல்ல. அந்த நாடுகளின் பூகோள அமைப்பு இயற்கைச் சூழல் மக்கள் நெருக்கம் பரிசோதனை மக்கள் அடர்த்தி ஆகியவை வேறுபடும்.

இலங்கை வங்கதேசம் பாகிஸ்தான் ஆகிய நாடுகளோடு இந்தியாவில்கொரோனாவில் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்கள் அதாவது ஒரு லட்சம் பேர் பாதிக்கப்பட்டதில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை இந்தியாவில் அதிகம்தான். உலக நாடுகளோடு ஒப்பிடும்போது இந்தியாவில் கொரோனாவில் பாதிக்கப்பட்டதில் உயிரிழப்பு மிகவும் குறைவான நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும் எனத் தெரிவித்தார்.

# பேரறிவாளன் உட்பட ஏழு பேர் விடுதலை தொடர்பாக தொடர்ந்தும் தடுமாறும் தமிழக ஆளுனர் பன்வாரிலால்




ராஜீவ் கொலை வழக்கு சந்தேக நபர்களான பேரறிவாளன் உட்பட்ட ஏழு தமிழர்கள் விடுதலை விவகாரத்தில் தமிழ்நாடு ஆளுநர் பன்வாரிலால் முடிவு எடுக்காத நிலையில் எதிர்வரும் 9-ந் திகதி இது தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 7 தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பது தமிழக அரசு நிலைப்பாடு ஆகும்.

இது தொடர்பான அமைச்சரவைத் தீர்மானத்தை 3 ஆண்டுகளாக கிடப்பில் வைத்திருக்கிறார் தமிழக ஆளுநர் பன்வாரிலால். இதற்கு எதிராக பல்வேறு போராட்டங்களும் நடத்தப்பட்டன. ஆனாலும் ஆளுநர் தரப்பில் பல்வேறு விளக்கங்கள்தான் தரப்பட்டன. உச்சநீதிமன்றமும் இந்த விவகாரத்தில் தலையிட்டது.

12 நாட்களில் ஆளுநர் முடிவெடுத்தாக வேண்டும் என உச்சநீதிமன்றம் கெடுபிடி காட்டியது. ஆனாலும் தமிழக ஆளுநர் தரப்பில் இருந்து எந்த முடிவும் எடுக்கப்பட்டதாக இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை. சட்டசபையில் நேற்று பேசிய முதல்வர் எடப்பாடி பழனிசாமியும், ஆளுநர் விரைவில் நல்ல முடிவை எடுப்பார் என்று மட்டும் கூறியிருந்தார்.

இந்நிலையில் 7 தமிழர்கள் விடுதலை தொடர்பாக பேரறிவாளன் தொடர்ந்த வழக்கு விசாரணை உச்சநீதிமன்றத்தில் எதிர்வரும் 9-ம் திகதியன்று நடைபெற உள்ளது. அன்றைய தினம் உச்சநீதிமன்றம் 7 தமிழர் விடுதலையில் முக்கிய உத்தரவுகளை பிறப்பிக்குமா என்பது தமிழகத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடியும் என்கிறது உலக சுகாதார அமைப்பு

- கட்டுப்பாடுகளை துரித கதியில் தளர்த்துவது கொரோனா வைரஸ் மீண்டும் முழு பலத்துடன் திரும்புவதற்கு வழிவகுத்து விடும்.

ஜெனீவா சர்வதேச அளவில் புதிய கொரொனா பாதிப்புகள் குறைந்து வருவது அந்நோய்த்தொற்று பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என காட்டுவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் பொது இயக்குநர் டெட்ரோஸ் ஆதனோம் கெப்ரியேசஸ் இது தொடர்பாக கூறியதாவது: தொடர்ந்து மூன்றாவது வாரமாக புதிய கொரோனா பாதிப்புகள் சர்வதேச அளவில் குறைவாக பதிவாகி வருகிறது. சில நாடுகளில் கொரோனா பாதிப்பு அதிகரித்து காணப்பட்டாலும் உலகளாவிய அளவில் பார்க்கும் போது ஊக்கபடுத்தும் வகையிலான செய்திகளை காண முடிகிறது.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை இது காட்டுகிறது. உருமாறிய கொரோனா பரவினாலும் கூட கொரோனாவை கட்டுப்படுத்த முடியும் என நமக்கு கடந்த 3 வார எண்ணிக்கை பரிந்துரைக்கிறது“என்றார். அதேவேளையில் கட்டுப்பாடுகளை துரித கதியில் தளர்த்துவது கொரோனா வைரஸ் மீண்டும் முழு பலத்துடன் திரும்புவதற்கு வழிவகுத்து விடும் எனவும் எச்சரித்துள்ளார்.

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் 55ஆவது மாநாடு 2022ல் இலங்கையில் நடைபெறும்

ADB ASIAN DEVELOPMENT BANK

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 55 ஆவது வருடாந்த மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு வங்கியின் நிர்வாகசபை அனுமதி வழங்கியுள்ளது. எதிர்வரும் 2022ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதிவரை குறித்த மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது.

இதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன் இந்த மாநாடு தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்க, ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

# மியான்மர் ராணுவத்தின் செயலுக்கு ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் தெரிவித்துள்ளது

மியான்மர் ராணுவத்தின் நடவடிக்கைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அன்டோனியோ குட்டரெஸ் வெளியிட்ட அறிக்கையில் ஆங் சான் சூச்சி ஜனாதிபதி யுவின் மைன்ட் மற்றும் பிற அரசியல் தலைவர்களைத் தடுத்து வைத்திருப்பது கண்டிக்கத்தக்கது. ராணுவத்தின் இந்த நடவடிக்கையால் மியான்மரின் ஜனநாயக சீர்திருத்தங்கள் அடிபட்டுள்ளன என்று தெரிவித்தார்.

மியான்மர் அரசை திங்கட்கிழமையன்று அந்நாட்டு ராணுவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. மேலும் அந்நாட்டின் தலைவர் ஆங் சான் சூச்சி கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் அடைக்கப்பட்டுள்ளார். தலைநகரிலிருந்து தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும் அவசர நிலையையும் ராணுவம் அங்கு அமல்படுத்தியுள்ளது. ஒரு வருடத்திற்கு மியான்மர் ராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் நடந்த தேர்தல் முறைகேடு காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மியான்மர் ராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பரில் நடந்த தேர்தலில் ஆங் சான் சூச்சி தலைமையிலான ஜனநாயகக் கட்சி பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியது. இத்தேர்தலை மியான்மர் ராணுவம் தொடர்ந்து விமர்சித்து வந்த நிலையில் தற்போது ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

மியான்மர் ராணுவத்தின் இந்த நடவடிக்கையை அமெரிக்கா ஆஸ்திரேலியா பிரிட்டன் ஆகிய நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. மேலும் சட்டத்தை மதித்து நடக்கும்படியும் தெரிவித்துள்ளன.



# ஸ்ரீலங்கா சுதந்திரதினம் தமிழின அழிப்பு துவங்கிய நாள்

1948ஆம் ஆண்டு சிலோன் என்று அழைக்கப்பட்ட ஸ்ரீலங்காவுக்கு பிரித்தானியர்கள் சுதந்திரம் வழங்கினர். ஆனால் அன்றைய நாள் ஈழத் தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா அரசால் இன்னொரு காலனித்துவ அரசாக அடிமை கொண்ட நாளாகும். அத்துடன் அந்த நாளில் இருந்தே தமிழின அழிப்பும் துவங்கப்பட்டது. ஈழத் தமிழ் மக்களாகிய எம்மைப் பொறுத்தவரை எம்மை புறக்கணித்த, எம்மை ஒடுக்கிய, எம்மை இன அழிப்பு செய்கின்ற திட்டமிட்ட செயல்களால் இந்த நாள் கரி நாளாகிறது. சிங்கள இனத்திற்கு சுதந்திர தினமாகவும் இன்னொரு இனமாகிய ஈழத் தமிழர்களுக்கு இந்த தினம் துக்க தினமாகவும் அமைகிறது.

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு அரச செயலகங்களில் மாத்திரம் அநாதரவாக சிங்கக் கொடிகள் பறப்பதை காணலாம். அத்தோடு இராணுவ முகாங்களிலும் சிங்கக் கொடிகள் பறக்கின்றன. ஒரு தமிழ் குடியானவரின் வீட்டிலும் இந்தக் கொடியைக் காணமுடியவில்லை. வவுனியாவை தாண்டி சென்றால் மதவாச்சியிலிருந்து சிங்கக் கொடிகள் பறப்பதைக் காணலாம். ஏன் தமிழ் நிலத்தில் தமிழ் குடியானவரால் ஒரு இலங்கைக் கொடியும் ஏற்றப்படவில்லை? இந்தக் கேள்வியும் அதற்கான விடையும் இந்த தீவின் பிரச்சினையையும் அதற்கான தீர்வையும் பதிலுத்துபவை.

தமிழில் இலங்கை தேசிய கீதத்தை பாடலாம் என்று ஸ்ரீலங்காவின் முன்னைய ஆட்சியாளர்கள் சொன்ன போது இன்றைய பிரதமர் மகிந்த ராஜபக்ச அதனை எதிர்த்தார். இப்போது அந்தக் கதை ஏதுமில்லை. ஆட்சியை கைப்பற்றுகிற வரை தமிழ் தேசிய கீதம் சிக்கலாக இருந்தது. வடகிழக்கு மக்களின் சுதந்திரத்தை மறுத்துக்கொண்டு அவர்களின் உரிமைகளை பேரினவாதத்திற்குள் குவித்துக் கொண்டு, கடந்த காலத்தில் நடந்த அநீதிகளுக்கு நீதியை வழங்காமல் மேற்கொண்ட குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறாமல் இலங்கை தேசிய கீதத்தை சிங்களத்தில் படித்தால் என்ன? தமிழில் படித்தால் என்ன?

இலங்கை தேசிய கீதத்தில் என்ன சொல்லப்படுகிறது என்பதை அறியாதபோதும் அது எப்படிப்பட்ட செயல்களின்போது இசைப்படுகிறது என்பதால் அதை வெறுத்தோம். எதுவுமே சமத்துவமற்ற நாட்டில் சமத்துவம் விளங்குவதைப்போல் ஒரு தேசிய கீதத்தை படிப்பதே ஒடுக்குமுறையை மறைக்கும் உத்தி. அதனால் தனித் தேசத்திற்காக போராடிய தமிழ் மக்கள் சிங்கள தேசிய ஒற்றை ஆட்சியின் தேசிய கீதத்தை பாட மறுத்தனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் பிறந்து வளர்ந்த வேளையில் வருடா வருடம் தரப்ப்படும் சிறிலங்கா அரச பாடப்புத்தகங்களில் உள்ள தேசியகீதத்தை ஒருபோதும் நான் படித்ததில்லை. யாரும் அது குறித்து எதுவும் கூறவில்லை.

நாங்கள் அந்தப் பாடலை பாட மறுத்தோம். ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த இனப்படுகொலை யுத்தத்தின் பின்னர் அழிக்கப்பட்ட எங்கள் இனத்தின்மீது வெற்றிப்பாடலாக ஒலித்ததும் இந்த தேசிய கீதமே. இன்றைக்கு முள்ளிவாய்க்காலின் பின்னர் சில அரச நிகழ்வுகளில் இலங்கை தேசிய கீதம் இசைப்படுகிறது. ஒரு நாட்டின் தேசிய கீதம் என்பது அரச நிகழ்வுகளில் மாத்திரம் இசைக்கப்படுவதல்ல. அது மக்களின் நெஞ்சில் இசைக்கப்படுவது. தமிழ் மக்களின் நெஞ்சில் அந்நியமான பாடலை தமிழில் இசைத்தால் என்ன? சிங்களத்தில் இசைத்தால் என்ன?

ஈழத் தமிழ் மக்கள் கொத்துக்ககொத்தாக இனப்படுகொலை செய்யப்பட்டபோது அவர்களின் பிணங்களின்மீது வெற்றிக் கொடிகளாக பறந்த சிங்கக் கொடிகள் எமது தேசியகொடியாக எப்படி இருக்கும்? இந்தக் கொடியுடன்தான் எம்மீது படையெடுத்து வந்தனர். இந்தக் கொடியுடன்தான் எங்கள்மீது குண்டுகளை வீசினர். எங்களை தனது பிரஜைகளாக எங்களுக்கு சமத்துவத்தை வழங்காத கொடி எங்களை அழித்து அதன்மீது ஏற்றப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் பிரித்தானியாவிடமிருந்து விடுதலை பெற்றநாளில் ஈழத் தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாத ஆதிக்கரிடம் வீழ்ந்தனர். ஒன்றுபட்ட இலங்கையின் சுதந்திரத்திற்காக போராடிய ஈழத் தமிழ் தலைவர்கள் நாட்டை பிரித்தெடுக்காமல் முன்னேறும் வாய்ப்பை வழங்கியபோது சிங்களப் பேரினவாதிகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி ஈழத் தமிழர்களின் உரிமைகளையும் தமது ஆதிக்கத்தில் வைத்தனர்.

அப்படிப்பார்த்தால் இன்றைய நாள் ஈழத் தமிழர்கள் உரிமையை இழந்த நாள். ஈழத் தமிழர்கள் அடிமைப்படுத்தப்பட்ட நாள். இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு சுதந்திரம் மறுக்கப்பட்டதுடன் இலங்கைப் பிரஜைகள் என்பதற்கான அடையாளங்களும் மறுக்கப்பட்ட நாள். இதனால் இன்று நேற்றல்ல வரலாறு முழுவதும் இலங்கையின் சுதந்திர தினத்தை ஈழத் தமிழர்கள் ஒரு கறுப்பு நாளாகவே நினைவுகூர்ந்து வந்துள்ளனர்.

யுத்தத்தின்போது பிள்ளைகளை இழந்தவர்களுக்கும் தமது உறவுகள் காணாமல் போகச் செய்யப்பட்ட அனுபவத்தை சுமந்தவர்களுக்கும் இது சுதந்திரதினமா? இலங்கை அரச இலட்சினையை நம்பி சரணடைந்தார்கள், பலர் தமது பிள்ளைகளை கையில் பிடித்துக் கொடுத்தார்கள். அவர்களையும் காணவில்லை என்று இலங்கையின் அரசு கை விரித்தது. அன்றைக்கு கையில் கொடுத்த பிள்ளைகளை தனது பிரஜைகளாக இலங்கை அரசு கருதியிருந்தால் அவர்கள் காணாமல் போயிருப்பார்களா? கையில் கொடுத்த பிள்ளைகளை ஒரு அரசு தனது பிரஜைகளை காணாமல் போய்விட்டனர் என்று கை விரிக்குமா?

இலங்கை அரசாங்க கட்டமைப்பு ஈழத் தமிழ்மக்கள்மீது மிகவும் ஆழமான அந்நியத்தையும் அழிப்புணர்ச்சியையும் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுபோன்ற பல சம்பவங்கள் அதன் வெளிப்பாடுகளாக வரலாற்றில் நிகழ்ந்துள்ளன. இலங்கை அரசியல் கட்டமைப்பின் அடிப்படை என்பது தமிழர்களை எப்படியும் நடத்தும் அடிமையையே கொண்டிருக்கிறது. கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரத்தின தினத்தை கொண்டாடும்படியும் ஈழ மக்களை சிங்கள அரசினர் அடிமைப்படுத்தினர். மக்களை வற்புறுத்தினார். இராணுவத்தினர் எங்கள் வீடுகளிலும் கடைகளிலும் இலங்கைக் கொடியை பறக்கவிட்டனர். இராணுவத்தை வைத்து சுதந்திரதினம் கொண்டாட வற்புறுத்தி அதையும் ஒரு இராணுவ நடவடிக்கையாக செய்பவர் மகிந்த ராஜபக்ச. இங்கு சுதந்திரதினம் என்பது அடிமை தினமே.

அரச அலுவலகங்களில் மாத்திரம் கொண்டாடப்படுவது சுதந்திரதினம் அல்ல. அரச உயர் பதவிகளில் வகிப்போர் தமது இருப்பை தக்க வைக்க சிங்கக் கொடியை ஏற்றுகின்றனர். தமிழ் மக்கள் என்ற வகையில் மிகவும் ஆமான வெறுப்போடு அக் கொடியை ஏற்றும் பலரை பார்த்திருக்கிறேன். ஏற்ற மறுக்கும் அரச அதிகாரிகள் பலரும் உண்டு. அரச அலுவலகங்களில் கொடி ஏற்றுவதனால் சுதந்திரதினம் கொண்டாடப்படுகிறது என்பது மிகவும் அபத்தமானது.

சுதந்திரம் என்பது என்ன? அது உணரப்படுவது. உள்ளத்தால் கொண்டாடப்படுவது. இலங்கை சுதந்திரனத்தை கறுப்பு நாளாக கொண்டாடும் ஈழத் தமிழர்கள் தம்மை அடையாளம் செய்யாத சிங்கக் கொடியை எதிர்த்து நந்திக்கொடியையும் புலிக்கொடியையும் தங்கள் தேசிய கொடியாக ஏற்றியிருக்கின்றனர். தமிழ் தலைவர்கள் தமக்கான தேசிய கீதத்தை உருவாக்கிப் பாடியிருக்கின்றனர்.

தமிழர்களின் இனப்பிரச்சினை தீர்ந்து, அவர்களின் தாயக நிலம் விடுவிக்கப்பட்டு, இனப்படுகொலைக்கான நீதி நிலைநாட்டப்படுகிற நாள்தான் ஈழத் தமிழ் மக்களுக்கு சுதந்திர தினம். அதற்காக துப்பாக்கி ஏந்திப் போராடத் தேவையில்லை. ஈழத் தமிழர்கள் என்ற அடையாளத்துடன் எமது இருப்பை பாதுகாக்கும் அறிவுணர்வுடன் இருப்பதே பெரும் பங்களிப்பு. எங்கள் தேசம் ஒரு நாள் மலரும் என்ற நம்பிக்கையில் இந்த மண்ணில் பல்லாயிரம் வீரர்களை புதைத்திருக்கிறோம். லட்சம் உறவுகள் கொன்றழிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்காக வாழ்வதும் ஒரு உத்ததமான போராட்டமே.

# மன்னாரில் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இருசக்கர நாற்காலிகள்

- மன்னார் நிருபர் (4-1-2021)



இலங்கையின் 73வது சுதந்திர தினத்தை முன்னிட்டு முஸ்லிம் ஹேன்ட்ஸ் (Muslims Hands) நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் ஐ.எஸ்.ஆர்.ஸி (ISRC) நிறுவனத்திடம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக மாற்றுத் திறனாளிகள் 117 பேருக்கு இருசக்கர நாற்காலி வழங்கும் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக இன்று வியாழக்கிழமை (4) ஒரு தொகுதி பயனாளிகளுக்கு இருசக்கர நாற்காலி வழங்கும் நிகழ்வு மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.







இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஏ.ஸ்டான்லி டிமெல் ஐ.எஸ்.ஆர்.ஸி (ISRC) நிறுவன பணிப்பாளர் மிஹ்லார், மன்னார் மாவட்ட பிரதேசச் செயலகங்களின் பிரதேச செயலாளர்கள்,உயர் அதிகாரிகள், மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

---

# மன்னாரில் 'லட்சுமி கரங்கள்' அமைப்பினால் 21 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவி

- மன்னார் நிருபர் (4-2-2021)

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து "லட்சுமி கரங்கள்" அமைப்பினால் 21 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வியாழக்கிழமை காலை 11 மணியளவில் உதவித்திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.








மாந்தை மேற்கு பிரதேசச் செயலகத்தில், மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் எஸ். கேதீஸ்வரன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட 21 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு அமரர் "நடராசா மாஸ்டர்" குடும்பத்தின் உதவியுடன் உலர் உணவுப் பொருட்கள், சாரி, மற்றும் 1000 ரூபாய் பணம் என்பன வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், "லட்சுமி கரங்களின்" தொண்டர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சசிகலா காரில் அதிமுக கொடியை பயன்படுத்தக் கூடாது: தமிழக டிஜிபியிடம் அமைச்சர்கள், அதிமுக நிர்வாகிகள் புகார்

அதிமுக கொடியை சசிகலா பயன்படுத்துவதை எதிர்த்து, தமிழக டிஜிபி திரிபாதியிடம், டி.ஜெயக்குமார், சி.வி.சண்முகம் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் அதிமுக நிர்வாகிகள் பலர் இணைந்து புகார் அளித்துள்ளனர்.சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்று பெங்களூரு சிறையில் அடைக்கப்பட்ட சசிகலா கடந்த ஜன.27ம் தேதியன்று விடுதலை செய்யப்பட்டார்.

அப்போது கரோனா சிகிச்சைக்காக அவர், மருத்துவமனையில் இருந்தார். சிகிச்சை முடிந்த பின்னர் அவர் ஓய்வெடுக்க புறப்பட்ட போது, அதிமுக கொடியை தனது வாகனத்தில் பயன்படுத்தினார். சசிகலாவின் இந்த செயலுக்கு அதிமுக அமைச்சர்கள், நிர்வாகிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.இதற்கிடையில் அவர் வரும் பிப்.8ம் தேதி சென்னை திரும்புகிறார். அவரை வரவேற்க அமமுகவினர் பல்வேறு ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், இன்று மாலை அதிமுக அவைத்தலைவர் மதுசூதனன் தலைமையில், துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி.முனுசாமி, அமைச்சர்கள் பி.தங்கமணி, எஸ்.பி.வேலுமணி, டி.ஜெயக்குமார், சி.வி.சண்முகம் மற்றும் நத்தம் விஸ்வநாதன் ஆகியோர் டிஜிபி அலுவலகம் சென்றனர்.அங்கு டிஜிபி திரிபாதியை நேரில் சந்தித்து புகார் மனு கொடுத்தனர். அதில், அதிமுக கொடியை சசிகலா பயன்படுத்த



அனுமதிக்கக்கூடாது என்று கூறப்பட்டிருந்தது.

புகார் தொடர்பாக, அதிமுக துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி.முனுசாமி செய்தியாளர்களிடம் கூறுகையில், "அதிமுக கொடியை சசிகலா மீண்டும் பயன்படுத்தக் கூடாது என்பதை காவல்துறை மூலம் அவருக்கு தெரிவிக்கவே டிஜிபியிடம் புகார் அளித்து இருக்கிறோம்.அதிமுக கொடியை பயன்படுத்த அவருக்கு தார்மீக உரிமை இல்லை. அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் தவிர மற்றவர்கள் கொடியை பயன்படுத்தக்கூடாது. அதிமுகவில் உறுப்பினராக இருந்தால், 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அதை புதுப்பிக்க வேண்டும் என்பது விதி. அதிமுக சட்ட விதிகளின் படி, உறுப்பினர் அட்டையை சசிகலா புதுபிக்கவில்லை. எனவே அவர் அதிமுக உறுப்பினர் இல்லை. உறுப்பினராக இல்லாதவரை எதற்காக கட்சியிலிருந்து நீக்க வேண்டும்" என்றார்.

தொடர்ந்து, அமைச்சர் சி.வி.சன்முகம் கூறியதாவது:ஜெயலலிதாவின் மறைவிற்கு பிறகு இயக்கம் இரண்டாக உடைந்த நிலையில், அதிமுக அவைத்தலைவர் மதுசூதனன் சார்பில் தேர்தல் ஆணையத்தில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், 'அதிமுகவின் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட சசிகலா மற்றும் துணைப் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட தினகரன் ஆகியோர் நியமனத்தை செல்லாது என அறிவிக்க வேண்டும். முதல்வர் பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அவைத்தலைவர் மதுசூதனன் ஆகியோர் தலைமையிலான அணிக்கே இரட்டை இலை சின்னம் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. தேர்தல் ஆணையமும் இதை ஏற்றுக் கொண்டு, முதல்வர் பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அவைத்தலைவர் மதுசூதனன் தலைமையிலான அணிக்கே இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கியது.

தேர்தல் ஆணையத்தின் முடிவை உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் உறுதி செய்துள்ளது. நீதிமன்றத்தில் இந்த வழக்கு நடைபெற்று கொண்டு இருக்கும்போதே அதிமுகவுக்கும் எனக்கும் தொடர்பு இல்லை எனக்கூறி தினகரன் தனிக்கட்சி ஆரம்பித்து விட்டார்.உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் சசிகலாவின் வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், இனிமேல் அவர்கள் ஐநாசபையில் தான் புகார் கொடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# நளினியைச் சந்திக்க அனுமதிக்க வேண்டும் : சிறைத்துறை நிர்வாகத்திடம் முருகன் மனு



சிறையில் விதிக்கப்பட்ட தடைகளை ரத்து செய்ய வேண்டும், நளினியைச் சந்தித்துப் பேச அனுமதி வழங்க வேண்டும் என சிறைத்துறை நிர்வாகத்திடம் முருகன் மனு அளித்துள்ளார்.முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற முருகன் வேலூர் ஆண்கள் மத்திய சிறையிலும், அவரது மனைவி நளினி பெண்கள் தனிச்சிறையிலும் கடந்த 29 ஆண்டுகளுக்கும் மேலாக அடைக்கப்பட்டுள்ளனர். முருகன்நளினி தம்பதி என்பதால் இருவரும் 15 நாட்களுக்கு ஒரு முறை சந்தித்துப் பேச நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இந்நிலையில், கரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் முருகன் நளினி சந்திப்பு நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, இருவரும் சிறைத்துறை அனுமதியுடன் செல்போன் மூலம் 'வாட்ஸ் அப்' வீடியோ காலில் 15 நாட்களுக்கு ஒருமுறை பேசி வந்தனர்.இதற்கிடையே, சிறைத்துறை அதிகாரிகளின் கண்காணிப்பையும் மீறி முருகன் வெளிநாட்டில் உள்ள தனது உறவினர்களுடன் செல்போன் வீடியோ காலில் பேச முயன்றதாகப் புகார் எழுந்தது.

மேலும், முருகன் அறையில் செல்போன், சிம்கார்டு உள்ளிட்டவற்றைச் சிறைத்துறை காவலர்கள் பறிமுதல் செய்தனர். இது குறித்து பாகாயம் காவல் துறையினர் முருகன் மீது வழக்குப் பதிவு செய்தனர்.இதைத் தொடர்ந்து, முருகன், நளினியுடன் செல்போன் வாட்ஸ் அப் வீடியோ காலில் பேச சிறைத்துறை நிர்வாகம் தடை விதித்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த முருகன் சிறையில் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டார். 25 நாட்களுக்கு மேலாக முருகன் சிறையில் சாப்பிடாமல் தனது போராட்டத்தைத் தொடர்ந்து வந்ததால் அவரது உடல்நிலை மோசடைந்தது.இதையடுத்து, வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் முருகன் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு மருத்துவர்கள் கூறிய அறிவுரையை ஏற்று முருகன் தனது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டார். சிறைத்துறை விதிமுறைகளை மீறி முருகன் உண்ணாவிரதம் இருந்ததால் சிறையில் அவருக்கு வழங்கப்பட்டிருந்த சலுகைகளை சிறைத்துறை அதிகாரிகள் ரத்து செய்தனர். குறிப்பாக மனைவி நளினியுடன் பேசவும், உறவினர்களைச் சந்திக்கவும் முருகனுக்குத் தடை விதிக்கப்பட்டது.இந்நிலையில், கரோனா ஊரடங்கில் பல்வேறு தளர்வுகளை அரசு வழங்கியிருப்பதைத் தொடர்ந்து சிறையில் மற்ற கைதிகள் தங்களது உறவினர்களைச் சந்தித்துப் பேச சிறைத்துறை நிர்வாகம் அனுமதி வழங்கி வருகிறது.

இதையறிந்த முருகன் தனது மனைவி நளினியைச் சந்தித்துப் பேச தனக்கு அனுமதி வழங்க வேண்டும் என சிறைத்துறை கண்காணிப்பாளர் ருக்மணி பிரியதர்ஷினியிடம் மனு அளித்துள்ளார்.அந்த மனுவில், சிறையில் தனக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை ரத்து செய்ய வேண்டும், நீதிமன்ற உத்தரவுப்படி 15 நாட்களுக்கு ஒரு முறை நளினியை நேரில் சந்தித்துப் பேச அனுமதி வழங்க வேண்டும் என முருகன் கேட்டுக்கொண்டார். மனுவைப் பெற்ற சிறைத்துறை கண்காணிப்பாளர் இது தொடர்பாக சிறைத்துறை உயர் அதிகாரிகளிடம் கலந்தாலோசனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளதாக சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## எம்ஜிஆரின் மெய்க்காவலர் கே.பி.ராமகிருஷ்ணன் காலமானார்



அதிமுக நிறுவனர், மறைந்த முன்னாள் முதல்வர் எம்ஜிஆரின் மெய்க்காப்பாளரும், எம்ஜிஆருக்கு மாற்றாக டூப் போட்டு நடித்தவரும், எம்ஜிஆரின் இறுதிக் காலம் வரை அவருடன் பயணித்தவருமான ராமகிருஷ்ணன் இன்று உடல்நலக் குறைவால் சிகிச்சை பலனின்றி காலமானார். அவருக்கு வயது 91.மறைந்த முன்னாள் முதல்வர் எம்ஜிஆருக்கு மெய்க்காப்பாளராகவும், உதவியாளராகவும் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியவர் கேபிஆர் என்று அழைக்கப்பட்ட கே.பி.ராமகிருஷ்ணன்.

இந்நிலையில், கடந்த ஜனவரி 27ம் தேதி அன்று ராமகிருஷ்ணன் படிக்கட்டில் இருந்து தவறி விழுந்தார். அப்போது அவர் மூளையில் ரத்தக்கட்டி ஏற்பட்டது. உடனடியாக சென்னை மயிலாப்பூரில் உள்ள இசபெல்லா மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் ( ICU) பிரிவில் அனுமதிக்கப்பட்டார். வயோதிகம் காரணமாக அறுவை சிகிச்சை செய்யப்பட இயலாத நிலையில், அவரது மூளையில் உள்ள ரத்தக்கட்டியை அகற்ற ஊசி மூலம் மருத்துவர்கள் முயன்றனர். அதுவும் பலனளிக்காத நிலையில் மேல் சிகிச்சைக்காக ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், நினைவு திரும்பாமலேயே இன்று பிற்பகல் 3.15 மணியளவில் ராமகிருஷ்ணன் காலமானார்.எம்ஜிஆருடன் வாழ்நாள் முழுவதும் நடிப்பில் டூப்பாகவும், மெய்க்காப்பாளராகவும், அவர் அரசியல் கட்சி ஆரம்பித்தவுடன் அவருக்குத் துணையாகவும் இருந்த ராமகிருஷ்ணனின் மறைவு எம்ஜிஆர் ரசிகர்களுக்கு இழப்பாகும். அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக சென்னை கோபாலபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. நாளை அவரது உடல் அடக்கம் செய்யப்படுகிறது.

## கரோனாவிலிருந்து மீண்ட அமைச்சர் காமராஜ் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பினார்

கரோனா தொற்று காரணமாக சென்னையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த தமிழக உணவுத்துறை அமைச்சர் காமராஜ், நோயிலிருந்து மீண்டு இன்று வீடு திரும்பினார்.தமிழக உணவுத்துறை அமைச்சர் ஆர்.காமராஜ். இவருக்குக் கடந்த ஜனவரி 5ம் தேதி கரோனா தொற்று உறுதியானது. இதனையடுத்து, சென்னை கிண்டி அடுத்த மணப்பாக்கத்தில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்தார். ஆனால், பூரணமாக குணமாகாத நிலையில் பொங்கலுக்கு முன்னதாக வீட்டுக்குச் சென்றார். இதனால், அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டது. தற்போது கரோனா தொற்றிலிருந்து பூரண குணமடைந்த அமைச்சர் காமராஜ் இன்று காலை வீடு திரும்பினார். வீடு திரும்பினாலும் சில நாட்களுக்கு வீட்டிலேயே ஓய்வெடுக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

# ஐ நா அறிக்கை: போரினால் பாதிக்கப்பட்டவர்கள் கடும் அதிருப்தி

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)**

இலங்கை தொடர்பாக ஐ நா மனித உரிமைகள் ஆணையரால் முன்வைக்கப்பட்டுள்ள மீளாய்வு அறிக்கை, போரினால் பாதிக்கப்பட்டவர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது. நாட்டில் தொடரும் பிரச்சனைகள் இந்த அறிக்கையில் சரியாக பிரதிபலிக்கப்படவில்லை என்று அவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்த அறிக்கை தங்களுக்கு பெரிய ஏமாற்றத்தை அளித்துள்ளது என்று அதிருப்தியடைந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் இரண்டு முக்கியப் பிரச்சினைகளான "வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள்" மற்றும் தொடரும் "நில அபகரிப்பு" விஷயத்தில் ஐ நா மனித உரிமைகள் ஆணையர் "அடக்கி வாசித்துள்ளார்" என்று அவர்கள் கூறுகின்றனர்.



ஐநா பொதுவாக பாதிக்கப்பட்டவர்கள் பக்கமே நியாயம் கோரி நிற்கும் சூழலில் இம்முறை தங்களைக் கைவிட்டு தமது பிரச்சனைகள் விஷயத்தில் அரசின் ஊதுகுழலாகக் செயல்பட்டுள்ளது என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களும், விளை நிலங்களை இழந்த தமிழ் மக்களும் கவலையடைந்துள்ளனர்.

பொறுப்பு கூறல் மற்றும் நீதி பரிபாலன் ஆகியவற்றில் தாங்கள் தனிமைப்படுத்து அனாதைகளாக்கப்பட்டுள்ளோம் என்று தமது கணவன், சகோதரன், பிள்ளை, தகப்பன் ஆகியோரை இழந்த அவர்கள் வருந்துகின்றனர்.

தென் அமெரிக்க நாடான சிலியின் முன்னாள் அதிபரும் ஐநா மனித உரிமைகள் அணையத்தின் தலைவருமான மிஷேல் பஷேலே பரந்துபட்ட அளவில் இலங்கை "மோசமான மனித உரிமை மீறல்களில்" ஈடுபட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டி போர் காலத்தில் இடம்பெற்ற குற்றங்களுக்குப் பொறுப்பு கூறப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

"சர்வதேச குற்றங்களுக்கு நீதி கிடைக்க சர்வதேச நடவடிக்கைக்கான நேரம் வந்துள்ளது" என்று மட்டுமே அவரது அறிக்கை கூறுகிறது.

மேம்போக்கான இந்த குற்றச்சாட்டில் குறிப்பாக இறுதிகட்டப் போரின் போது நடைபெற்ற "போர்க் குற்றங்கள்" குறித்து வெளிப்படையாக எதுவும் இல்லை என்பதை பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கை அரசால் முன்னெடுக்கப்பட்ட "காணாமல் போனோர் அலுவலகம்" (ஓஎம்பி) அவர் புகழ்ந்துள்ளார். "பாதிக்கப்பட்ட குடும்பங்களின் குரலையும் அவர்களின் சூழலையும், இந்த அலுவலகம் கவனத்தில் எடுத்து அவர்களின் குரலாக ஒலித்துள்ளது" என்கிறது அம்மையாரின் அறிக்கை.

ஆனால் அந்த அலுவலகமே "ஒன்றுக்கும் உதாவதது" என்று தமது உறவுகளைத் தேடும் குடும்பத்தார் தொடர்ந்து கூறி வந்துள்ளனர்.

மிகவும் கொடூரமாக 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி கட்டத்தில் காணாமல் போன பலர் இலங்கை அரச படையினரிடம் சரணடைந்தனர் அல்லது கையளிக்கப்பட்டனர்.

வடக்கு கிழக்குப் பகுதியிலிருந்து "வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்" நலச் சங்கத்தின் தலைவியான யோகராசா கனகரஞ்சினி, ஓஎம்பி அலுவலகம் தோல்வியடைந்த ஒரு நிறுவனம், அதன் நம்பகத்தன்மை ஆரம்பத்திலிருந்தே கேள்விக்குறியானது என்று சாடியுள்ளார்.

ஐநா மனித உரிமைகள் ஆணையம் தனது அறிக்கையை தயாரிக்கும் முன்னர் தமது தரப்புக் கருத்துக்களை கேட்கவில்லை என்பது மிகவும் கவலையளிக்கிறது என்கிறார் கனகரஞ்சினி. ஐநா மனித உரிமைகள் ஆணையரின் கருத்துக்கள் உண்மையைப் பிரதிபலிக்கவில்லை என்று அவர் கூறுகிறார்.

ஆணையரின் கூற்று உண்மைக்குப் புறம்பானது. அவர் இலங்கை அரசின் ஓஎம்பி அலுவலத்தின் சார்பாக பேசுகிறாரா அல்லது எம்மைப் போல் பாதிக்கப்பட்டர்களுக்காக குரல் கொடுக்கிறாரா என்று கனகரஞ்சனி கேள்வி எழுப்புகிறார்.

சுமார் இரண்டாண்டுகளுக்கு முன்னர், காணாமல் போனவர்களின் உறவினர்கள் தமது உறவுகள் குறித்த ஆவணங்களை ஓஎம்பி அலுவலத்தில் சமர்ப்பித்து அவர்களை தேடிக் கண்டுபிடித்துத் தருமாறு கோரினர். குறிப்பாக ஐந்து நபர்களின் விவரங்களை அவர்கள் ஆவணமாக்கி கொடுத்திருந்தனர்.

ஆனால் இதுவரை ஒருவர் கூட அந்த அலுவலகத்தால் கண்டுபிடிக்கப்படவில்லை. அந்த அலுவலகத் தலைவராக இருந்த சட்டத்தரணி சாலிய பீரிஸும் பதவி விலகிச் சென்றுவிட்டார். அவர் கடந்த நான்காண்டுகளில் என்ன செய்தார்கள் என்பதும் விவாதப் பொருளாகியுள்ளது.

பல ஆணைக் குழுக்களைத் தாங்கள் சந்தித்துள்ளதாக யோகராசா கனகரஞ்சனி கூறுகிறார்.

"போர் முடிந்த பிறகு 12 ஆணைக் குழுக்களை சந்தித்துள்ளோம். அதில் ஒன்றுகூட நம்பகத்தன்மை வாய்ந்ததாக இல்லை மற்றும் அவர்களுக்கான வரையறையை எட்டுவதில் தோல்வியடைந்தன" எனக் கூறும் அவர், ஆணைக் குழுக்கள் தங்களை அவமானப்படுத்தின எனவும் வருந்துகிறார்.

"உங்களுக்கு என்ன தேவை - ஆடு, மாடு, கோழிகள்?" எனத் தொடர்ச்சியாக வந்த ஆணைக் குழுக்கள் எம்மைக் கேட்டு அவமானப்படுத்தின என்கிறார் கனகரஞ்சனி.

ஐநா மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கையைச் சாடும் அவர் "ஆணையர் அந்த அறிக்கையை ஏன் வெளியிட்டார், தெர்ந்தா அல்லது அறியாமல் செய்தாரா?" என வினவுகிறார்.



காணி அபகரிப்புத் தொடர்பிலும் ஐநா ஆணையரின் அறிக்கை விமர்சனங்களை எழுப்பியுள்ளது.

அரசின் புள்ளி விவரங்களை மேற்கோள் காட்டி, பஷேலே அம்மையார் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் வடக்கு-கிழக்குப் பகுதியில் இராணுவத்தின் பிடியிலிருந்த 90% நிலங்கள் உரிமையாளர்களிடம் மீண்டும் கையளிக்கப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார்.

"2009ஆம் ஆண்டு முதல் பிடித்து வைக்கப்பட்டிருந்த சுமார் 89.26 வீதம் அரச நிலங்களும் 92.22 வீதம் தனியார் நிலங்களும் 31 டிசம்பர் 2019 வாக்கில் திருப்பியளிக்கப்பட்டுள்ளன" என்கிறது அவரது அறிக்கை.

அரசின் தரவுகளை எவ்வித ஆய்வும் விமர்சனமும் இல்லாமல் அங்கீகரிப்பது ஏற்புடையதல்ல என்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்.

விரிவான தகவலை வெளியிடும் அவர் வடக்கு கிழக்கில் 8000 ஏக்கருக்கும் அதிகமான காணிகள் இன்னும் இராணுவத்தினரால் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படாமல் உள்ளன என்கிறார்.

விவசாயக் காணிகள் இன்னும் இராணுவத்தின் வசமுள்ளதால் ஆயிரக்கணக்கானவர்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர் என்கிறார் சிறீதரன்.

"நில அபகரிப்பு தொடர்ந்து நடக்கும் வேளையில், ஐநா மனித உரிமைகள் ஆணையம் அரசுக்கு சான்று வழங்கியுள்ளதை எம்மால் ஏற்க முடியாது. இதேதான் கடந்த 2015லும் நடைபெற்றது".

முன்னர் இருந்த "நல்லாட்சி" அரசாங்கம் பெருந்தொகுதியான நிலங்கள் மக்களிடம் மீண்டும் கையளிக்கப்பட்டன என்று கூறியது. ஆனால் தமிழ் மக்களோ வீதி வீதியாக அலுவலகம் அலுவலகமாக அன்றாடம் அலைகின்றனர்.

"எனவே, இலங்கை அரசு நீதி வழங்கல், பொறுப்புக் கூறல் போன்றவற்றில் முன்னேற்றம் காட்டுகிறது என்பது அபத்தமானது மட்டுமின்றி ஆபத்தானதும் கூட" என்கிறார் சிறீதரன்.

நிலங்கள் திருப்பியளிக்கப்படவில்லை, அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் 1500 நாட்களுக்கும் மேலாக வீதிகளில் போராடுகின்றனர், அவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது, உள்நாட்டிலேயே அகதிகளாக அவர்கள் உள்ளனர் என்று அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை வைக்கிறார் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.




ஐநா அமைப்புக்கு கொழும்பில் அலுவலகமும் நாடு முழுவதும் முகவர்கள் உள்ள நிலையில் அவர்கள் கள ஆய்வு செய்து, உண்மைகளைக் கண்டறிந்து மேலிடத்திற்கு உண்மையான தகவல்களைத் தெரிவித்திருக்க வேண்டும் எனும் குரல் வடக்கு கிழக்கு இலங்கையில் ஓங்கி ஒலிக்கிறது.

பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களைப் போலவே இலங்கை அரசும் ஐநா மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கையை நிராகரித்துள்ளது.

இலங்கை அரசின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் "வன்முறைக்கு வித்திடும்" என்று கூறுவதைக் கண்டித்துள்ள அரசின் வெளியுறவுச் செயலரும் ஓய்வுபெற்ற கடற்படைத் தளபதியுமான ஜயநாத் கொலம்பகே, ஐநா இலங்கையை "மிரட்டி அடிபணிய வைக்கிறது" என்று பதிலளித்துள்ளார்.

"ஆதாரங்கள் இல்லாத குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது தவறு. அவர்களிடம் ஏதாவது இருந்தால், சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்" என்கிறார் இலங்கை வெளியுறவுச் செயலர்.

புலம்பெயர்ந்து பல நாடுகளில் வாழும் மக்களின் "தீய உள்நோக்கத்திற்கு" ஐநா மனித உரிமைகள் ஆணையர் துணை போகக் கூடாது என்கிறது இலங்கை அரசு.

ஆனால் ஐநாவின் தலைமைச் செயலர் அண்டோனியொ குட்டரெஸ் இதற்கு பதிலடி கொடுத்துள்ளார். ஐநாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி மொஹான் பீரிஸ் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அவர் பொறுப்புக்கூறல் மற்றும் இணக்கப்பாடின்றி இலங்கையால் முன்னேற முடியாது என்று கூறியுள்ளார்.

"இன்றைய உலகில் மனித உரிமைகள், சட்டங்களை மதிப்பது, போருக்கு பின்னரான காலகட்டத்தில் எழும் கேள்விகளுக்கு பதிலளிப்பது- அதாவது பொறுப்புக்கூறல் மற்றும் இணக்கப்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும். ஆனால் இலங்கைத் தொடர்பில் இது குறித்து கவலைகள் அதிகரித்துள்ளன".

இந்த இரண்டு விஷயங்களை இலங்கை அரசும் அதன் மக்களுக்கும் தீவிரமாக மனதில் எடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று பதிலளித்துள்ளார் அண்டோனியோ குட்டரெஸ்.

அதேவேளை இலங்கையில் பல துன்பங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் மற்றும் உயிராபத்திலிருந்து தப்பிக்க நாட்டிலிருந்து வெளியேறி பல நாடுகளில் தஞ்சம் கோருவோருக்கு ஆதரவளிக்கும் வகையில் பல நாடுகள் அகதிகள் தொடர்பான தமது கொள்கையை மறு பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

# மரபுரிமை ஆக்கிரமிப்பும் தமிழ் அறிஞர்களின் பொறுப்பும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



உருத்திரபுரம் சிவன் ஆலயத்துக்கும் ஆபத்தா? தொல்லியல் திணைக்களம் அவ்வாலயச் சூழலில் அகழ்வாராய்ச்சிகளைச் செய்ய முயற்சிப்பதாக செய்திகள் வருகின்றன. தையிட்டியில் ஒரு பிரமாண்டமான விகாரைக்கு ராணுவத் தளபதி அடிக்கல் நாட்டியிருக்கிறார். எனது கடந்தவாரக் கட்டுரை ஒன்றில் எழுதியது போல கிழமைக்கு ஒரு பிரச்சினையைக் கிளப்பி தமிழ் அரசியல்வாதிகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் குடிமக்கள் சமூகங்களின் கவனத்தை அரசாங்கம் திசைதிருப்பி வருகிறது. இக்கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருக்கையில்கூட எங்காவது ஒரு மரபுரிமை சின்னம் அல்லது சைவ ஆலயம் தொல்லியல் திணைக்களத்தின் பார்வைக்குள் வந்திருக்கலாம்.

ராஜபக்சக்களின் இரண்டாவது வருகைக்குப்பின் சிங்கள் பௌத்த மயமாக்கல் இப்படித்தான் முன்னெடுக்கப்படுக்கிறது. இது விடயத்தில் தமிழ் மக்களின் எதிர்ப்பு அரசாங்கத்துக்கு நோகக்கூடியவைகளாக அல்லது அனைத்துலக சமூகத்தின் கவனத்தை ஈர்க்கக்கூடியவர்களாக இல்லை.

கடந்த 3 ஆம் திகதியில் இருந்து வடக்கு கிழக்கு சிவில் சமூகம் என்ற ஓர் அமைப்பு ஒரு கவனஈர்ப்பு எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கிறது. பொத்துவிலில் தொடங்கி பொலிகண்டி வரை என்ற பெயரிலான இக்கவனயீர்ப்பு நடவடிக்கை எந்த அளவுக்கு அரசாங்கத்தின் கவனத்தையும் வெளி உலகத்தின் கவனத்தையும் ஈர்க்கக்கூடும் என்பதனை அதன் விளைவுகளை வைத்தே மதிப்பிடலாம்.

நில ஆக்கிரமிப்பு பொறுத்து தமிழ் மக்கள் மூன்று தளங்களில் போராட வேண்டியிருக்கிறது. முதலாவது நாட்டுக்குள் இரு முனை போராட்டங்களை நடத்தவேண்டும். அதில் முதலாவது புதிய அகிம்சை வழியிலான எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க வேண்டும். அரசாங்கத்தாலோ அல்லது வெளி உலகத்தாலோ நிராகரிக்கப்பட முடியாத அளவுக்கு போராட்டங்கள் சக்தி மிக்கவைகளாக அமையவேண்டும்.

இரண்டாவது - சட்டரீதியான நடவடிக்கைகள். நில ஆக்கிரமிப்பு எனப்படுவது அரசாங்கம் ஏற்கனவே உருவாக்கி வைத்திருக்கும் சட்டங்களின் பிரகாரமே முன்னெடுக்கப்படுகிறது. எனினும் இது விடயத்தில் இலங்கைத்தீவின் நீதி பரிபாலன நடைமுறைகளை சோதனைக்குள்ளாக்கும் விதத்திலும் வெளியுலகத்துக்கு அம்பலப்படுத்தும் விதத்திலும் தமிழ் வழக்கறிஞர்கள் சட்டரீதியிலான தமது நடவடிக்கைகளை ஒருபுறம் முன்னெடுக்கலாம். இவை இரண்டும் தாயகத்தில் தமிழ் மக்கள் முன்னெடுக்க வேண்டிய இருமுனை போராட்டங்கள். அதேசமயம் தாயகத்துக்கு வெளியே உலக சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் புலம்பெயர்ந்த தமிழ் மக்களையும் தமிழகத்தையும் இணைத்து நில ஆக்கிரமிப்புக்கு எதிராக வெகுசன எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கலாம் அங்கேயும் உலகின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் புதிய படைப்பாற்றல் மிக்க போராட்ட வழிமுறைகளை குறித்து சிந்திக்கலாம்.

இவை இரண்டையும் தவிர மூன்றாவதாக ஒரு விடயத்தை தமிழ்மக்கள் செய்ய வேண்டி இருக்கிறது. அதுவும் உள்நாட்டில்தான். அது என்னவெனில் தமிழ் புலமையாளர்களுக்கு உரிய ஒரு பணி. தமிழ்ப் புலமையாளர்களுக்கு இதுவிடயத்தில் குறைந்தபட்சம் அவர்களுடைய அறிவியல் ஒழுக்கம் சார்ந்த ஒரு பொறுப்பு இருக்கிறது. அவர்கள் இனம் சார்ந்த கருத்தை கூறவேண்டும் என்று இக்கட்டுரை கேட்கவில்லை. ஆனால் அவர்களுக்கேயான புலமை ஒழுக்கத்துக்கூடாக அவர்கள் உண்மைகளை நிரூபிக்க வேண்டும். இலங்கைத்தீவின் மதப் பல்வகைமை மரபுரிமைப் பல்வகைமை போன்றவற்றை அவர்கள் கேள்விக்குட்படுத்த வேண்டும்.

தமிழ் பௌத்தம் எனப்படுவது தமிழ் தேசியத்துக்கு எதிரானது என்று ஒரு கருத்து ஒரு பகுதி தமிழ்மக்கள் மத்தியில் உண்டு. இல்லை. தமிழ் பௌத்தம் எனப்படுவது தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு காலகட்ட வரலாற்று யதார்த்தம். அதை மாற்றி எழுத முடியாது. தமிழ் மக்கள் மத்தியில் பௌத்தம் ஒரு காலகட்டத்தில் பயிலப்பட்டிருக்கிறது. பின்னர் சைவசமயப் பக்தி இயக்கத்தின் எழுச்சியோடு பௌத்தம் பின்வாங்கியிருக்கிறது.

தமிழில் காப்பிய காலம் எனப்படுவது பௌத்த சமண காலகட்டம்தான். தமிழில் எழுதப்பட்ட ஐம்பெரும் காப்பியங்களும் ஒன்றில் சமண காப்பியங்கள் அல்லது பௌத்த காப்பியங்கள்தான். காப்பியச் செழிப்புக்கு அடிப்படையான சமூகப் பொருளாதார அரசியல் பண்பாட்டு வளர்ச்சி என்பது அக்கால கட்டங்களில்தான் உருவாகியது என்று பொருள். அது தமிழுக்கே செழிப்பு. தமிழ் வரலாற்றில் அதை காப்பிய காலம் என்று தமிழர்கள் கொண்டாடிக்கொண்டு அதை நவீன அரசியலுக்கு எதிரானதாகத் திருப்புவதற்கு எந்த அறிவியல் அடிப்படையும் இல்லை அரசியல் அடிப்படையும் இல்லை.தமிழ் அடையாள உருவாக்கத்தில் பௌத்தத்திற்கும் ஒரு பங்குண்டு.

எனவே தமிழ் பௌத்தத்தை தமிழ் தேசியத்துக்கு எதிராக கற்பனை செய்யத் தேவையில்லை. தேசியம் எனப்படுவது மதப் பல்வகைமையின்மீது மரபுரிமைப் பல்வகைமையின்மீது மக்களைத் திரளாக்குவதுதான்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)



(10ம் பக்கத் தொடர்ச்சி)

இது விடயத்தில் மதப்பல்வகைமை மரபுரிமைப் பல்வகைமை என்பவற்றை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.எனவே தமிழ் பௌத்தம் இருந்தது என்பதனை குறித்து தமிழ் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அதேசமயம் பௌத்தத்தை ஓர் ஆக்கிரமிப்பு கருவியாக பயன்படுத்தும் அரசியலைத்தான் கேள்விக்கு உட்படுத்த வேண்டும். பௌத்தத்தைப்பௌத்த மரபுரிமைச் சொத்துக்களை ஆக்கிரமிப்பின் கருவியாக மத மேலாண்மையின் கருவியாக தொல்லியல் துறையோ அல்லது வேறு எந்த திணைக்களமோ பயன்படுத்துவதைத்தான் தமிழ்ப் புலமையாளர்கள் அம்பலப்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் பண்பாட்டு வேர்களைக் குறித்தும் மதப் பல்வகைமை யதார்த்தத்தை குறித்தும் தமது ஆய்வு ஒழுக்கங்களூடாக உண்மைகளை வெளிக்கொண்டு வரவேண்டிய ஒரு பொறுப்பு தமிழ் கல்விமான்களுக்கும் அறிஞர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் உண்டு. இது விடயத்தில் யாழ் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறையும் உட்பட நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள தமிழ் அறிஞர்கள் ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்? மிகச் சில பலவீனமான குரல்களை தவிர இதை ஒரு புலமைப் பொறுப்பாக புலமைசார் கடமையாக புலமைச் சவாலாக எடுத்துக்கொண்டு தனது ஆராய்ச்சிகளின் மூலம் உண்மையை வெளியில் கொண்டுவர பெரும்பாலான தமிழ் புலமையாளர்கள் ஏன் முன்வரவில்லை?

இது விடயத்தில் சிங்களப் புலமையாளர்கள் ஆகிய கலாநிதி ஜூட் பெர்னான்டோ, நீரா விக்ரமசிங்க, ஜெகத் வீரசூரிய போன்றோரின் துணிச்சலான முன்னுதாரணத்தை தமிழ்ப் உரிமையாளர்களும் பின்பற்ற வேண்டும். கடந்த மாதம் 21ஆம் திகதி இயற்கை எய்திய கலாநிதி. மாலதி டி அல்விஸ் போன்றவர்களின் முன்மாதிரிகளை பின்பற்றவேண்டும்.

ஆராய்ச்சி முடிவுகளை இனம் சார்ந்து திரிக்கவோ அல்லது சிதைக்கவோ தேவையில்லை. அறிவியல் உண்மைகள் எப்பொழுதும் உண்மைகள்தான். பூமி தட்டை என்று திருச்சபை சொன்னதால் அது தட்டையாகி விடவில்லை. அது உருண்டையாக அப்போதும் இருந்தது இப்போதும் இருக்கிறது. கலிலியோவுக்கு முன்னும் அது உருண்டைதான். கலிலியோவுக்கு பின்னும் அது உருண்டைதான். எனவே தமிழறிஞர்கள் இது விடயத்தில் தமது அறிவியல் ஒழுக்கத்துக்கூடாக உண்மைகளை வெளிக்கொண்டு வரவேண்டும். இனம் சார்ந்து கூட சிந்திக்க வேண்டிய தேவை கிடையாது.

இப்படிப் பார்த்தால் நிகழும் மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டிய ஒரு அறிவியல் பொறுப்பு தமிழ் புலமையாளர்களிற்கு உண்டு. தமிழ் வரலாற்று அறிஞர்களும் தொல்லியல் நிபுணர்களும் இப்பொறுப்பை உணர்ந்து தமது சமூகத்திற்குரிய தமது காலத்துக்குரிய கடமையைச் செய்ய முன்வரவேண்டும்.

சில மாதங்களுக்கு முன்பு நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் புதிய நாடாளுமன்றத்தின் தொடக்க உரைகளின்போது வரலாற்று உண்மைகளை முன்வைத்து உரை நிகழ்த்தினார். இதுவிடயத்தில் அவர் பெருமளவுக்கு தமிழில் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மூத்த வரலாற்று ஆய்வாளர்களின் ஆய்வு முடிவுகளை முன்வைத்தே தமது உரைகளைத் தொகுத்திருந்தார். ஆனால் அவருடைய உரைகளை சகித்துக் கொள்ள முடியாத சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதிகள் அவருக்கு எதிராகத் தாக்குதல் தொடுத்தபோது இது தொடர்பில் சம்பந்தப்பட்ட துறைசார் தமிழ்ப் புலமையாளர்கள் அறிஞர்கள் எவரும் வாய் திறக்கவில்லை. விக்னேஸ்வரன் ஆற்றிய உரையில் காணப்படும் வரலாற்று உண்மைகள் பெரும்பாலானவை ஆய்வு முடிவுகளே என்றும் அவை அங்கீகரிக்கப்பட்ட ஆய்வாளர்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளே என்றும் கூறத்தக்க துணிச்சல் தமிழ் புலமையாளர்கள் எத்தனை பேரிடம் இருந்தது? விக்னேஸ்வரன் தனது உரைகளில் வெளிப்படுத்திய வரலாற்று உண்மைகள் பெரும்பாலானவை அங்கீகரிக்கப்பட்ட வரலாற்று ஆசிரியர்களால் நிரூபிக்கப்பட்ட ஆய்வு முடிவுகள் ஆகும். ஆனால் சிங்கள பௌத்த பெருந்தேசியவாத அரசியல்வாதிகள் அந்த ஆய்வு முடிவுகளை கண்டு அச்சமடைந்தார்கள். அதாவது உண்மையை கண்டு பயந்தார்கள். அந்த உண்மையை ஏற்றுக் கொண்டால் சிங்கள பௌத்த மேலாண்மைவாதம் அடிபட்டுப் போய்விடும் என்ற பயம் அவர்களுக்கு.

அதைப்போலவே தமிழ் பௌத்தம் குறித்தும் தமிழில் மதப் பல்வகைமை மரபுரிமை பல்வகைமை குறித்தும் ஆய்வு முடிவுகளை உள்ளதை உள்ளபடி கூறத் தமிழ்ப் புலமையாளர்களும் தயங்குவதாக தெரிகிறது. அதைக் கூறினால் ஒருபுறம் தமது பதவி தாம் அனுபவிக்கும் வரப்பிரசாதங்களை இழக்க நேரிடலாம் என்ற அச்சம் இருக்கலாம். அல்லது தமிழ்த் தேசியவாதிகள் என்று தம்மை காட்டிக் கொள்பவர்கள் குருட்டுத்தனமாக தமது கருத்துக்களை விளங்கிக் கொண்டு எதிர்க்கலாம் என்ற முன்னெச்சரிக்கையும் இருக்கலாம்.

ஆனால் அவரவர் அவரவருடைய அறிவியல் ஒழுக்கத்தின் பாற்பட்டு தமக்குரிய தொழில்சார் அறத்தையும் துணிச்சலையும் நிரூபிக்க வேண்டிய காலம் இது. அவ்வாறு நிரூபிக்கத் தவறினால் முதலாவதாக அவர்கள் தங்களுடைய அறிவியல் ஒழுக்கத்திலிருந்து தவறுகிறார்கள். இரண்டாவதாக அறிவியல் அறத்திலிருந்து தவறுகிறார்கள். மூன்றாவதாக தமது காலத்தில் தமது சமூகம் சார்ந்த தமக்குரிய அறிவியல் பொறுப்பிலிருந்தும் தவறுகிறார்கள்.

## வீணாவின் கவிக்கணை

சாதிகள் இல்லையடி பாப்பா
என்ற பாரதியும் சென்றுவிட்டார்,
அந்த சாதி மட்டும் இன்னும்
எம்மவர் மனங்களில் இருந்து
செல்லவில்லையடிப்பாப்பா,
வெளியே சென்றால் ஒன்றாக
உண்பார் உடுப்பாரடிப்பாப்பா,
பின்பு வீட்டினுள் வந்தால்,
நீ யாரென்பாரடிப்பாப்பா,
இவ்வுலகில் ஆண்ணென்றும்
பெண்ணென்றும் இரு சாதி
உள்ளதடிப்பாப்பா, நீ வாழ
அதை மட்டும் உணர்ந்தால்
போதுமடி பாப்பா!

MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்



உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400



Scarborough
201-4433 Sheppard Ave. E
Scarborough, ON, M1S 1V3

Toronto/Downtown
800-120 Eglinton Ave. E
Toronto, ON, M4P 1E2

North York
306-1280 Finch Ave. W
North York, ON, M3J 3K6

Mississauga
110-93 Dundas Street E.
Mississauga, ON, L5A 1W7

Brampton
201-7990 Kennedy Rd. South,
Brampton, Ontario, L6W 0B3

Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced
Credit Counsellor



## ஜெனீவாவில் மேற்குலகின் எதிர்ப்பைச் சமாளிக்க இந்தியாவின் ஆதரவை கோரியுள்ள இலங்கை




இலங்கைஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்விற்காக இந்தியாவினதும் உலக நாடுகளினதும் ஆதரவை பெறுவதற்கான முயற்சிகளை இலங்கை ஆரம்பித்துள்ளது.

முதன்மை நாடுகளின் தீர்மானத்தை எதிர்கொள்வதற்காக ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் 15 நாடுகளின் ஆதரவை பெறும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன இலங்கை அரசாங்கத்தின் மிக முக்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவின் உதவியை முதலில் இலங்கை நாடியது என தெரிவித்துள்ள இலங்கை அரசாங்கத்தின் மிக முக்கிய வட்டாரங்கள் இந்தியா இலங்கையின் வேண்டுகோளை பரிசீலிப்பதாக தெரிவித்துள்ளது என குறிப்பிட்டுள்ளன.

சீனாவும் ரஸ்யாவும் ஏற்கனவே இலங்கைக்கு சர்வதேச அரங்கில் ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளன. அமெரிக்காவின் பிளக்லைவ்ஸ் மட்டர் இயக்கத்தினை கருத்தில்கொண்டு ஆபிரிக்க நாடுகளின் ஆதரவை பெறுவதற்கான முயற்சிகளிலும் இலங்கை ஈடுபட்டுள்ளது.

## வெளி நாடுகளிலுள்ள இலங்கைக் குற்றவாளிகள் கைது செய்யப்படுவர் என்கிறார் சரத் வீரசேகர

வெளிநாடுகளிலிருந்து பாதாள உலக நடவடிக்கைகள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோரைக் கைது செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கூறினார்.

இலங்கைப் பொலிஸார் இந்தியப் பொலிஸார் மற்றும் இண்டர்போல் இணைந்து ஒரு திறமையான நடவடிக்கை மூலம் கிம்புலா எல குணா மற்றும் அவரது மகன் பும்பா ஆகியோரைக் கைது செய்ய முடிந்தது. இலங்கை வெளியிட்ட சிவப்பு அறிவித்தலின்படி இக்கைதுகள் இடம்பெற்றன.

கிம்புலா எல குணாவின் பாதாள உலகக் குழு போதைப்பொருள் கடத்தல் மற்றும் மிரட்டிப் பணம் பறித்தல் ஆகியவற்றுடன் தொடர்புபட்டுள்ளது. 1999 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீதான தாக்குதலிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர் என அவர் மேலும் கூறினார்.



## பிளாஸ்ரிக் பாவனையைத் தடை செய்யும் வர்த்தமானி அறிவிப்பை இலங்கை வெளியிட்டது

தனியார் பாவனை மற்றும் குறுகிய கால பிளாஸ்ரிக்குகளை மார்ச் மாதம் 21ம் திகதியிலிருந்து தடை செய்வது தொடர்பாக இரண்டு வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர இவ்வர்த்தமானி அறிவித்தலில் கைச்சாத்திட்டுள்ளார். தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் மூலம் சுற்றாடல் துறை அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய பிளாஸ்ரிக் கட்டுப்பாடு தொடர்பான இரண்டு வர்த்தமானி பத்திரிகை வெளியிடப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதன்படி இரசாயன திரவியங்களை பொதியிடுவதற்காக பொலி எதிலின் டெரப்தெலெட் மற்றும் பெலிவியனையில் குளோரைட் எனப்படும் இரண்டு வகையான பிளாஸ்ரிக்குகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

அத்துடன் நிகர அளவு 20 மில்லி லீட்டர் அல்லது 20 கிராமிற்கு குறைந்த செஸெ பக்கெட்டுகள் தடை செய்யப்பட்டுள்ளதுடன் அது உணவு மற்றும் ஔடதங்களை பொதியிடலுக்கு உள்ளடக்கப்படவில்லை. காற்றினால் நிரப்பப்படும் விளையாட்டுப் பொருட்கள் உற்பத்தி தடை செய்யப்பட்டுள்ளதுடன் அதில் பலூன் நீரில் மிதக்கும் மற்றும் நிச்சல் தடாகங்களில் பாவிக்கும் விளையாட்டுப் பொருட்கள் உள்ளடக்கப்படவில்லை.

பிளாஸ்ரிக் குச்சியுடன் கூடிய கொட்டன் பட் தடை செய்யப்பட்டுள்ளது. அதில் வைத்திய மற்றும் கிளினிக் சிகிச்சைக்கு உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்ரிக் கொட்டன் பட் உள்ளடக்கப்படவில்லை.

எந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உற்பத்தி தொடர்பாக அந்த உற்பத்திக்காக பாவிக்கப்பட்ட பிளாஸ்ரிக் பற்றி கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டியதோடு சர்வதேச ரீதியாக ஒவ்வொரு பிளாஸ்ரிக் வகையை அறிந்து கொள்வதற்கு பயன்படுத்த வேண்டிய அடையாள குறியீடு முறையும் இந்த வர்த்தமானி மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு அதனை குறிப்பிடுவதுகட்டாயமாக்கப்பட்டுள்ளது. பிளாஸ்ரிக் பொருட்களை மீள் சுழற்சி செய்வதை இலகுவாக்கி சுற்றாடல் பாதிப்பை குறைப்பதே முக்கிய நோக்கம் என மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.அவ் வர்த்தமானிகளில் குறிப்பிட்ட விடயங்களை மீறும் சந்தர்ப்பகளில் தேசிய சுற்றாடல் சட்டம் 31வது பிரிவின்படி தண்டனை வழங்கப்படுமென மததிய சுற்றாடல் அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ஜப்பானில் கொரோனாக்கு எதிரான அவசர நிலையை மீறிய துணையமைச்சர் பதவி நீக்கம்

ஜப்பானில் கொரோனா தொற்று பரவாமல் தடுக்க அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டு மக்கள் இரவில் தேவையின்றி வெளியில் நடமாடவும் விடுதிகள் மதுபான விடுதிகளுக்குச் செல்வதை தவிர்க்கவும் உணவகங்களை முன்கூட்டியே மூடவும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த அவசரநிலை அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த அந்நாட்டு துணைக் கல்வி மந்திரி டெய்டோ டானோஸே அரசு உத்தரவை மீறி சமீபத்தில் இரவு விடுதிக்குச் சென்றதாக செய்தி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

இதுகுறித்து விசாரித்த அந்நாட்டு பிரதமர் யோஷிஹிடே சுகா அமைச்சரவையிலிருந்து டெய்டோ டானோஸே பதவி நீக்கினார்.

டெய்டோ டானோஸே ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியைச் (எல்டிபி) சோந்தவர். தன்னை பதவிநீக்கம் செய்ததையடுத்து அவர் கட்சியில் இருந்தும் விலகி கொண்டார். அவருடன் இரவு விடுதிக்குச் சென்ற மேலும் இரண்டு எல்டிபி எம்.பி.க்களும் கட்சியில் இருந்து விலகி கொண்டார்.

இதேபோல் கடந்த மாதம் அவசர நிலை விதிகளை மீறி இரவு விடுதிக்குச் சென்ற மற்றொரு எம்.பி.யான கியோஹிகோ டொயாமா அந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று தனது எம்.பி. பதவியை ராஜினாமா செய்தது குறிப்பிடத்தக்கது.

## உலகளவில் கொரோனா தொற்றினால் பாதிப்பின் எண்ணிக்கை 10.39 கோடியைக் கடந்துள்ளது

உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 10.39 கோடியைக் கடந்துள்ளது.

- கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 7.56 கோடிக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.
- மேலும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 22.46 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.
- கொரோனா பாதித்த 2.59 கோடிக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
- சிகிச்சை பெறுபவர்களில் 1.07 லட்சத்துக்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

அமெரிக்காவில் புதிதாக 1.16 லட்சம் பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஒரே நாளில் 1794 பேர் தொற்றால் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவில் மொத்தம் 2.69 கோடி பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 4.54 லட்சம் பேர் தொற்றால் உயிரிழந்துள்ளனர். கொரோனா பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா இந்தியா பிரேசில் ரஷ்யா பிரிட்டன் ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.

சீனாவின் உகான் நகரில் கடந்த ஆண்டு இறுதியில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகிறது. வைரஸ் தொற்று பரவி ஏறத்தாழ 10 மாதங்கள் கடந்து விட்டாலும் இதன் வீரியம் குறைந்தபாடில்லை.

## இங்கிலாந்தில் கண்டறியப்பட்ட உருமாறிய கொரோனா 82 நாடுகளில் பரவியுள்ளதாம்

- இங்கிலாந்தில் கண்டறியப்பட்ட உருமாறிய கொரோனா பாதிப்புகள் 82 நாடுகளில் பரவியுள்ளன என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜெனீவா, இங்கிலாந்து நாட்டில் கடந்த 2020ம் ஆண்டு டிசம்பரில் புதிய வகை உருமாறிய கொரோனா வைரசானது கண்டறியப்பட்டது. இதனால் இந்தியா உள்பட பல சர்வதேச நாடுகள் அந்நாட்டுடனான தங்களது விமான போக்குவரத்து சேவைக்கு தற்காலிக தடை விதித்தன.

இந்த புதிய வகை உருமாறிய கொரோனாவானது எளிதில் பரவும் தன்மை கொண்டது என கண்டறியப்பட்டது. இதனால் இங்கிலாந்தில் சமூக இடைவெளி பின்பற்றுதல் முக கவசம் அணிதல் உள்ளிட்ட விதிமுறைகள் மீண்டும் கடுமையாக பின்பற்ற அறிவுறுத்தப்பட்டது.

இந்நிலையில் உலக சுகாதார அமைப்பின் சுகாதார அவசரநிலை திட்டத்திற்கான தொழில் நுட்ப தலைவர் மரியா வான் கெர்கோவ் ஆலோசனை கூட்டமொன்றில் கலந்து கொண்டார். அவர் பேசும்பொழுது,

- இங்கிலாந்து நாட்டில் முதன்முறையாக அடையாளம் காணப்பட்ட உருமாறிய வகையை சேர்ந்த கொரோனா பாதிப்பு 82 நாடுகளில் இதுவரை கண்டறியப்பட்டு உள்ளன.
- தென்ஆப்பிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட மற்றொரு வகை கொரோனா பாதிப்பு 39 நாடுகளில் கண்டறியப்பட்டு உள்ளன.
- இதேபோன்று பிரேசில் நாட்டில் இருந்து கண்டறியப்பட்ட கொரோனா பாதிப்பு 9 நாடுகளில் பரவியுள்ளன என கூறியுள்ளார்.

# கனடா உதயன்

25th ANNIVERSARY www.uthayannews.ca UTHAYAN உதயன்

## வெள்ளி விழா ஆண்டு 2021

உலகளாவிய மாணவர்களுக்கான இணையவழி ஊடான

# பேச்சுப் போட்டி


POWERED BY
VIBRANT HOSPITALITY GROUP
OVER 25 YEARS IN THE HOSPITALITY INDUSTRY

Shankar Nallathamby, CHA
Director
shankar@vhgcanada.com
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
www.vibranthospitalitygroup.com


## நான் விரும்பும் அரசியல் தலைவர்

இங்கு காணப்படும் தமிழ்த் தலைவர்களிலிருந்து தங்களுக்கு பிடித்தமான ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரைப் பற்றி **5 நிமிடங்களுக்கு** மேற்படாமல் பேச வேண்டும். போட்டி **ZOOM** செயலியூடாக **பெப்ரவரி 27, 28 தினங்களில்** நடைபெறும். கனடா, இந்தியா, அமெரிக்கா, மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நடுவர்கள் வெற்றியாளர்களை தேர்ந்தெடுப்பார்கள். இவர்களோடு கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் சேர்ந்து எடுக்கும் இறுதி முடிவிற்கு ஏற்பவே பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.



## நிபந்தனைகள்

1. உலகின் எப்பாகத்திலும் வாழும் 20 வயதிற்கு உட்பட்ட தமிழ் பேசும் மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம் (வயதை உறுதிப்படுத்தும் பத்திரம் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்).

2. இங்கு காணப்படும் தலைவர்களில் தாம் விரும்பும் ஒருவரைப் பற்றி மட்டும் ஐந்து நிமிடத்திற்கு மேற்படாமல் பேசவேண்டும்

3. போட்டிக்கான உரையை அவர்களாகவோ அன்றி மற்றவர்களின் உதவியுடனோ தயாரிக்கலாம்.

4. இறுதிப் போட்டிக்கு முன்பதாக தேவையேற்படின் முதற்சுற்றுப் போட்டியில் பங்குபற்றவும் தயாராக இருக்க வேண்டும்.

5. போட்டி இடம்பெறும் இரண்டு நாட்களில் ஏதாவது ஒரு நாளில் போட்டியில் பங்கு பற்ற தயாராக இருக்க வேண்டும்.

6. பேச்சுப் போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் பின்வரும் விபரங்களை uthayannews@yahoo.com என்னும் மின்னஞ்சலுக்கோ அன்றி 1 (416) 732 1608 / 1 (416) 587 0552 என்னும் இலக்கத்தில் WhatsApp இற்கோ அனுப்பி வைக்க வேண்டும்.
மாணவரின் முழுப் பெயர், மாணவரின் வயது, கல்வி கற்கும் பாடசாலை அல்லது பல்கலைக் கழகம், தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம், தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் விலாசம்:- (பெற்றோர் அல்லது பாதுகாவலர் விபரங்களும் இணைக்கப்படலாம்)

7. விபரங்கள் எமக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் பெப்ரவரி 12, 2021 வெள்ளிக்கிழமையாகும். அந்த திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. பரிசு பெறும் மாணவர்களுக்கு பணத்தொகையும் சான்றிதழ்களும் நேரிலோ, தபால் மூலமாகவோ அல்லது வங்கி கணக்கு ஊடாகவோ அனுப்பி வைக்கப்படும்.

## பரிசுகள்

| 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு | ஐந்து ஆறுதல் பரிசுகள் |
|---|---|---|---|
| 300 கனடிய டொலர்கள் | 200 கனடிய டொலர்கள் | 100 கனடிய டொலர்கள் | 50 கனடிய டொலர்கள் |

### ZOOM பெப்ரவரி 27, 2021 சனிக்கிழமை

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30

ஐரோப்பா - மாலை 3:00 | அவுஸ்ரேலியா - அதிகாலை 1:00

**Meeting ID: 812 3636 6126 | Passcode: 962261**

### ZOOM பெப்ரவரி 28, 2021 ஞாயிற்றுக்கிழமை

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30

ஐரோப்பா - மாலை 3:00 | அவுஸ்ரேலியா - அதிகாலை 1:00

**Meeting ID: 827 6566 9766 | Passcode: 892482**

### நடுவர்கள்:

பேராசிரியர் சங்கர நாராயணன் (தமிழ்நாடு) | வழக்கறிஞர் தி. இராமகிருஷ்ணன் (தமிழ்நாடு)
கலாநிதி நல்லையா குமரகுருபரன் (இலங்கை) | திரு. ஆர். சர்வேஸ்வரா (இலங்கை)
திரு. குயின்ரஸ் துரைசிங்கம் (கனடா) | திரு. நிமால் விநாயகமூர்த்தி (கனடா)
திரு. வீணைமைந்தன் சண்முகராஜா (... - கனடா)

சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதி :
பெப்ரவரி 12, 2021
E-mail: uthayannews@yahoo.com
WhatsApp : +1 416 732 1608
+1 416 587 0552


Our Media Partners
Analai Express HD
102.7 east FM தமிழ்
உலகத்தமிழர்
ஈழநாடு
ஈழமுரசு
Roobam FM Toronto Digital Radio
yugam radio
Easy News
eet TV
MONதமிழ்

SANTHA
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha Electical,Plumbing and drainage service Residential Commercial and industrial All Repairs & Renovations

Santha Plumbing and drainage service
Tel : 416 200 5470
info@santha.ca
www.santha.ca
Santha Panchalingam

CAMSONICS SECURITY SYSTEMS.INC
NO.1 NORTH AMERICAN PROFESSIONAL SECURITY COMPANY
WE ONLY DO PROFESSIONAL INSTALLATIONS AND CONCEAL WIRES IN THE ATTIC OR BEHIND THE WALLS

FULL HD
PROTECT YOUR HOME AND BUSINESS ANY TIME ANY WHERE IN THE WORLD
Rajeev Sebarasha : 647.302.5748

FRUITS HABY
மொன்றியல் நகரில் தரமான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு புகழ்பெற்ற தமிழர் பலசரக்கு நிலையம்
5925 Victoria Ave, Montreal, QC H3W 2R9

HOMELIFE TODAY REALTY LTD., BROKERAGE

VALLIKKANNAN MARUTHAPPAN
Direct: 416-880-6051 Bus: 416-298-3200
www.mvkhome.ca

வீடு விற்க! வாங்க
Award winning Agents will give you Professional, Reliable and Friendly Services
We can arrange Mortgage, Second Mortgage and Refinance.

ROYALAN
" Our clients are our value"
Ragu Thillainathan 416-629-5800
Kailain Thillainathan 647-668-8276
kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com


FACEDRIVE FOODS
டொரன்ரொவில் தற்போது உணவுப்பொருட்கள் விநியோகத்திற்கான Food Delivery App பயன்பாட்டில் உள்ளது
Local
Eco-Friendly
Affordable
நீங்கள் டொரன்ரொவில் ஒரு உணவகத்தையோ அன்றி பலசரக்கு கடையையோ நடத்துகின்றீர்களா?
தற்போது எம்மோடு இணைந்துள்ள சுமார் 300 உணவகங்களோடு நீங்களும் ஒருவராக இணைந்து எமது வாடிக்கையாளர்களான 250000 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களை எமது Food Delivery App ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.
Sign Up Today
இப்போதே எங்களோடு பதிவு செய்து மகிழ்வடையுங்கள்:
*குறைந்த கட்டணத்தில் விநியோகக் கட்டணங்கள்
*இலவசமாக உபகரணமும் பிறிண்டரும் கிடைக்கும்
*இலவசமான சந்தைப்படுத்தும் சேவைகள்
உங்களிடம் கேள்விகள் இருக்கின்றனவா?
அழையுங்கள்: 647 760 9272
Download on the App Store
Available on the Google Play


FACEDRIVE FOODS
டொரன்ரொவில் தற்போது உணவுப்பொருட்கள் விநியோகத்திற்கான Food Delivery App பயன்பாட்டில் உள்ளது
உங்களுக்கு மேலதிகமான வருமானம் தேவைப்படுகின்றதா?
ஒரு நாளைக்கு*
$200
சம்பாதிக்கலாம்
Become a driver
எமக்கு டெலிவரி சாரதிகள் தேவைப்படுகின்றார்கள்
உங்களிடம் கேள்விகள் இருக்கின்றனவா?
அழையுங்கள்: 647 760 9272
Download on the App Store
Available on the Google Play


Dream Design Build
Paramount
Custom Homes Ltd.
416-268-5296
www.paramountcustomhomesltd.net
REGISTERED BUILDER
TARION
TARION WARRANTY CORPORATION
Incredible Quality
Quick Turnaround
Competitive Prices
140-100 Cowdray Court, Scarborough, ON M1S 5C8
Paramountcustomhomesltd@gmail.com



# அமேசன் நிறுவனத்தின் தலைமை அதிகாரி பதவியில் இருந்து ஜெப் பெசோஸ் பதவியைத் துறந்தார்

உலகில் உள்ள சிறு குழந்தைகள் கூட உச்சரிக்கும் ஒரு வர்த்தகக் குறியீடு தான் அமேசன். இந்த உயர் நிறுவனத்தின் உயர் அதிகாரியும் உரிமையாளருமான பேசோஸ் தனது பதவியைத் துறந்துள்ளார்.

தனது வீட்டு வாகனத் தரிப்பிடத்தில் 30 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அமேசன் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி பதவியில் இருந்து ஜெப் பெசோஸ் விலகவுள்ளார்.

நிறைவேற்றுத் தலைவர் பதவியை ஏற்று தமது ஏனைய தொழில்முயற்சிகளில் கவனம் செலுத்தவிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். உலகின் பெரும் செல்வந்தராக இருக்கும் பெசோஸ், தற்போது அமேசனின் கிளவுட் கணினி வர்த்தகத்திற்கு தலைவராக இருக்கும் அன்டி ஜேசியை தனது பதவிக்கு நியமிக்கவுள்ளார்.

இந்த மாற்றம் 2021 இன் இரண்டாவது பாதியில் இடம்பெறும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

"அமேசன் நிறைவேற்று அதிகாரியாக இருப்பது மிகப்பெரிய பொறுப்பு என்பதோடு முழு அவதானத்தை செலுத்த வேண்டி ஒன்று. அவ்வாறாக பொறுப்பொன்றை வகிக்கும்போது வேறு எதிலும் கவனம் செலுத்த முடியாதுள்ளது" என்று அமேசன் ஊழியர்களுக்கு பெசோஸ் எழுதி இருக்கும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

அமேசன், ஒரு இணைய புத்தகக் கடையாக ஆரம்பிக்கப்பட்ட 1994 ஆம் ஆண்டு தொடக்கம் பெசோஸ் அதனை நடத்தி வருகிறார். அந்த நிறுவனத்தில் தற்போது உலகெங்கும் 1.3 மில்லியன் பேர் பணி புரிவதோடு தற்போது அது விநியோகங்கள், கிளவுட் சேவைகள் மற்றும் விளம்பரங்கள் போன்ற சேவைகளை வழங்கி வருகிறது. பெசோஸின் சொத்து மதிப்பு தற்போது 196.2 பில்லியன் டொலர்களாக உள்ளது.

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முதல்வர் வேட்பாளர் நிச்சயமாக 'மாவை' இல்லை என்கிறார் சத்தியலிங்கம்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முதல்வர் வேட்பாளர் நிச்சயமாக 'மாவை' இல்லை என்றும் அது பற்றி எமது மத்தியகுழு இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் சத்தியலிங்கம் அழுத்தமாகக் கூறியுள்ளார் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல்குழுக் கூட்டம் கடந்த 30ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்றிருந்தது.



இதன்போது, சிறிதரன் எம்.பி கருத்து தெரிவித்த போது, வடமாகாணசபை முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராஜா களமிறக்கப்பட வேண்டுமென்றார். சீ.வீ.கே.சிவஞானம் அதை ஆதரித்திருந்தார்.

இந்நிலையில், முதலமைச்சர் வேட்பாளர் யார்? என்பதில் எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லையென நேற்று முன்தினம் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

ஊடகங்கள்தான் இப்படியொரு குழப்பத்தை ஏற்படுத்தின, தமிழ் தேசியக் கூட்டமைப்பினதோ, தமிழரசுக் கட்சியினதோ முதலமைச்சர் வேட்பாளர் யார்? என்ற தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. நாங்கள் பல விடயங்களை கலந்துரையாடினோம், மாகாணசபையை குறித்தும் கலந்துரையாடினோம், ஆனால் முதலமைச்சர் வேட்பாளர் பற்றி தீர்மானங்கள் எடுக்கவில்லை.இவ்வாறு டாக்டர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

Carefirst Seniors & Community Services Association

கோவிட் -19
POP-UP சோதனை

உங்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் இருந்தால், அல்லது நீங்கள் COVID-19 உடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், தயவுசெய்து ஒரு சந்திப்பை பதிவு செய்து சோதனை செய்யுங்கள்.

எல்லாம் வரவேற்கத்தக்கது, வயது வரம்பு இல்லை. உங்கள் OHIP சுகாதார அட்டையை கொண்டு வாருங்கள். உங்களிடம் OHIP அட்டை இல்லையென்றால், தயவுசெய்து 1 துண்டு ஐடியைக் கொண்டு வாருங்கள்.

* தயவுசெய்து கவனிக்கவும், சர்வதேச பயண அனுமதிக்கு COVID-19 சோதனை கோரும் நபர்கள் பொதுவில் நிதியளிக்கப்பட்ட COVID-19 சோதனைக்கு தகுதியற்றவர்கள்

**Carefirst One-Stop Multi-Services Centre**
300 Silver Star Blvd, Scarborough ON M1V 0G2 (Midland & McNicoll)
ஒவ்வொரு வியாழக்கிழமை. தொடக்க தேதி: ஜனவரி 14
2:00 p.m. - 6:30 p.m.

**YMCA**
101 YMCA Blvd, Markham ON L6G 0A1 (Kennedy & Hwy 407)
ஒவ்வொரு புதன் & வெள்ளி. தொடக்க தேதி: ஜனவரி 30
9:30 a.m. - 2:30 p.m.

**Markham Chinese Presbyterian Church**
2250 Denison St, Markham ON L3S 1E9 (McCowan & Denison)
ஒவ்வொரு செவ்வாய் & புதன். தொடக்க திகதி: பிப்ரவரி 2
9:30 a.m. - 2:30 p.m.

உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்
www.carefirstontario.ca
Walk-In ஆனால் காத்திருப்பு நேரம் மாறுபடலாம்

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் www.carefirstontario.ca அல்லது அழைக்கவும் 416-646-5108

உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association
Carefirst Family Health Team
Health for All Family Health Team
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
YMCA of Greater Toronto

Updated on January 27, 2021


தற்பொழுது நடைபெறுகிறது
சங்கர் அன் கோ
Since 1988
மாபெரும் மலிவு விற்பனை!
இறக்குமதியாளர்கள், மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்
அனைத்து வீட்டு உபயோகப் பொருட்களின் புதிய வரவுகள் !
இல்லத்தரசிகளின் சமையற் கலைக்கான தேர்வுகளுக்கு தன்னிகரற்ற இடம் !
SOWBAGHYA
Preethi
ULTRA
சுவாமிப் படங்கள்
உணவுப் பொருட்கள்
பசுமையான மரக்கறி
மற்றும் பழவகைகள்
பூசைப் பொருட்கள்
ஆலயத்திற்குத் தேவையான
வழிபாட்டுப் பொருட்கள்
மங்கல நிகழ்வுகளான
திருமணம், குடிமனைபுகுதல்
ஆயுர்வேத மருந்துகள்
விசேட கூந்தல் தைலங்கள்
அனைத்து மூலிகைப் பொருட்கள்....
ASIA Kitchen Machines
PREETHI Premier Mixies
ULTRA Wet Grinder
SOWBAGHYA Wet Grinder
PREMIER Wet Grinder
மண் சட்டிகள்
மட் பானைகள்
மண் அடுப்புகள்
மண் கூசாக்கள்
மின் தேங்காய் துருவி
மண்வெட்டிகள்
அப்பச்சட்டி
குளிப்பணியாரச்சட்டி
சில்வர் பானைகள்
எவர் சில்வர் பாத்திரங்கள்
எவர்சில்வர் பேணிகள்
சாப்பாட்டுத் தட்டுகள்
அலுமினி/மண் பானைகள்
அடுக்குச் சட்டிகள்
பிட்டுக் குடம், பானைகள்
தோசைக் கல்லு, உரல்
தேங்காய் துருவிகள்
கத்தி, கரண்டிகள்
இன்னும் பல!
தைப்பொங்கல் புத்தாண்டு, மற்றும் ஆலய உற்சவங்கள். புதிய இல்லங்களின் கிரகப் பிரவேச வைபவங்கள். திருமணங்கள் மற்றும் விசேட வைபவங்கள் ஆகியவற்றுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் சங்கர் அன் கோவில் தவறாமல் கிடைக்கும்.
தற்போது தமிழர் புத்தாண்டை முன்னிட்டு, இல்லங்களுக்குத் தேவையான, குறிப்பாக சமையல் அறைக்குத் தேவையான Rice Cookers. Grinding Machines, Rotty Makers and Sumeet, Preeti, Premier Chefmaster Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து விமானங்களின் மூலம் இறக்குமதி செய்யப்பெற்றுள்ளன.
இன்றே தொலைபேசியில் அழைத்து உங்கள் வருகையை உறுதி செய்த பின்னர் முகக் கவசம் அணிந்து செல்லுங்கள்...
தற்போது காலை 8.30 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை திறந்திருக்கின்றது
அனைத்து விதமான பசுமைமிகு பூக்கள்
மல்லிகை மொட்டு
கனகாம்பரம்
தாமரைப் பூ
சாமந்தி, அலரி
ரோஜாப்பூக்கள்
அல்லிப் பூ
கார்னேஷன் பூ
வாழை இலை
மாவிலை, அறுகு
வில்வம், துளசி, அரசிலை
பூச்சரம் எல்லா நாட்களும் கிடைக்கும்!
பிற்புறத்தில் தாராளமான வாகனத் தரிப்பிடமுண்டு
SHANKAR & Co.
2425 Eglinton Avenue East, Unit 6, Scarborough, ON M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916
(Kennedy & Eglinton)
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்!
OPEN 7 Days a week

# கனடாவில் தேசிய ஊடகங்களுக்கு இணையாக பல்கலாச்சார ஊடகங்கள் ஊடகப் பணியாற்றுகின்றன

## ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் புகழாரம்

**(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)**



“கனடா ஒரு பல்கலாச்சார நாடு. இங்கு உலகெங்கும் உள்ள நூற்றுக்கணக்கான நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்த பல்வேறு இன, மத. மொழி சார்ந்த மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றன. இந்த மாகாணத்தின் முதல்வர் என்ற வகையில் நான் கடந்த சில வருடங்களாக அவதானித்தது என்னவென்றால் இங்கு பல வருடங்களாக இயங்கிவரும் பத்திரிகைகள், தொலைக் காட்சிகள் மற்றும் வானொலிகள் ஆகிய தேசிய ஊடகங்களுக்கு இணையாக கடந்த அரை நூற்றாண்டுக்கு உட்பட்ட காலத்தில் கால்பதித்த பல்கலாச்சார ஊடகங்கள் ஊடகப் பணியாற்றுகின்றன. அவற்றின் ஊடகச் சேவையை முதல்வர் என்ற வகையில் நானும், எனது அமைச்சர்களும், ஏனைய மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கண்டு வருகின்றோம். அவற்றின் பயன்பாடுகளை நாங்கள் தெரிந்து கொண்டுள்ளோம்”.

இவ்வாறு படிபுகழாரம் சூட்டினார், ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள். கொரோனாவின் பிடிக்குள் சிக்குப்பட்டுள்ள மக்களைக் காப்பாற்றுவதற்காக கனடாவில் மத்திய அரசின் பிரதமர் அவர்களும் ஏனைய மாகாண அரசுகளின் முதல்வர்களும் தினந்தோறும் கனடாவின் தேசிய ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கி வருகின்றனர். கோவிட்-19 தொற்றின் பாதிப்புக்கள், அந்த பாதிப்புக்களிலிருந்து மக்களைக் காப்பாற்ற தமது அரசுகள் என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன, என்ற தகவல்களை அவர்கள் வழங்கிவருகின்றார்கள்.

இவ்வாறான ஊடகச் சந்திப்புக்களின் வரிசையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையன்று காலை கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பல்மொழிப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் தொலைக்காட்சி, வானொலி ஆகிய ஊடக நிறுவனங்களின் செய்தியாளர்களை ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக்போர்ட் அவர்கள் இணையவழி ஊடாக சந்தித்து உரையாடினார்.

முதலில் முதலவர் அவர்கள் தமது அரசின் கோவிட்-19 தொற்று மற்றும் அதன் பாதிப்புக்கள் போன்ற விடயங்களையும், தற்போது. பாவனைக்கு வந்துள்ள தடுப்பூசி வழங்கல் விடயமாக தமது மாகாண அரசாங்கம எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்கொள்ளும் சவால்கள் ஆகியவற்றை விளக்கினார்.

மேலும், தமது ஒன்றாரியோ அரசாங்கத்தில் பதவி வகிக்கும் சுகாதார அமைச்சர், கல்வி அமைச்சர், நிதி அமைச்சர் ஆகியோரும் ஏனைய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோர் சிறந்து சேவைகளை வழங்கும் முறைகள் பற்றியெல்லாம் விளக்கினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இந்த கொடிய தொற்று நோய் காலத்தில் பல் கலாச்சார ஊடக நிறுவனங்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் மற்றும் சவால்கள் ஆகியன தொடர்பான எடுத்துக் கூறி, தனது நிர்வாகத்தின் கீழ், கனடாவின் தேசிய ஊடகங்களுக்கு வழங்குகின்றன வாய்ப்புக்கள் மற்றும் சலுகைகள் போன்று, பல்கலாச்சார ஊடகங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், அதனை பயன்படுத்திக் கொள்ளுமாறும் அனைவரையும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து முதல்வர் அவர்கள் பல்லினப் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு ஆணித்தரமான பதில்களை அளித்தார். குடிவரவு மற்றும் வேலை வாய்ப்பு தொடர்பாக பத்திரிகையாளர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்று பதிலளித்த முதல்வர் அவர்கள், கனடாவிலும் குறிப்பாக பெரிய மாகாணமான ஒன்றாரியோவிலும் அதிகளவில் வேலை வாய்ப்புக்கள் உள்ளதாவும், அதற்கு வெளிநாடுகளிலிருந்து தகுதியானவர்களை குடியேற்றும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும் படி தான் கனடியப் பிரதமரை கேட்டுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

மொத்ததத்தில் அன்றைய பத்திரிகையாளர்கள் சந்திப்பானது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அத்துடன் கனடாவில் செயற்பட்டு வரும் பல்கலாச்சார ஊடக நிறுவனங்களுக்கு பாராட்டுக்கள் கிட்டிய ஒரு அரச ஒன்றுகூடலாகவும் விளங்கியத என்றே கூறலாம்.



# கோட்டாபய சொல்லும் பவுத்தம் ஏனைய மதத்தவர்கள் மீது போர் தொடுக்கும் வெறிபிடித்த சிங்கள - பவுத்தமாகும்!

கனடா - நக்கீரன்

இலங்கையின் 73 ஆவது சுதந்திர நாள் தென்னிலங்கையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டுள்ளது. அதே நேரம் வடக்கிலும் கிழக்கிலும் சுதந்திர நாள் தமிழ்பேசும் மக்களால் கொண்டாடப்படவில்லை. மாறாக அந்த நாள் ஒரு கரிநாளாக, ஒரு துக்கநாளாகக் கொண்டாடப்பட்டது. காணாமல் போனவர்களது உறவினர்கள் கிளிநொச்சியில் கருப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு. வாய்களை கருப்புத் துணியால் கட்டியிருந்தனர். பெப்ரவரி 4 சுதந்திர நாளை கரி நாளாக அனுட்டிக்குமாறு இந்த அமைப்பு பொதுமக்களை அறிக்கை மூலம் கேட்டிருந்தது.

ஒரு நாட்டின் சுதந்திரக் கொடி என்பது அந்த நாட்டின் அடையாளம். இந்தியா போன்ற நாடுகள் பல ஆண்டுகள் போராடி சிறை சென்று, குருதி சிந்தித்தான் அந்நியரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றன.

இலங்கை இலைவாடாமல் சுதந்திரம் பெற்ற நாடு என்பார்கள். அண்டை நாடான இந்தியா சுதந்திரம்பெற்ற காரணத்தால் இலங்கைக்கும் சுதந்திரம் கிடைத்தது என்பதே உண்மையாகும்.

1945 ஒக்தோபரில் இலங்கைச சட்டசபையில் தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும் வெள்ளை சோல்பரி அரசியலமைப்பு வெள்ளை அறிக்கையை ஏற்றுக்கொள்வதாக ஒருமனதாக வாக்களித்ததைத் தொடர்ந்து பேசிய சுதந்திர இலங்கையின் முதல் பிரதம மந்திரி டி.எஸ். சேனநாயக்க தமிழ் மற்றும் பிற சிறுபான்மை சமூகங்களுக்கு பின்வரும் வாக்குறுதியை அளித்தார்.

"நீங்கள் இலண்டனில் இருந்து ஆளப்படுவதை விரும்புகிறீர்களா அல்லது, இலங்கையை, இலங்கையரால் ஆள விரும்புகிறீர்களா? இலங்கை தேசிய காங்கிரஸ் சார்பாகவும் (1919 இல்



சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களால் உருவாக்கப்பட்டது) மற்றும் எனது சார்பாகவும், சிறுபான்மை சமூகங்களுக்கு ஒரு சுதந்திர இலங்காவில் எங்கள் கைகளில் எந்தத் தீங்கும் நடைபெறாது என்று நான் உறுதியளிக்கிறேன். "

டி.எஸ். சேனநாயக்கா நுனிநாக்கில் தேனும் அடிநாக்கில் நஞ்சும் வைத்துப் பேசினார் என்பது இலங்கை சுதந்திரம் பெற்ற அதே ஆண்டில் அம்பலமாகியது.

மலையகத்தில் தேயிலை, இரப்பர் தோட்டங்களில் மாடாய் உழைத்து ஓடாய் போன எட்டு இலட்சம் இந்திய வம்சாவழித் தமிழர்களது குடியுரிமை 1948 இல் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் மூலம் பறிக்கப்பட்டது. அடுத்த ஆண்டு வாக்குரிமைச் சட்டத்தில் ஒரு ஒற்றைவரி திருத்தத்தைக் கொண்டு வந்து இலங்கைக் குடியுரிமை உள்ளவர்களே தேர்தல்களில் வாக்களிக்கலாம் எனப்பட்டது.

இதனால் 1947 இல் நடந்த தேர்தலில் ஏழு உறுப்பினர்களை நாடாளுமன்றம் அனுப்பி வைத்த மலையக மக்கள் 1952 இல் நடந்த தேர்தலில் ஒருவரைக் கூட நாடாளுமன்றம் அனுப்ப முடியவில்லை.

டி.ஸ். சேனநாயக்கா தொடக்கி வைத்த கல்லோயா, அல்லை - கந்தளாய் போன்ற சிங்களக்



குடியேற்றத் திட்டங்களை அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த அத்தனை சிங்களத் தலைவர்களும் மேலும் பல பாரிய திட்டங்களைக் கிழக்கில் தொடக்கி முடித்தார்கள். இதனால் கிழக்கில் தமிழர்கள் இன்று சிறுபான்மையராக மாற்றப்பட்டுள்ளனர்.

வடக்கில் மணலாற்றுத் (வெலி ஓயா) திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு புதிய பிரதேச செயலாளர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. பதினெட்டு கிராமங்களை உள்ளடக்கிய இந்த மணலாறு (வெலி ஓயா) பிரதேச செயலாளர் பிரிவில் 3,336 குடும்பங்கள் (11,189 குடியிருப்பாளர்கள்) வாழ்கிகிறார்கள்.

இப்போது சனாதிபதி கோட்டாபய இராசபக்ச ஆட்சிக்கு வந்த பின்னர் வட- கிழக்கில் சிங்கள மயப்படுத்தலோடு பவுத்த மயப்படுத்தல் முடுக்கி விடப்பட்டுள்ளது. இதனால் வட - கிழக்கில் புராதன இந்துக் கோயில்கள் இருக்கும் இடங்களில் தொல்பொருள் திணைக்களம் மற்றும் சனாதிபதி செயலணி அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன. பல ஆயிரம் ஏக்கர் தனியார் காணிகளை தொல்பொருள் திணைக்களம் அரசிதழ் மூலம் கையகப்படுத்தி வருகிறது.

இந்தச் செயலணியிலுள்ள பவுத்த தேரரான எல்லாவல மேதானந்த தேரர் கிழக்கு மாகாணத்தில் 10, 000 தொல்பெருள் எச்சங்கள் உண்டு என்றும் அவற்றில் இதுவரை 1,000 மட்டுமே கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன எனவும் அவை அழிக்கப்படுகின்றன என்று கூறுகிறார்.

அவரை மிஞ்சும் வண்ணம் தொல்லியல் சக்கரவர்த்தி எல்லாவல மேத்தானந்தா தேரர் திருக்கோனேச்சுரம்,



மகாசேனன் காலத்தில் பவுத்த தலமாக இருந்ததாகவும் பின்னர் இடம்பெற்ற தென்னிந்திய படையெடுப்புக்களால் அது இடிக்கப்பட்டு அந்த இடத்தில்தான் தற்போதுள்ள கோணேச்சுவரம் கட்டப்பட்டதாகவும் வாதிட்டு வருகின்றார்.

இன்று நடந்து முடிந்த இலங்கையின் 73 ஆவது சுதந்திர நாள் வைபவத்தில் பேசிய சனாதிபதி கோட்டபாய "நான் சிங்கள - பவுத்த மக்களது தலைவன். இதைக் கூற நான் ஒருபோதும் தயங்கேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டாபய இராசபக்ச இப்படிப் பேசுவது இது முதல் தடவையல்ல. சனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு முன்னரும் அதன் பின்னரும் எந்த ஒளிவு மறைவின்றி இது போன்று பேசிவருகிறார். தான் சிங்கள - பவுத்த மக்களது வாக்குப் பலத்தினால் மட்டும் சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவன் எனவே நான் அவர்களது விருப்பப்படியே ஆட்சி செய்வேன் என்கிறார்.

இப்படி வேறு நாட்டு ஆட்சித்தலைவர்கள் பேசுவதில்லை. பேச நினைத்தாலும் பேசக் கூச்சப்படுவார்கள். ஆனால் கோட்டாபய இராசபக்ச அவர்களுக்கு அப்படியான கூச்சம் - மனத்தடங்கல் எதுவுமில்லை.

இந்த ஆண்டும் தமிழில் தேசிய கீதம் பாடப்படவில்லை. ஓரே நாடு ஓரே சட்டம் என்ற கோட்பாட்டுக்கு அமைய தமிழ் மொழி தேசிய கீதம் புறக்கணிக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் சிங்களவர்கள் போலவே இலங்கையின் பூர்வீக குடிகள். இலங்கையில் விஜயனும் அவனது தோழர்களும் காலடி எடுத்து வைப்பதற்கு முன்னரே இங்கு பஞ்ச ஈச்சுரங்கள் இருந்திருக்கின்றன.

1917 ஆம் ஆண்டில் ரோயல் ஏசியாட்டிக் கூட்டத்தின் போது கலாநிதி போல் ஈ. பீரிஸ் " விசயனின் வருகைக்கு முன்பே இந்திய வழிபாட்டு அம்சத்தைக் கொண்டுள்ள பஞ்ச ஈஸ்வரங்கள் காணப்பட்டன" என உறுதிசெய்துள்ளார். **(Dr. Paul E. Pieris declared in 1917 at a meeting of the Royal Asiatic Society (Ceylon Branch) that: Long before the arrival of Vijaya there was in Lanka five recognised Ishwarams of Shiva which claimed and received adoration of all India")**

இந்த ஐந்து ஈச்சுரங்கள் நாட்டின் கரையோரப் பகுதிகளில் ஒவ்வொரு திசையிலும் அமைந்திருக்கின்றன. இராவணன் தென் இலங்கையை ஆட்சி செய்த காலத்திலே தட்சிண கைலாயம் எனப் போற்றப்படுகின்ற திருக்கோணேச்சரத்தைப் பூசித்து வந்தான் என்று மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூல் கூறுகின்றது. இந்த ஐந்து ஈச்சுரங்களில் திருகோணேச்சுரம் மற்றும் திருக்கேதீச்சுரம் பாடல் பெற்ற ஈச்சுரங்கள் ஆகும்.

அனுராதபுரத்தை ஆண்ட தேவநம்பிய தீசன் (கிமு 307 - கிமு. 267 ) என்ற நாகவம்ச மன்னனே பவுத்த மதத்தைத் தழுவிய முதல் நாக அரசனாவான். விஜயன் முதற்கொண்டு தேவநம்பிய தீசனின் மூத்த சிவன் (கிமு 367 - கிமு 307) வரை எல்லோரும் வைதீக மதத்தினராக இருந்தனர்.

மேலும் பேசிய சனாதிபதி கோட்டாபய இராசபக்ச தான் ஒரு பவுத்தன் என்றும் பவுத்த சித்தாந்தங்களுக்கு அமையவே நாட்டை ஆள்வேன் என்றும் நாட்டில் அனைத்து இன மற்றும் மதக் குழுக்களுக்கும் உரிய இடத்தை வழங்கும் என்றும் அஹிம்சைவாத பௌத்த வழிகாட்டல்களின் கீழ் நடைமுறையில் உள்ள சட்ட திட்டங்களுக்கு அமைவாக அனைவரும் சமமாக வாழும் உரிமை உண்டு எனத் திருவாய் மலர்ந்துள்ளார்.

ஆனால் நடைமுறையில் பவுத்த மதத்துக்கு முன்னுரிமை

கொடுக்கப்படுவ-தால் சிங்கள - பவுத்தர்கள் முதல் தர குடிமக்களாகவும் மற்ற மதத்தவர்கள் இரண்டாம், மூன்றாம் தர குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள்.

உண்மை என்னவென்றால் புத்தபெருமான் அருளிய பவுத்தம் வேறு, கோட்டாபய குறிப்பிடும்

பவுத்தம் வேறு. கோட்டாபய குறிப்பிடும் பவுத்தம் சிங்கள - பவுத்தம் ஆகும். அது புத்தர் போதித்த பவுத்த நெறி அல்ல. புத்தர் மனிதர்களிடம் மட்டுமல்ல விலங்குகள், தாவரங்கள் என சகல உயிரினங்கள் மீதும் அன்பு - கருணை காட்டப்பட வேண்டும் எனப் போதித்தார். பவுத்த சித்தாந்தம் மிக எளிமையானது. புத்தர் கண்ட நான்கு வாய்மைகள் ஆவன:

(1) துன்பம் (துக்கம்). மனிதர்களால் துன்பத்தைத் தவிர்க்க முடியாது. பிறப்பு, நோய், முதுமை, இறப்பு ஆகியவை மனிதருக்குத் துன்பத்தைத் தருபவை. பசி, பகை, கொலை, வெகுளி, இழப்பு, மயக்கம் போன்றவையும் துன்பம் தருபவையே.

(2) துன்ப காரணம். துன்பத்துக்கான காரணம் ஆசை அல்லது பற்று.

(3) துன்ப நீக்கம். ஆசையை விட்டுவிடுவதுவே துன்பத்தை நீக்கும் முறைமை.

(4) துன்பம் நீக்கும் வழி. எட்டு நெறிகள்: எட்டு நெறிகளும் துக்கத்தைப் போக்க உதவும் வழிமுறைகள் ஆகும்.

பாலிமொழியில் இவை துக்கம், துக்க காரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என அழைக்கப்படுகிறது. துன்பத்தைப் போக்கி வீடு பேறாகிய நிர்வாண மோட்சத்தையடைவதற்குரிய வழி யாது எனில், அட்டாங்க மார்க்கம் என்னும் எட்டு வகை ஒழுக்கத்தை மேற்கொண்டு ஒழுகுவதாகும். அஷ்டாங்க மார்க்கமாவன:

1. நற்காட்சி, 2. நல்லூற்றம், 3. நல்வாய்மை, 4. நற்செய்கை 5. நல்வாழ்க்கை 6. நல்லூக்கம் 7. நற்கடைப்பிடி மற்றும் 8. நல்லமைதி.

இந்த அஷ்டாங்க மார்க்கத்தில் சீலம் (ஒழுக்கம்), சமாதி (தியானம்), பஞ்ஞா (ஞானம்) என்னும் மூன்றும் அடங்கும்.

சீலம் என்பது பஞ்ச சீலம், அஷ்டாங்க சீலம், தச சீலம் என மூன்று வகைப்படும். பஞ்ச சீலமாவது:

1. ஒருயிரையும் கொல்லாமலும் தீங்கு செய்யாமலும் இருத்தலோடு அவற்றிடம் அன்பாக இருத்தல்.
2. பிறர் பொருளை இச்சிக்காமலும் களவு செய்யாமலும் இருத்தல்.
3. முறை தவறிய சிற்றின்பத்தை நீக்குதல்.
4. உண்மை பேசுதல், பொய் பேசாதிருத்தல்.
5. மயக்கத்தையும், சோம்பலையும் உண்டாக்குகிற



மதுபானங்களை உட்கொள்ளாமை.

இந்தப் பஞ்ச சீலங்கள் இல்லறத்தார்க்கு உரியன. இவற்றோடு,

6. இரவில் தூய்மையான உணவை மிதமாக உண்ணல்.
7. பூ, சந்தனம், வாசனைச் சுண்ணம், எண்ணெய் முதலிய நறுமணங்களை நுகராமை.
8. பஞ்சணை முதலியவற்றை நீக்கித் தரையில் பாய்மேல் படுத்து உறங்குதல

என்னும் மூன்றையும் சேர்த்து அ்ʻடசீலம் (எட்டு ஒழுக்கம்) என்பர். அஷ்டசீலம் இல்லறத்தாரில் சற்று உயர்நிலை அடைந்தவர் ஒழுக வேண்டிய ஒழுக்கங்களாகும். இவற்றோடு,

9. இசைப்பாட்டு, கூத்து, நாடகம் முதலிய காட்சிகளைக் காணாதிருத்தல்.
10. பொன், வெள்ளி முதலியவற்றைத் தொடாதிருத்தல்.

ஆகிய இவை இரண்டும் சேர்த்துத் தசசீலம் (பத்து ஒழுக்கம்) எனப்படும். தசசீலம் தேரர்கள் ஒழுகவேண்டிய ஒழுக்கமாகும். தசசீலத்தில் ஒழுகும் துறவி, சிற்றின்பத்தை அறவே ஒழிக்கவேண்டும். தசசீலங்களை மேற்கொண்டு, அடக்கமான பேச்சையும், அடக்கமான செயலையும் உடையவராய், உலகப் பற்றுக்களை நீக்கித் துறவறத்தை மேற்கொண்டவரே தேரர் ஆவர்.

புத்தரின் மேற்கண்ட சித்தாந்தங்களுக்கு அமைய கோட்டாபய இராசபக்ச ஆட்சி செய்தால் சிக்கல் இல்லை. ஆனால் நடைமுறையில் நாம் காணும் பவுத்தம் ஏனைய மதத்தவர்கள் மீது போர் தொடுக்கும் வெறிபிடித்த சிங்கள - பவுத்தமாகும்.

*- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

#32

# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்



1952ல் வெளிவந்த நடிகர்திலகம் அவர்களது முதலாவது படத்தில் (பராசக்தி) ஒரு காட்சியில் பர்மாவில் இருந்து கப்பல் மூலம் பயணம் செய்து சென்னைப் பட்டினம் வந்து சேர்ந்தவுடன் ஒரு டாக்ஸியில் தங்குவதற்கு ஒரு விடுதியை நோக்கி வரும் வழியில் சிக்னலில் வண்டி நிற்கும்.

அப்போது வீதியில் பிச்சை எடுக்கும் ஒருவன் “சாமி தர்மம் போடுங்க” என்பான் பதிலுக்கு சிவாஜி “சரிதான் போ தமிழ்நாட்டின் முதல் குரலே நல்லா இருக்கே” என்பார்.

சிவாஜி ஐயாவின் பதிலுக்கூடாக அப்போதைய காங்கிரஸ் ஆட்சியின் ஏழை எளிய மக்களின் வறுமை நிலையை சாடுவதாக கலைஞர் வசனம் எழுதியது மாத்திரமல்ல தமிழ் சினிமாவில் இனிமேல் ஒலிக்கப் போகும் “முதல் குரல்” “தமிழ் குரல்” சிவாஜி கணேசனுடையதே என்பதையும் சூசகமாக அறிய வைத்திருப்பார்!

“நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம் யாநலத்து உள்ளதூஉம் அன்று”, எனு. அதிலுள்ள நன்மை வேறு எந்த செல்வத்திலும் இல்லை” என்னும் கருத்துக்குச் சொந்தக்காரர் குரல் வளம் மிகுந்த நமது நடிகர் திலகமாகும்.

தமிழ் மொழியை உணர்ச்சி பாவங்களுடன் ஏற்ற இறக்கங்களுடன் கேட்பவர்களை வசீகரிக்க கூடியதாகவும் பகைவர்களும் கேட்டு மகிழ்ச்சி கொள்ளக் கூடியதாகவும், பேசுவதற்கு ஏற்ற குரல் வளம் கொண்டவரின் “குரல்“ வானொலிக்கு ஏற்றதல்ல என்று நிராகரிக்கப்பட்ட நிகழ்வு உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்!

கனடாவில் வாழும் இலங்கை (யாழ்ப்பாணம்) தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவரான திரு அ. முத்துலிங்கம் என்பவர் ரொரென்ரோவில் இருந்து வெளியாகும் மாத இதழான “தாய்வீடு“ (ஜூன் 2016) பத்திரிகையில் “சிவாஜியின் குரல்“ என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அகில இந்திய வானொலியில் சென்னை நிலையத்தில் பணிபுரிந்த திரு சிவராமகிரு‘ணன் கூறியதாக “சிவாஜியின் குரல் வானொலிக்கு ஏற்றதல்ல“ எனும் கருத்தைப் பதிவு செய்தும், பின்னாளில் “சிவாஜியின் குரல்“ எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என அவரின் குரலை கொண்டே அவரது வாழ்க்கைக் குறிப்புகளைப் பதிவு செய்து ஆவணப்படுத்திய வரலாற்றை சுருக்கமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

திரு. அ முத்துலிங்கம் அவர்களும் தீவிர சிவாஜி ரசிகர் போலும். ஏனெனில் ”சிவாஜியின் குரல் ரேடியோவுக்கு ஏற்றதில்லை”, என்றதும் ”என்ன!” என அலறியிருக்கிறார்.

அகில இந்திய வானொலி நிலையப் பணிப்பாளர் என்ன சொன்னார் என்பதை பார்ப்போம். ”என் மேலதிகாரிகள் ஒரு முடிவெடுத்திருக்கிறார்கள். முன்னணி நடிகர்கள் - எழுத்தாளர்கள் - அரசியல்வாதிகள் - கல்விமான்கள் - சமூக சேவையாளர்கள் போன்ற பிரபலமானவர்களை நேர்காணல் செய்து அவர்கள் குரலிலேயே அதைப் பதிவு செய்து பாதுகாக்க வேண்டும்”, என்ற வேலையை என்னிடம் ஒப்படைத்தார்கள்.

”எனக்கு மிக்க மகிழ்ச்சி சிவாஜி அவர்களின் குரலை பதிவு செய்ய முடிவு எடுத்து அனுமதி பெற டெல்லி தலைமைக்கு எழுதினேன்”.

”டெல்லி தலைமையிடத்து ஆசாமிகள் “யார் இந்த சிவாஜி“! இவர் இந்திய பிரபலமா? பிராந்திய பிரபலமா? அல்லது உலக பிரபலமா? என வினவினார்கள்! அப்போது சிவராமகிருஷ்ணன் ஆவேசத்துடன் சொல்ல மறந்ததை நான் மிகவும் ஆவேசம் கொண்டு பதிவு செய்கிறேன். அட! டெல்லி பாலாக்களே! முதன்முதல் இந்தியாவுக்கு எகிப்து நாட்டின் தலைநகரான கெய்ரோவில் நடந்த ஆசிய ஆப்பிரிக்க பட விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட படமான “வீரபாண்டிய கட்டபொம்மன்“ சிறந்த படத்திற்குரிய விருதையும், சிறந்த நடிகருக்கான விருதையும் பெற்றுத் தந்த ஒரே கலாமேதை நமது சிவாஜி என்பதையும், (1959க்குப் பின் இதுவரை எவரும் பெறவில்லை!) 1962ல் அமெரிக்கக் குடியரசின் அழைப்பின் பெயரில் இந்திய அரசின் கலை கலாச்சார தூதுவராக அழைக்கப்பெற்று நயகரா நகரின் ஒரு நாள் சிறப்பு மேயருக்கான தங்க சாவியை பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்குப் பின் பெற்றுத்தந்த பாரத குடிமகன் நமது நடிகர் திலகம் ஒருவர் மட்டுமே என்ற வரலாறு தெரியாத உங்களுக்கு கற்பூர வாசனை எப்படி மணக்கும்!

அது மாத்திரமல்ல, “நடிகர் திலகம்“ அவர்கள் உயிரோடு இருந்தவரை அவர் தமிழன் என்பதற்காக அவருக்கு வழங்க வேண்டிய அதிஉயர் விருதுகளையும், “பாரத ரத்னா“ போன்ற கௌரவங்களையும் தகுதியற்றவர்களுக்கு வழங்கி அவரை புறக்கணித்தவர்கள் என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. அவ்வப்போது சில சமயங்களில் “தாதாசாகேப் பால்கே விருது“ போன்ற விருதுகளை சுயநலம் கருதி வழங்கியுள்ளார்கள். வானொலி நாடகத்தில் நடிப்பதற்காக விண்ணப்பம் செய்து குரல் தேர்வில் நிராகரிக்கப்பட்ட சிவாஜி அவர்கள், ”இனிமேல் என் வாழ்க்கையில் அகில இந்திய வானொலிக்கும் எனக்கும் ஒரு வித சம்பந்தமும் கிடையாது. அகில இந்திய வானொலி சென்னை நிலையத்தின் வாசல்படியை என்றென்றும் மிதிக்க மாட்டேன்” என சபதமெடுத்திருந்தார்.




இவ்விதம் கசப்பான அனுபவம் சிவாஜி அவர்களுக்கு ஏற்பட்டதை அறிந்த திரு சிவராமகிருஷ்ணன் பலமுறை சிவாஜி அவர்களிடத்தில் பகீரத முயற்சி எடுத்து ”ஐயா! நீங்கள் மாபெரும் கலைஞர் உலகத்தரத்தில் மக்களால் உயர்த்தி வைக்கப்பட்டிருக்கிறீர்கள். எப்போதோ, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் நடந்து போன ஒரு விஷயத்திற்காக இந்த அருமையான வாய்ப்பை நீங்கள் இழக்கலாமா, உங்கள் அதிகாரப்பூர்வமான சுயசரிதை உங்கள் சொந்த குரலிலேயே பதிவு செய்யப்பட்டு என்றென்றும் பாதுகாக்கப்படும் என்பது எத்தனை பெருமை வாய்ந்தது! தமிழ் மக்களுக்கு இழைக்கும் துரோகம் என்றல்லவா நினைப்பார்கள். சிவாஜி கொஞ்சம் மனமிறங்கி திரு சிவராமகிரு‘ணனின் அன்பும் - பாசமும் அவரை ஆட்கொள்ள, ஒரு நல்ல நாளில் மங்கள வாத்தியம் முழங்க மாலை மரியாதையுடன் மக்கள் புடைசூழ வானொலி நிலையத்திற்கு வரவேற்று ”இந்த தம்பியின் தொடர்ந்த வற்புறுத்தலால் சம்மதம் தந்தேன். இதுதான் என்னுடைய உத்தியோகபூர்வமான சுயசரிதை” என்றார்.

பின்னாளில் எவருக்கும் சந்தேகம் இல்லாத வகையில் அந்தப் பெரிய மனிதர் என்னுடைய பணியின் முக்கியத்துவத்தை பதிவு செய்துவிட்டார். இன்றும் அந்த ஒன்பது மணி நேர ஒலிப்பதிவு சிவாஜியின் குரலாக சென்னை வானொலி நிலையத்தில் பாதுகாக்கப்படுகிறது!

(நன்றி - தாய்வீடு, ரொரென்ரோ)

முன்பு பல சந்தர்ப்பங்களில் என்னால் எழுதப்பட்ட கட்டுரைகளின் வாயிலாகவும் பேச்சின் மூலமும் கல்லூரிக்கு வெளியே என்னைப் போன்றோரின் தமிழ் ஆசானாக விளங்கி எங்களை புடம் போட்டவர் நடிகர்திலகம் என்றால் மிகையாகாது எனக் கூறி வந்துள்ளேன்.

வட்டார வழக்காலும் - கொச்சைத் தமிழாலும் தமிழை காயப்படுத்தாது எழுதுவது போன்றே பேசும் பழக்கத்தை வளர்த்துக் கொண்டவன் நான். இப்பழக்கத்திற்கு முன்மாதிரி சிவாஜி தமிழின் குரல் வளம், உச்சரிப்பேயாகும்! புராண - இதிகாச - சமூக படைப்புகள் - பாத்திரங்களின் வாயிலாக சிவாஜி ஐயா பேசும் போது அவருடைய குரல் வளம் ஏற்ற இறக்கங்களுடனும் - உணர்ச்சிபாவங்களுடனும் வெளிப்படும் போது தமிழ் மொழிக்கே உரித்தான அன்பு - பாசம் - கருணை - வீரம் - காதல் ஆகியவற்றை மெய்சிலிர்க்க வைக்கும் தனது குரல் வளத்தால் வெளிப்படுத்துவார். ஏற்றுக்கொண்ட கதாபாத்திரத்திற்காக அவரது குரல் மாடுலே‘ன் அபாரமானது!

பேசிப் பழகுபவர்களுக்கும் - நடிப்பின் மேல் ஆர்வம் கொண்டவர்களுக்குமாக ஏ எல் எஸ் ப்ரொடக்ஷன் தயாரித்து வெளியான “சாந்தி“ (1965) திரைப்படத்திலிருந்து ஒரு காட்சியை நினைவூட்ட விரும்புகிறேன். இதை ஒரு கனவு காட்சியாகக் கற்பனை செய்து கொள்வோம். சந்தர்ப்பவசத்தால் நண்பனின் மனைவிக்கு (பார்வையற்றவர்) கணவனாக நடிக்க வேண்டிய சூழ்நிலையில் மனம் போராடுகிறது. வசனகர்த்தா எம்.எஸ் சோலைமலை சிவாஜிக்காகவே எழுதிய வசன கோர்வை. அவரது தனி நடிப்பு போல் இக்காட்சி அமைந்திருக்கும். உணர்வுகளுக்கேற்றார்போல் குரல்வளத்தால் பிய்ச்சு உதறுவார். இதோ அந்த காட்சி...

பல்வேறு உள்ளக் குமுறல்களை பிரதிபலிக்கும் குரல் வளம்.
”வருகிறேன்”
”கீழே வருகிறேன்”
”வாழ்வுக்காக அல்ல..! கேள்விக்காக..!”
”இதுவரை யாருமே கேட்டிருக்க முடியாத கேள்வி!



ஒரு பெண்ணுக்கு தாலி கட்டிய கணவனா? அல்லது சந்தர்ப்பத்திற்காக கணவனாக காட்சி அளித்தவன் கணவனா? நான் தான் அவளது கணவன் என்பதை ஒத்துக்கொள்ள மாட்டேன். ஆனால் அவன் தான் அது என்பதை அவளும் ஒத்துக் கொள்ள மாட்டாள்! பாவம் அந்த பெண்! அவன் தான் அத்தான் என்பதும் - அவன் செத்தான் என்பதும் - திரும்பி வந்தான் என்பதும் அவள் உள்ளம் அறியாது! அவனிருக்க நானா?... நிலவிருக்க நிழலா? தெய்வம் இருக்க வெறும் கல்லா? இதோ பச்சைக்கொடி! சுவற்றின் மீது படர்ந்திருக்கிறது. ஏன்? அதற்குரிய கொழுகொம்பில்லை... அதனால்.. ஒட்டாத உறவு.! வேர் ஒட்டாத நீர் செடியைப் போல்.. எனக்கும் அவளுக்கும்.. சொன்னால் மானம் போகும்.. சொல்லாவிட்டால் உயிர் போகும்.. போகட்டுமே.. போகட்டும்.. திக்குத் தெரியாத என் உயிர் போகட்டுமே... போகட்டுமே... பண்பாடு இல்லாத இந்த நாடகம் அழியட்டும்...! என் உயிர் போகட்டும்.. என் உயிர் போகட்டும்... வேதனை தாளாமல் நான் இறந்தால் என் உடல் பழி சுமக்கும்! அவள் விதவையாவாள்.. இல்லை.. இல்லை.. அவள் எனது நண்பனின் உடமை. அவளை காப்பது எனது கடமை! இருதலைக்கொள்ளி போன்ற நிலைமை! இப்போது எனக்குத் துணையாக இருப்பது எனது சிந்தனை ஒன்றுதான்! அதுவும் தூங்காத சிந்தனை. அதை தாங்காத இதயம் இதயமே!... உனக்கு இதயம் இல்லையா? இதயமே உனக்கு வடிவம்தான் இல்லையா...! வடிவமுள்ள மனிதர்களை மட்டும் தான் வாழ வைக்கிறாய்!............. மனித வாழ்க்கை வழுக்கு மரம் என படித்திருக்கிறேன். தடுக்கி விழுந்தாலும் எழுந்து முன்னேற நடைபோட வேண்டும் என்பதையும் படித்திருக்கிறேன். ஆனால் முன்னே இருப்பது பள்ளத்தாக்கு என்று தெரிந்தும் காலடி எடுத்து வைக்கிற முட்டாளும் உண்டா? இதோ நான் இருக்கிறேன்! இரக்கம்... இரக்கம் கொஞ்சம் அளவுக்கதிகமாக இருப்பதால் எல்லோருடைய சோதனைக்கும் பலி ஆடாகி ஆவிடுகிறேன்............ இதற்கொரு வழி சொல்லுங்கள்! பின்னிக் கிடக்கின்றன... மூன்று உள்ளங்கள்.. நூல் அறுந்து போகாமல் அவிழ்ப்பது எப்படி? எண்ணமே... நினைவே.. குல மாதர் குலம் வளர்த்த பண்பாடே இதற்கு ஒரு வழி சொல்லுங்கள்...

மெல்லமெல்ல கனவுலகிலிருந்து விடுபடுகிறார் சிவாஜி.

உங்களால் முடிந்தால் காட்சியை மீண்டும் பார்த்து பரவசமடையுங்கள். பேசி நடிப்பதற்கு முயன்று பாருங்கள்.

“சிம்மக்குரலோன் சிவாஜி“ புகழ் வாழ்க!

வீணை மைந்தன்

காதலும் - சோகமும் - வீரமும் கலந்த காட்சிகளைக் காண அடுத்த வாரம் வரை காத்திருங்கள்..

மலேசிய மடல்

# மலேசிய இந்திய சமுதாயத்தின் மறுமலர்ச்சித் தலைவர் பொன். வேதமூர்த்தி



நக்கீரன்

கோலாலம்பூர், பிப். 04:



63ஆண்டு கால சுதந்திர மலேசியாவில் இந்திய சமுதாயத்தின் எதிர்காலத்திற்கும் மறுமலர்ச்சிக்கும் உரிய தலைவராக மலேசிய முன்னேற்றக் கட்சி(எம்ஏபி)யின் தேசியத் தலைவர் "செனட்டர்" பொன். வேதமூர்த்தி திகழ்கிறார்.

மலேசியாவின் தற்கால அரசியல் புதிய வடிவத்தையும் மாறுபட்ட பாங்கையும் எட்டியுள்ளது. நாட்டின் பெரும்பான்மை சமுதாயமான மலாய் இன மக்களின் அரசியல் அதிகாரத்தை மையமாகக் கொண்ட புதிய அரசியல் போக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, நாட்டின் மூன்றாவது இனமாகவும் சிறுபான்மைச் சமுதாயமாகவும் உள்ள இந்தியர்களின் குறிப்பாக தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலமும் சமூக, பொருளாதார, கல்வி, ஆன்மிக நிலையும் கேள்விக்குறி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக, மலேசிய இந்தியர்களின் அரசியல் எதிர்காலமும் சவாலுக்கு ஆளாகியுள்ளது.

அதன் வெளிப்பாடாகத்தான், கடந்த ஆட்சியில் நான்கு முழு அமைச்சர்கள் இடம்பெற்றிருந்த நிலை மாறி, தற்போதைய அமைச்சரவையில் ஒருவர் மட்டுமே இடம்பெற்றுள்ளார். அதைப்போல கடந்த கால தேசிய முன்னணி ஆட்சியில் துணை அமைச்சர்களாக நால்வர் இடம்பெற்றிருந்த நிலையில், தற்பொழுது ஒருவர் மட்டுமே பொறுப்பு வகிக்கிறார்.



இந்திய இளைய சமுதாயத்தின் வேலை வாய்ப்பு, உயர்க்கல்வி வாய்ப்பு, வர்த்தக - தொழில்முனைப்புக்கான சூழல் யாவும் பெரும் ஐயத்திற்குள்ளாகி உள்ள இன்றைய நிலை குறித்தும் எச்சரிக்கை செய்து வருகிறார் முன்னாள் அமைச்சருமான பொன். வேதமூர்த்தி.

மலேசிய மக்கள் தொகையில் ஏறக்குறைய ஏழு விழுக்காட்டினராக இருக்கும் இந்தியர்களின் விகிதாச்சாரம், எதிர்காலத்தில் நான்கு-ஐந்து விழுக்காட்டு அளவுக்கு சரியக்கூடிய அபாயம் இருப்பதை எடுத்துக்காட்டி இப்போதே இந்தியர்கள் விழிப்படைய வேண்டும் என்று பொன்.வேதமூர்த்தி எச்சரித்து வருகிறார். இதன் தொடர்பில், இளைய சமுதாயத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பெரும் முனைப்பும் காட்டி வருகிறார்.

சோழ மண்டலத்தை ஆண்ட பெருமன்னனான இராஜேந்திர சோழன் படையெடுத்து கைப்பற்றி ஆட்சியை நிறுவிய கடாரம் என்னும் பகுதி மலேசியாவின் வட பகுதியில் உள்ளது. நவீன மலேசியாவில் அதன் பெயர் கெடா மாநிலம்.



அந்த மாநிலத்தில் அண்மையில் கொண்டாடப்பட்ட தைப்பூசத் திருநாளின்போது விடுமுறை மறுக்கப்பட்டுள்ளது. அதைப்போல இரு ஆலயங்கள் அந்த மாநில அரசால் அடுத்தடுத்து உடைத்து அகற்றப்பட்டன. அவற்றுக்கான மாற்று ஏற்பாடு குறித்து சம்பந்தப்பட்ட மாநில அரசு சிறிதும் அக்கறைப்படவில்லை.

நாடு விடுதலை அடைந்த காலக்கட்டத்திலும் அதற்கு முன்பும் மலேசியாவின் பொருளாதாரம் தோட்டத் தொழிலை சார்ந்திருந்தது. முதலில் இரப்பர் உற்பத்தி மூலமும் அடுத்த செம்பனை உற்பத்தி மூலம் மலேசியா பொருளாதார மேம்பாடு அடைவதற்காக பேரளவில் பாடுபட்டவர்கள் இந்திய தோட்டத் தொழிலாளர்கள். அப்படிப்பட்ட பாட்டாளி பெருமக்களின் வழிபாட்டுத் தலங்களின் இட உரிமையைக் காரணம் காட்டி கெடா மாநில அரசு அகற்றியதற்கு, குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இருந்து தமிழர்களின் ஆன்மிக வாழ்க்கைக்கு துணைபுரிந்த அந்த ஆலயங்கள் இடிக்கப்பட்டதற்கு பேரளவில் மறுதலித்தவர் பொன்.வேதமூர்த்தி.




அதைப்போல இங்குள்ள தமிழ்ப் பள்ளிகளின் மேம்பாட்டிற்கும் பராமரிப்புக்கும் மத்தியக் கூட்டாட்சியில் நிதி ஒதுக்கப்படவில்லை என்பதற்கும் தொடர்ந்து குரல் கொடுத்து வருபவர் பொன். வேதமூர்த்தி.

அரசாங்க வேலைவாய்ப்பிலும் இந்தியர்களின் மக்கள் தொகை விகிதாச்சார அளவிற்கு ஏற்ப வாய்ப்பு கிட்டுவதில்லை. இது குறித்தெல்லாம் இந்திய இளைஞர்களிடையே எடுத்துக்கூறி, கல்வியிலும் தொழில்கல்வி திறன்பயிற்சியிலும் இந்திய இளைஞர்கள் அக்கறையும் முனைப்பும் காட்ட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

பொதுவாக, பொன். வேதமூர்த்தியின் அரசியல் பயணம் இளைய சமுதாயத்துடன் இணைந்துள்ளது. கல்வி ஒன்றுதான் எதிர்கால மீட்சிக்கான ஒரேவழி என்பதை வாய்ப்பு கிடைக்குபொழுதெல்லாம் அவர் எடுத்துச் சொல்கிறார்.

மற்ற தலைவர்கள் நிகழ்கால அரசியலுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதைப் போல அல்லாமல், இந்திய சமுதாயத்தின் எதிர்கால நலவாழ்வுக்கு இவர் முன்னுரிமை கொடுத்து வருகிறார். அதனால்தான், மலேசிய முன்னேற்றக் கட்சி சார்பில் ஏற்பாடு செய்யப்படும் கூட்டம், கருத்தரங்கம் யாவும் இளைய சமுதாயத்தை மையமிட்டே நடத்தப் படுகின்றன.



மலேசிய இந்திய சமுதாயம் எதிர்கொண்டுவரும் பலதரப்பட்ட சிக்கலும் ஆரம்பம் முதலே தொடர்கின்றன. இதனால்தான், ஹிண்ட்ராஃப் (HINDRAF-Hindu Rights Action Force) என்னும் சமூக - அரசியல் இயக்கம் தொடங்கப்பட்டபோது, அது மாபெரும் எழுச்சியைக் கண்டது. 2008 பொதுத் தேர்தலின்போது, மலேசியாவில் அதிரடி மாற்றம் ஏற்பட்டதற்கு ஹிண்ட்ராஃப் இயக்க எழுச்சிதான் காரணம்.

இந்த ஹிண்ட்ராஃப் எழுச்சிக்காக உள்ளும் புறமும் பாடுபட்ட தலைவர் பொன். வேதமூர்த்தி. பிரிட்டிஷ் காலனி ஆட்சியாளர்களால் கைவிடப்பட்ட தமிழ் தோட்டப் பாட்டாளிக்காக பிரிட்டனில் வழக்கு நடத்தி, அதை ஐநா மன்றத்தின் மனித உரிமை ஆணையம்வரை கொண்டு சென்றார்.

கடந்த ஆட்சியில் தேசிய ஒற்றுமை மற்றும் சமூக நலத்துறை அமைச்சராக பொறுப்பு வகித்த காலத்தில், தேச ஒற்றுமைக்கு சிறப்பாக செயல்பட்ட பொன். வேதமூர்த்தி, பொதுவாக நலிந்த மக்களின் மீட்சிக்கும் வளர்ச்சிக்கும் பாடுபடக்கூடியவர் என்பதால், நாட்டின் பூர்வகுடி மக்களுக்காகவும் அயராது செயல்பட்டார்.



இதற்காக, 2019 ஏப்ரல் முதல் வாரத்தில், பூர்வகுடி மக்களின் மறுமலர்ச்சிக்காக அப்போதைய பிரதமர் துன் மகாதீரின் ஒத்துழைப்புடன் தேசிய மாநாட்டை ஏற்பாடு செய்தார். 60 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட சுதந்திர மலேசியாவில் பூர்வகுடி மக்களுக்காக தேசிய அளவிலான மாநாட்டை நடத்திய அமைச்சர் இவர் மட்டும்தான். இந்தப் பூர்வகுடியினர், பெரும்பாலும் காடுகளிலேயே வசிப்பவர்கள்.

இப்பொழுது நாடு கொரோனா பாதிப்பிற்கு ஆளாகி இருந்தாலும், நான்காவது தொழிற்புரட்சியை நோக்கிதான் நாடு செல்கிறது. அதனால், இந்திய இளைஞர்களும் உயர்க்கல்வி மாணவர்களும் கல்வித் தகுதியுடன் நின்று விடாமல் தொழில்நுட்பக் கல்வியிலும் தொழில்பயிற்சியிலும் அக்கறைக் காட்ட வேண்டும் என்று இவர் வலியுறுத்தி வருகிறார்.



222 நாடாளுமன்றத் தொகுதிகளைக் கொண்ட மலேசியாவில், 64 தொகுதிகளில் வெற்றியை நிர்ணயிக்கக்கூடிய வாக்காளர்களாக இந்தியர்கள், குறிப்பாக எம்ஏபி கட்சியினர் இருப்பதால், இதன் தொடர்பிலான விழிப்புணர்வை இளைய சமுதாயத்தில் எடுத்துரைத்து வருவதுடன் மக்கள் தொகை குறித்த எச்சரிக்கையையும் விதைத்து வருகிறார்.

நாடு 15-ஆவது பொதுத் தேர்தலை எதிர்கொண்டுள்ள தற்போதைய சூழலுக்கு ஏற்ப எம்ஏபி கட்சியை சீரமைத்துள்ளார். சமூக அக்கறை கொண்டவர்களையும் எழுச்சிமிக்க இளைஞர்களையும் கொண்டு புதிய தலைமைத்துவத்தை வடிவமைத்துள்ளார்.



அதன்படி வழக்கறிஞர் இரவீந்திரன் சண்முகம் கட்சியின் துணைத் தலைவராகவும், பேராசிரியர் சுகுமான் நாராயணன் மோகன் எல்லப்பன் முனைவர் அ.குமரன் ஆகியோர் உதவித் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில் மலேசிய முன்னேற்றக் கட்சி இந்திய சமுதாயத்தின் எதிர்கால நலனை முன்னுறுத்தி தன்னுடைய அரசியல் பயணத்தைத் தொடர்கின்றது.

- நக்கீரன் (Nakkeeran)
013-244 36 24

# ஈழத்துத் திருக்கோவில்கள் 932



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416)332-0269 vasantha@rogers.com



## இலஞ்சியாரண்யம் சோலைஅம்மன் கோயில் மண்டுவில், யாழ்ப்பாணம்

'துணையும் தொழுந்தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொணடம வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரியாவ தறிந்தனமே'

இவ்வாலயத்தின் வரலாறு, கி.பி 1600 ஆம் ஆண்டிலிருந்து அறியக் கூடிய தொன்மை மிக்கதாகக் காணப்படுகின்றது. கி.பி. 1505 இல் ஈழத்திற்குள் புகுந்த அந்நியர், யாழ்ப்பாணப்பிரதேசத்தைக் கைப்பற்ற முடியாத நிலையில், வீரம் செறிந்த தமிழ்அரசர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். ஆயினும், பெரும்பலத்துடன் காணப்பட்ட போத்துக்கீசர், அக்காலத்தில் யாழ்ப்பாண அரசனாக ஆட்சி புரிந்த பரராஜசேகரனை, கி.பி. 1658 இல் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றினர். இவர்களின் பின் 1711 இல் டச்சுக்காரரும், இவர்களின் பின் ஆங்கிலேயரும் முறையே யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்துள்ளனர்.

இந்துமதத்தை அழித்து தமது மதத்தைப் பரப்ப பல்வேறு வழிகளில் முயன்ற கால கட்டமாக, போத்துக்கேயர் ஆட்சி யாழ்ப்பாணத்திலே காணப்பட்டது. போத்துக்கீசருடைய ஆட்சியிலே மராமத்து அதிகாரியாக வான்டீவாற் என்பவர் காணப்பட்டார். இவர் தனது பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளையில், அவர் ஏறிவந்த குதிரை சோலை அம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலே நோயுற்று வீழ்ந்தது. அக்காலத்திலே இலஞ்சியாரண்யம் சோலையம்மன்கோயில் அர்ச்சகராயிருந்த கந்தர் என்பவர், இலஞ்சித் தீர்த்தத்தை அக்குதிரைக்குத் தெளித்து, விபூதியிட்டு சுகப்படுத்தியுள்ளார். இதனால் மகிழ்ந்த அதிகாரி, ஆலயத்தை வணங்கி இவ்வாலயத்திற்கு நிலத்தையும் மானியமாக ஒதுக்கி, வீதி அமைப்பையும் செய்து கொடுத்ததாக வரலாற்றிலே கூறப்பட்டுள்ளது.

இவ்வாலயம் ஆகமநெறிக்குட்பட்டதாக அமைந்துள்ளது. நடுவே பொழிகற்களால் அமைக்கப்பட்ட கர்பக்கிரகம், மகாமண்டபம், ஸ்நபனமண்டபம் ஆகியன காணப்படுகின்றன. இவ்வாலயத்தின் பரிவார மூர்த்திகளாக விநாயகர், கண்ணகி, மகாமாரி, பைரவர், முனீஸ்வரர் மற்றும் காளிஅம்பாள் ஆகியோருக்குரிய அமைப்புக்கள் காணப்படுகின்றன. கர்ப்பக்கிருகத்தில் மனோன்மணி அம்பாள், அபயவரதகரங்கள் உள்ளிட்ட நான்கு கரங்களுடன் அழகுற எழுந்தருளியுள்ளார். ஜகன்மாதாவாக விளங்கும் பராசக்தியின் தோற்றப்பாடுகளுள் மனோன்மணி அம்பாளின் தோற்றமும் ஒன்றாகும். இவ்வாறான ஒவ்வொரு தோற்றப்பாடும் ஒவ்வொரு சம்பவத்தோடு தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. மனோன்மணி என்ற திருநாமமும் ஆழ்ந்த கருத்துடையது. தத்துவ ஆராச்சியின்படி, புருவங்களுக்கு மத்திய ஸ்தானத்திலிருந்து பிரஹ்மரந்தம் வரையுள்ள ஸ்தானங்களில் எட்டாவது ஸ்தானத்திற்கு மனோன்மணீ என்ற பெயர் காணப்படுகின்றது.

லலிதா சகஸ்ரநாமத்திலே சர்வதந்திரரூபா (மனோன்னமணி) மகேஸ்வரி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவனுக்கு மனோன்மனன் என்ற திருநாமம் கூறப்பட்டுள்ளது. மனோன்மனன் என்ற சிவனுடைய மூர்த்தத்தின் சக்தியாக, மனோன்மணீ கூறப்பட்டுள்ளார். புருவமத்தியிலிருந்து பிரஹ்மரந்தம் வரையுள்ள நவசக்திகளை முறையே, இந்து, ரோதினீ, நாத, நாதாந்த, சக்தி, வியாபினீ, வமனா, உன்மனீ அல்லது மனோன்மனீ, மகாபிந்து, எனக் குறிப்பிடுவர். பக்தர்களுடைய மனதிலே ஞானத்தோடு கூடியுள்ள நிலையை ஏற்படுத்துவதாலேயே அம்பிகைக்கு, மனோன்மணீ என்ற பெயர் ஏற்பட்டது. இலஞ்சாரண்யம் ஆலயத்தின் கருவறையிலே மூலமூர்த்தியாக இத்தகை பெருமைகள் கொண்ட மனோன்மணி அம்பாற் வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகின்றாள். கர்ப்பக்கிருகத்திலே எழுந்தருளியிருக்கும் மனோன்மணி அம்பாள், நான்கு திருக்கரங்களுடன் காணப்படுகின்றாள். தண்மைசூழ்ந்த நிலப்பரப்பு, அழகி சோலைகள் நிறைந்த சூழலில் மனோன்மணி அம்பாள் எழுந்தருளியுள்ள காரணத்தால், அவரை சோலைஅம்மன் என பக்தியோடு அடியவர்கள் அழைக்கின்றனர்.

இவ்வாலயத்தின் தலவிருட்சமாக மகிழமரம் காணப்படுகின்றது. இம்மரத்தின் பட்டை, வேர், பூ, காய், பழம் அனைத்துமே ஆயுர்வேத மூலிகையாகப் பயன்பட்டு வருகின்றது. இச்சோலையில் காணப்படும் பாவநாசினி என்னும் நீர்ஊற்று, பெயருக்கேற்ப பாவங்களை மட்டுமல்ல, தேக ஆரோக்கியத்தையும் கொடுப்பதாக அமைந்துள்ளது. இந்நீர்நிலையிலே நீராடுபவர் பல்வேறு நோய்களிலிருந்து விடுபட்டவர்களாகக் காணப்படுகின்றனர். மனநோயால் பீடிக்கப்பட்டவர்கள், சொறி, சிரங்கு, பார்வைக்குறைவு முதலிய பல ரோகங்களால் பீடிக்கப்பட்டவர்களும், இங்குள்ள பாவநாசினி தீர்த்தத்திலே நீராடி சுகம் பெற்றுள்ளனர்.

இந்நீர்ஊற்று மூன்று நூற்றாண்டுகள் பழமைகொண்ட கற்கட்டினைக் கொண்டது. இத்தீர்த்தத்தைப் பார்த்தால் சிறு குன்றினுள் ஒரு சிலவாளி தண்ணீரே உள்ளதுபோலத் தெரியும், ஆயினும் அள்ள அள்ள வற்றாத நீர்நிலையாக இது காணப்படுவது அற்புதமே.

இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவம், ஆனிமாத பூர்வபக்க சஷ்டியிலிருந்து கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, பௌணமி தினத்தில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும். இத்தகைய தொன்மைச் சிறப்புடைய ஆலயத்திலே திருப்பணி வேலைகள் காலத்திற்குக் காலம் இடம்பெற்று, அருளும் புகழும் கொண்ட ஆலயமாக, இலஞ்சாரண்யம் சோலையம்மன் ஆலயம் விளங்குகின்றது.

'வாழும் படியொன்றும் படியொன்றும் கண்டுகொண்டீடன் மனத்தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டதமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.'

*வளரும்...*



# இவ்வார ராசிபலன்

**05-02-2021 வெள்ளி தொடக்கம் 11-02-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** நண்பர்களால் பணவரவும், சொந்தங்களால் மனநிறைவும் கிடைக்கக்கூடிய வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராஜவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** நவகிரஹ அனுகிரஹம் கிடைக்கக்கூடிய நன்மையான வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நந்தாதேவி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மிதுனம்:** ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கக் கூடிய அற்புதமான வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌ-ரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டமாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: புட்டுச் சொக்கநாதர், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** திட்டமிட்ட காரியத்தில் வெற்றி கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபடவேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**சிம்மம்:** தார்மீக எண்ணங்கள் உதயமாக கூடிய உன்னதமான வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: உச்சிபிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**கன்னி:** போட்டிகளால் பொறுப்பு சேரக்கூடிய பொன்னான வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆதிவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**துலாம்:** உங்களால் வரவும் உறவுகளால் செலவும் அதிகரிக்கக் கூடிய வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். விவேகமான வாரம். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹரிஹராசுதன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** உழைப்பால் மதிப்பும் உங்களால் சிறப்பும் சேரக்கூடிய பொறுப்பான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சக்திபாலகன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**தனுசு:** பிரபல்யமான வாய்ப்பு அமையக்கூடிய அற்புதமான வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சந்தான லட்சுமிகணபதி, அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J





ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** கைமேல் காசும், கௌரவ வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: மணக்குழபகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** ஆதாயம் மிகுதியாகி ஆதாரம் வலுவடையக் கூடிய அற்புதமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தயாய் முகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** பிரபல்யமான வாய்ப்பு அமையக் கூடிய அற்புதமான வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD
HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி | Ontario Works |
| விலங்கு சேவைகள் | வாகனத் தரிப்பிடங்கள் |
| உயர்மாடி கட்டட சட்டங்கள் | பூங்காக்கள் |
| கட்டட அனுமதி பத்திரங்கள் | காவல் துறை |
| பிள்ளை பராமரிப்பு சலுகை | பொதுச் சுகாதாரம் |
| அவசர வீட்டு வசதிகள் | வீதிகள் |
| தீயணைப்பு சேவைகள் | ஆதன வரிகள் |
| கழிவுப் பொருட்கள் சேவை | பொதுப் போக்குவரத்து |
| நூலகச் சேவை | மீள் சுலட்சியும் பசுமை திட்டமும் |
| மாநகரத் தேர்தல் | மரங்கள் |
| மாநகர அனுமதியும் சட்டங்களும் | நீர் விநியோகம் |

| நியமன அலுவலகம் | ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம் |
|---|---|
| Scarborough Civic Centre<br>150 Borough Drive, 2nd Floor<br>Scarborough, ON M1P 4N7<br>Phone: 416-396-7222<br>Fax: 416-392-4006 | 100 Queen Street West,<br>2nd Floor - Suite C52<br>Toronto, ON M5H 2N2<br>Phone: 416-392-4008<br>Fax: 416-392-4006 |

councillor_ainslie@toronto.ca www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood @Ainslie_Ward24
@cllrainslie Paul Ainslie (City of Toronto)
www.paulainslie.com 416-396-7222

*அறிமுகம்...*

# கல்கியின் பொன்னியின் செல்வன்

கல்கி எழுதிய 'பொன்னியின் செல்வன்' ஓர் வரலாற்று நாவல் என்ற தகுதியைத் தன்னகத்தே கொண்ட பிரசித்தி பெற்ற சிறந்த நூலாகும். இருப்பினும் வரலாற்று நாவல் என்ற இலக்கணத்தோடு எழுந்த முதலாவது தமிழ் வரலாற்று நாவல் 'மோகனாங்கியே'. இந் நூலை ஈழத் தமிழரான திருகோணமலையைச் சேர்ந்த தி.க சரவணமுத்துப்பிள்ளை அவர்கள் நாயக்கர் கால வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதினார் என்பதனை ஆராய்ந்து அறுதியிட்டுக் கூறுகிறார் எழுத்தாளர் தம்பு சிவா அவர்கள். இதை மெய்ப்பிக்கும் வகையில் ஆவணி மாதம் 8ம் திகதி 2010ம் ஆண்டில் இந்தியாவில் தமிழ் நாட்டில் வெளியாகிய தினகரன் பத்திரிகையில் 'கூராயுதம்' என்ற தலைப்பின் கீழ் 'தமிழில் 1895ல் இலங்கையரான தி.த சரவணமுத்துப்பிள்ளையின் மோகனாங்கியே தமிழ் நாட்டில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நாவலையே சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் தமிழில் வெளி வந்த முதலாவது சரித்திர நாவல் என்று புகழாரம் சூட்டியுள்ளார்'. என்பதும், 'நாயக்கர் கால வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு தி.த சரவணமுத்துப்பிள்ளை எழுதிய மோகனாங்கி என்பதுவே தமிழில் எழுந்த முதல் வரலாற்று நாவல்' என்று புது டில்லியைச் சேர்ந்த இலக்கிய ஆய்வாளர் கி. நாச்சிமுத்து அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளதும்,

'தமிழ் மொழியில் தோன்றிய முதல் வரலாற்று நாவலாக தி. த சரவணமுத்துப்பிள்ளை எழுதிய மோகனாங்கி என்ற நூலையே தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களும், இலக்கியத் திறனாய்வாளர்களும் கருதுகின்றனர் என்று தமது 'ஒப்பிலக்கண வரைவியல் சமூகம்' என்னும் நூலில் முனைவர் ச.சீனிவாசன் விளக்கியுள்ளதும், கட்டுரையாளர் முருகேசு ரவீந்திரன் அவர்கள் 'தி.த சரவணமுத்துப்பிள்ளை தமது ஆராய்ச்சியின் முடிவில் வரலாற்று நாவல் ஒன்றை எழுதினார். அதுதான் மோகனாங்கி நாவலாகும். தமிழில் தோன்றிய முதலாவது வரலாற்று நாவலாகிய இந்நாவல் வெறும் கற்பனை நாவலாக அன்றி உண்மைச் சம்பவத்தைச் சித்தரிக்கும் நாவலாக அமைந்துள்ளது' என்று கூறிய கருத்தும் 'மோகனாங்கி' தான் முதல் தமிழ் வரலாற்று நூல் என்பதனை வலியுறுத்த சாலப் பொருந்தும் சான்றுகள் எனக் கூறலாம்.

வரலாற்று நாவல் என்பது வரலாற்றில் நடந்த உண்மைச் சம்பவங்களை இலக்கியப் பண்பாடு கொண்டு கற்பனை கலந்து நயம்படத் தருவது எனலாம். இந்த வகையில் 'பொன்னியின் செல்வன்' என்ற பெரும் தமிழ் நாவல் உயிரோட்டத்துடன் அன்றும் வாழ்ந்தது, இன்றும் வாழ்கிறது, நாளையும் வாழும் என்பது திண்ணமே ஏனெனில் இதை எழுதிய ஆசிரியரின் எண்ணங்களின் வண்ணங்களே இந்நாவல்.


'பொன்னியின் செல்வன்' என்ற நாவல் இரா. கிருக்ஷ்ணமூர்த்தி அவர்களால் எழுதப்பட்டது. அவர் இன்று இல்லாவிட்டாலும் இந்நூலானது அவர்தம் வாழ்நாளில் தன் பொன்னான நேரங்களைச் செலவு செய்து தேடிய உரிமைச் சொத்து. இன்று அவர் குலமே கொண்டாடி நிற்கிறது. இரா. கிருக்ஷ்ணமூர்த்தி அவர்கள் 1941 ம் ஆண்டு 'கல்கி' எனும் பத்திரிகையை ஆரம்பித்தார். இதனால் அவர் 'கல்கி' எனவே மக்கள் மத்தியில் அறியப்பட்டார். இவர் பல்துறைக் கலைஞர் என்பதனைத் தாண்டி இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு பங்களித்து சிறை சென்றும் வந்தார். இவர் எண்ணங்களில் தமிழ் மொழியின் பற்றும், தமிழர் விடுதலையின் மூச்சும் படிவங்களாக மூழ்கிக்கிடக்கின்றன. கி.பி ஆயிரம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில் சோழப் பேரரசு தமிழின் வலிமையையும், பெருமையையும் உயர்த்தி நின்றது. இதனால் இவர் தமிழ் மொழியை என்றும் அழியாத வரலாறாக உலகில் இடம்பெற வேண்டும் என்று எண்ணி, சோழப் பேரரசின் பெருமைக்கும், மகிமைக்குமுரிய 'இராஜராஜசோழன்' என்ற தமிழ் மன்னனின் முடிசூடும் வரலாற்றைக் கையில் கொண்டு கதை புனைந்தார். இதற்கு தஞ்சை பெரிய கோவிலிலுள்ள கல்வெட்டுக் குறிப்புக்களையும், கே. ஏ நீலகண்டசாஸ்திரி அவர்களின் 'சோழர்கள்' எனும் புத்தகத்தையும், இ. வ. சதாசிவபண்டாரதாரியின் பிற்கால சோழர் சரித்திரத்தையும் மூலமாகக் கொண்டு பொன்னியின் செல்வன் எனும் வரலாற்று நாவலை வடிவமைத்தார்.

கீர்த்தி கொண்டு விளங்கிய சோழப்பேரரசின் புகழ் மங்கி மறையாது, உயர்ந்து, உன்னதமாக அன்று நடந்த வரலாற்றின் நியாயமான உண்மைக் கோலங்களையும், சூழ்ச்சியின் சுமைகளையும் தன் தமிழ் வளத்தின் திறமை கொண்டு, கற்பனை வளத்தில் மிதந்து, கடும் உழைப்பில் புதைந்து உயிர் கொடுத்த காவியமே இந்தப் பொன்னியின் செல்வன். இந்நாவல் 'கல்கி' எனும் பத்திரிகையில் கருவுற்று, தொடர் கதையாக வளர்ச்சி பெற்று, அந்தக் காலத்திலேயே கையிலெடுத்து தாலாட்டுப் பாடப்பட்டது. பின்னர் பொன்னியின் செல்வன் எனும் நாவலாக உருவெடுத்தது. அதன் மகிமைக்கோ எல்லையற்றுப் போய்விட்டது. இந்த மகிமையுற்ற நாவல் தவழாதவர்கள் கைகள் இல்லையென்றே கூறலாம். இதன் பெருமையை பிறமொழியினரும் அறிந்து இன்புற, சர்வதேச மொழியான ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்தார்கள். இவர்கள் முறையே இந்திரா நீலமோகன், சி.வி கார்த்திக் நாராயணன், பவித்திரா ஸ்ரீநிவாசன் ஆகியோராவார். மேலும் மேடை நாடகங்களாகவும், தொலைக்காட்சித் தொடர்களாகவும் வெளியாகியுள்ளது. இந்திய தமிழ் நாட்டின் முதலமைச்சரான எம் ஜி இராமச்சந்திரன் இந்த நாவலைத் திரைப்படமாக்கி மக்கள் மனங்களில் பதியச் செய்ய வேண்டும் என்ற ஆவலுடன் முயற்சி செய்தார். இந்தப் பிரமாண்டத்திற்கு அவர் முயற்சி பயனளிக்கவில்லை. (இதற்கான ஆதாரம் விகடனிதழ் எம் ஜி ஆர் 25ல் குறிப்பிடப்பட்டுள்ளது.) ஆனால் இன்று தொழில் நுட்ப மயமான இந்தக்கால கட்டத்தில் இதனைத் திரைப்படமாக்கலாம் என்ற பெரும் நம்பிக்கையும், பெரும் முயற்சியும் கொண்டு மணிரத்தினத்தின் இயக்கத்தில், ஏ ஆர் ரகுமானின் இசையில், ஜெயமோகனின் வசன அமைப்பில், பிரபல நடிகர்களான-விக்ரம், கார்த்தி, ஐஸ்வரியாராய், ஜெயம்ரவி, திரிக்ஷா, அதிதிராவ், விக்ரம் பிரபு, எனப் பலரின் நடிப்பில் உருவாக இருக்கிறது. கல்கியின் பொன்னியின் செல்வன் என்ற கலைவடிவம் என்றும் அழியாது நிலைத்து நிற்க இவர்கள் முயற்சி கைகொடுப்பதுடன், இணையத்தள வாசிப்பினூடாகவும் இந்நாவல் வாழும் என்பதில் ஐயமில்லை.

கல்கியின் காவியமான பொன்னியின் செல்வன், 5 பாகங்களை உள்ளடக்கியுள்ளது. 300 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. இந்நாவலுக்கான ஆதாரங்களைத் திரட்டுவதற்கு ஆசிரியர் மூன்று தடவை ஈழம் சென்றார் என்கிறார்கள். ஏனெனில் சோழர் வரலாறு ஈழத்திலும் தொடர்ந்ததேயாகும்.

நாவலின் ஐந்து பாகங்களும்

1) புது வெள்ளம் 57 அத்தியாயம்
2) சுழல் காற்று 53 அத்தியாயம்
3) கொலைவாள் 46 அத்தியாயம்
4) மணிமகுடம் 46 அத்தியாயம்
5) தியாக சிகரம் 91 அத்தியாயங்களையும் கொண்டுள்ளது.




இதன் **கருப்பொருள்:** சோழராட்சியத்தின் பேரரசும், இராஜராஜசோழன் பொன்முடி சூடுவதுமாகும். இதில் கதாபாத்திரமாக, வர்ணகுலத்தில் வந்த வைர நெஞ்சுடைய வந்தியத்தேவன் என்கிறார்கள். கதையின் தொடக்கம் முதல் முடிவுவரை வந்தியத்தேவனே முதன்மை பெற்று கதையின் நாயகன் என்ற அளவிற்கு பெருமை கொள்கிறான் எனினும் பொன்னியின் செல்வனே இதன் நாயகன். ஒரு வீடு அழகாக, அற்புதமாக, வலிமையானதாக உள்ளதென்றால் அதன் அத்திவாரமே சிறப்பானது. பொன்னியின் செல்வனே கதாநாயகன் என்பதனை நூலின் பெயரிலேயே கண்டுகொள்ளலாம். யார் அந்தப் பொன்னியின் செல்வன்? அருள்மொழிவர்மன், இராஜராஜசோழன், மும்முடிசோழத்தேவன், ராஜகேசவர்மன் எனும் பெயர்களைக் கொண்ட வேந்தனே பொன்னியின் செல்வனாவான். இதற்காதாரமாக, இரண்டாம் பாகம் சுழல்காற்று அத்தியாயம் 13ல் இளையபிராட்டி குந்தவை தேவியிடம் அவள் தோழியான வானதி கேட்கிறாள்

'அக்கா பொன்னியின் செல்வன் எனும் பெயர் எப்படி வந்தது சொல்லுங்கள்? 'அடி கள்ளி அதை நீ மறக்கமாட்டாய் போலிருக்கிறதே, சொல்கிறேன் கேள்,' என்று குந்தவைப் பிராட்டி சொல்லத் தொடங்கினாள். சுந்தர சோழ சக்கரவர்த்தி பட்டத்திற்கு வந்த புதிதில் அவருடைய குடும்ப வாழ்க்கை ஆனந்தமயமாக இருந்தது. அரண்மனைப் படகில் குடும்பத்துடன் அமர்ந்து சக்கரவர்த்தி பொன்னி நதியில் உல்லாசமாக உலாவி வருவார். அருள்மொழிக்கு அப்போது வயது ஐந்து, குந்தவைக்கு வயது ஏழு அரண்மனையில் அனைவருக்கும் கண்ணிலும் இனிய செல்லக் குழந்தை அருள்மொழி. ஆனால் எல்லாரிலும் மேலாக அவனிடம் வாஞ்சை உடையவள் அவன் தமக்கை குந்தவை. படகில் குழந்தையைக் காணோம் என்பதைக் குந்தவைதான் முதலில் கவனித்தாள். குந்தவையும் ஆதித்தனும் அலறினார்கள். ராணிகள் புலம்பினார்கள், தோழிமார்கள் அரற்றினார்கள், படகோட்டிகள் சிலர் காவேரி வெள்ளத்தில் குதித்துத் தேடினார்கள். சுந்தர சோழரும் அவ்வாறே குதித்துத் தேடலுற்றார். சட்டென்று ஓர் அற்புதக் காட்சி தென்பட்டது. பெண் உருவம் ஒன்று இரண்டு கைகளிலும் குழந்தையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நின்றது. சுந்தர சோழரும் அந்தக் காட்சியைப் பார்த்தார். கைகளை நீட்டி குழந்தையை வாங்கிக் கொண்டார். ஆகவே காவேரி நதியாகிய தெய்வந்தான் இளவரசர் அருள்மொழிவர்மரைக் காப்பாற்றிக் கொடுத்திருக்க வேண்டும் என்று அனைவரும் ஒருமுகமாக முடிவு கட்டினார்கள். அரண்மனைச் செலவனாயிருந்த அருள்மொழிவர்மன் அன்று முதல் 'பொன்னியின் செல்வன்' ஆனான். என விளக்குகின்றாள்.

*அடுத்த வாரம் தொடரும்...*



# நாம் வெற்றி அடைந்துவிட்டோம்!

**பகவான் நித்யானந்த பரமசிவம் அவர்கள் இணையம் வழியாக எமக்கு அளித்த பிரத்யேக பேட்டியிலிருந்து**

கேள்வி: ஏன் "கைலாஸா"?

இந்து மதத்தின் மேன்மையான அறிவியல் (Greater Science) உலகிற்கு தொடர்ந்து கிடைத்துக் கொண்டே இருக்கவேண்டும். அப்பொழுதுதான் மனித இனம் மட்டும் அல்லாது எல்லா உயிர்களும் தழைத்தோங்கும்.

இப்போதைய சூழலில் உலகில் இந்து மதத்தின் அனைத்து பரிமாணங்களும், அதன் பங்களிப்புகளும் அவதூறு செய்யப்படுகின்றன. இந்து மதத்தின் மேன்மையான அறிவியல் பற்றி அறிந்திராத, அனுபவித்திராத நவீன இந்துக்கள் ( Neo Hindus ) இந்துமதத்திலுள்ள பாரம்பரியங்களை " நடைமுறையில் பயன் தராதது, மூடத்தனமானது, சமய சாயல் உள்ளது, மதச் சார்புடையது" என்ற விவரனைகளை தந்து அலட்சியப்படுத்துல், அவதூறு பரப்புதல் போன்ற செயல்களை செய்கிறார்கள்.

இதனால் இந்து மதம் - இந்து மத விரோதிகள் மற்றும் இந்து மதத்தை வாழாத இந்துக்கள் - இந்த இருமுனை தாக்குதலை பலநூறு ஆண்டுகளாக எதிர்கொள்கிறது. இந்து மதத்தின் பங்கேற்பாளர்கள் படுவேகமாக தாக்கப்பட்டு, திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறார்கள். இந்த அழிவு மனி குலத்திற்கே பெரும் தீங்கை தருவிக்கும். தாக்குகின்ற மூடர்களுக்கு இதன் பின் விளைவுகள் புரியாமல் இருக்கலாம், அவர்கள் புரிந்து கொள்ள விரும்பாமல் இருக்கலாம். ஆனால் உண்மையை உணர்ந்த இந்துக்களுக்கு இதன் ஆழம் புரிய வேண்டும். இந்துக்கள் உலக நன்மைக்காக பொறுப்பேற்று செயல்பட வேண்டும். தொடர்ந்து அரங்கேற்றப்பட்ட இந்து இன அழிப்பால் ( Hindu Genocide ), இந்துக்களின் உணர்வில் வாழ்க்கை மீதே ஆழமான வெறுப்புணர்வு படிந்துள்ளது. தொடர் தாக்குதலின் பாதிப்புகளினால் உருவான வாழ்க்கையை எதிர்க்கும் மனநிலையிலிருந்து நாம் நம்மை விடுவித்து கொள்ள வேண்டும். நமக்கு மிகப்பெரிய பொறுப்பு உள்ளது, நமது பங்களிப்புகள் உலகிற்கு தொடர்ந்து கிடைத்து கொண்டே இருக்கவேண்டும். இந்து மதத்தின் அறிவியல் - அதன் பங்களிப்புகள் - பரமசிவனார் முதன் முதலில் உலகிற்கு அளித்த அதே உண்மைத்தன்மையுடன் (As it is revealed by Paramashiva ) எந்தவிதமான நீர்த்துப்போதலும் இல்லாமல் ( Without any Compromise or Dilution ) உலகின் ஏதோ ஒரு இடத்திலாவது பாதுகாக்கப்பட வேண்டும், வாழப்பட வேண்டும், போற்றி பேணப்பட வேண்டும். பரமசிவனினாரின் இந்த கட்டளையை நிறைவு செய்வதற்காக, அவருடைய நோக்கமான ஜீவன் முக்த சமுதாயத்தை உருவாக்குவதற்காக உருவாக்கப்பட்டதே "கைலாஸா". பரமசிவனின் பேரருளால் இது வெற்றி பெற்றுவிட்டது.

கேள்வி: எப்படி இந்த இன அழிப்பிலிருந்து, கொடுமையான மதத்தாக்குதலில் இருந்து தப்பினீர்கள்?

தமிழ்நாட்டில் உள்ள சில பிரபல தமிழ் தொலைக்காட்சிகளும், சில பிரபல தமிழ் பத்திரிக்கைகளும் திட்டமிட்டு எங்களை அழிப்பதற்கான எல்லா முயற்சிகளையும் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து செய்து கொண்டேயிருக்கிறார்கள். பொதுமக்கள் படிக்க முடியாத அளவிற்கு அருவருப்பான செய்திகளையும், காட்சிகளையும் என்னைச் சுற்றியும், என்னுடைய ஆதினவாசிகளைச் சுற்றியும் சித்தரித்து எங்களின் சமூக அந்தஸ்தை படுகொலை (Character Assassination) செய்தார்கள். எங்களால் தமிழகத்தில் நடமாடமுடியாத அளவிற்கு இதயக்காயத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எங்களைச் சுற்றி சித்தரிக்கப்பட்ட பொய்க் கட்டுரைகள் மற்றும் பொய்க் காட்சிகளால் பல கோடிகளை இவர்கள் சம்பாதித்ததோடல்லாமல், பல கேடிகளை எங்களை நோக்கி ஏவியும் விட்டுருக்கிறார்கள்.

கூலிப்படைகளை வைத்து எங்களை கருவருக்க அவர்கள் செய்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையில், வெவ்வேறு வகையில் சமூக விரோதிகளை தூண்டிவிட்டு எங்களின் மத சுதந்திரத்தையும், அடிப்படை மனித உரிமைகளையும் பறித்தார்கள். சித்ரவதை செய்தார்கள். இதனால் நானும், என் சங்கமும் அடிபணிந்துவிடும் என்று நினைத்தார்கள். இதுவரை அவர்களுடைய தாக்குதலில் சிக்கி மீண்டவர் என்று ஒருவர்கூட இல்லை. என்னையும் அதுபோன்று எதிர்பார்த்தார்கள்.

நான் இந்துமதத்திற்கு ஆற்றும் பங்களிப்புகளை நிறுத்தவும், தொடர்ந்து இந்து மதத்திற்கு பங்களிக்கும் நோக்கத்தையும் கைவிட்டு (புளைந ரூி) அவர்களுடைய நோக்கத்திற்கு சரணடைய பலமுறை கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டது. அனைத்து தாக்குதல்களிலிருந்தும் பரமசிவன் என்னை காப்பாற்றியருளினார். காலபைரவனின் பாதுகாப்பால், பராசக்தியின் கருணையால் நான் மட்டுமல்லாது, இவை அனைத்தையும் மீறி அஞ்சா நெஞ்சம் கொண்ட ஆன்மீக பலம் கொண்ட அமைதியையும், அஹிம்சையையும் மட்டுமே ஆயுதமாகக் கொண்ட, லட்சக்கணக்கான என் பக்தர்கள் மீண்டும் ஒன்று திரண்டு எழுந்துவிட்டார்கள்.

கேள்வி: கைலாஸாவின் நோக்கம் என்ன?

என்மீதும், என் சங்கத்தின்மீதும் தொடுக்கப்பட்டது இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய மதத்தாக்குதல் ஆகும். பரமசிவனின் பெருங்கருணையினால், பேரருளால் இந்த தாக்குதல் எங்களை ஸ்திரமான ஜீவன் முக்த சமுதாயம் உருவாக்க வைத்துள்ளது. நான் பிறந்த வளர்ந்த திருவண்ணாமலையில் எனக்கு இறையனார் அளித்த இறைசூழலினால்தான், அங்கிருந்த ஜீவன் முக்த சமுதாயத்தின் சூழலினால்தான், இறையனார் தாமே வந்தும், அங்கு வாழ்ந்த குருமார்கள் மூலமாகவும் எனக்கு அளித்த இறை அனுபூதியினால் பெற்ற ஆன்ம பலம்தாம் இத்தகைய கொடுமையான தாக்குதலை தாங்குவதற்கும், வெறுப்பு பிரச்சாரங்களால் வெறுப்படையாமல் - பின்வாங்காமல் - சோர்வடையாமல் - என் நோக்கத்தை கைவிடாமல் பலமடங்கு தொடர்ந்து உச்சமான பங்களிப்புகளை செய்வதற்கும் ஆதாரமாக இருந்தது, இருக்கின்றது.

எனக்கு கிடைத்த ஜீவன்முக்த சமுதாயம், ஞான சூழழியல் இந்துக்களுக்கும் - இந்துமதத்தை விரும்பி ஏற்று வாழ நினைக்கும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக பரமசிவனின் அருளால் உருவாக்கப்பட்டது "கைலாஸா". "கைலாஸா" - நான் எனது குருமார்களுக்கு செலுத்தும் நன்றி கடன்.

கேள்வி: ஜீவன் முக்தியென்றால் என்ன?

இந்த வார்த்தை 'ஜீவன் முக்தியை' ஆழ்ந்து புரிந்துகொள்வோம்.

ஜீவன் முக்தியென்றால்..." ஒரு ஜீவன் தன்னை - தன்னுடைய சுகத்தின், வாழ்க்கையின் ஆதாரமான உடலையும், மனதையும் தாண்டிய "ஆன்ம சக்தி" என்பதை உணர்ந்து... வெளிஉலகத்தாலும் உடலாலும், மனதாலும், எதனாலும் காயப்படுத்தப்பட்டாலும் அதற்கு கலங்காது அலங்காது நிலை நின்று, தன் ஆன்ம பலத்தின் - ஞானத்தின் ஸ்திர தன்மையை நிதர்சனமாக வாழ்க்கையில் வெளிப்படுத்துவது தான் 'ஜீவன் முக்தி'.

உலகத்தில் இரண்டே இனம்தான் உள்ளது: ஒன்று எத்தனை இருந்தாலும் நிம்மதியில்லாமல் வாழ்ந்து மடியும் சாதாரண மனிதர்கள்.

இரண்டாவது வகைஎத்தனை தாக்கப்பட்டாலும், எதனாலும் அசையாது, வாழ்க்கை ஆனந்தமானது என்று தான் வாழ்ந்து, ஆன்ம பலத்தின் உறுதியை மக்களுக்குக் காட்டிக் கொண்டேயிருக்கின்ற 'ஞான தீபங்கள்', 'ஞான விளக்குகள்' - இந்த ஜீவன் முக்தர்கள்.

பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு புத்தனில் துவங்கி, சங்கரன், ஏசுநாதன், முகமது வாழையடி வாழையென எல்லா மதங்களிலும், எல்லா இனங்களிலும் உலகின் பல்வேறு மூளைகளிலும் தோன்றிய குருமார்கள், அவர்களைப் புரிந்து கொள்ள முடியாத மக்களால் தாக்கப்பட்டாலும், விஷம் கொடுக்கப்பட்டாலும், விரட்டியடிக்கப்பட்டாலும்,கல்லால் அடிக்கப்பட்டாலும், உடலாலும் மனதாலும் தாக்குப்பிடிக்க முடியாத தொல்லைகளால் தாக்கப்பட்டாலும், யானையால் இடறப்பட்டாலும்,மீராவையும், பிரகலாதனையும் போல் உறவினர்களாலேயே கொடுமைப்படுத்தப்பட்டாலும்,உலகில் இருக்கும் எல்லாவித கொடுமைகளும் அவர்களுக்கு இழைக்கப்பட்டாலும், சிறையிலிடப்பட்டாலும் தங்களின் ஜீவன் முக்தியின் ஸ்திரத்தன்மை மாறாது மனித குலத்தை அடுத்த உயர் நிலைக்கு அழைத்து செல்கிறார்கள்.

தன்னுடைய கருத்துக்கு மாறாக ஒரு கருத்து உடையவராக இருந்தால், மனரீதியாக அவர்களை உடைப்பதற்கு சிறையிலிட்டு வாட்டுவது பாரம்பரியமான வழக்கம்.சிறையிலிட்ட போது, திருநாவுக்கரசர் மிக இனிமையாகப் பாடுகிற உணர்வை வெளிப்படுத்துகின்ற பாடல்.

மாசில் வீணையும் - இனிமையான வீணையின் நாதமும்,
மாலை மதியமும் - மாலை நேரத்தில் சந்திரனும்,
வீசு தென்றலும் - வீசும் இந்த இனிமையான தென்றலும்,
வீங்கிள வேனிலும் - இளவேனிற் காலத்து இனிமையும்,
மூசு வண்டுறை பொய்கையும் –வண்டுகள் பறக்கக்கூடிய தாமரை தடாகத்தையும் போல,
ஈசன் எந்தை இணையடி நீழலே...

திருநாவுக்கரசர் சிறையிலிருந்தபொழுது ஈசனை நினைத்து பாடினார்.

நாத்திகவாதிகள் வேண்டுமானால் திருநாவுக்கரசர் இந்த உணர்வோடு இருந்தாரா? இல்லையா? என்பது பற்றி விவாதிக்கலாம், கட்டுக்கதை என்று சொல்லலாம். அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பது இரண்டாவது பட்சம். அது அவர்களுடைய சாதாரண பகுத்தறிவுக்கு எட்டாத விஷயம்.ஆனால் நாம் புரிந்து கொள்ள வேண்டிய சத்தியம்... சிறையில் இருக்கின்ற ஒரு மனிதர், இந்த உயர்ந்த கற்பனையை நினைத்துப் பார்க்கிறார் என்றாலே, சிறையின் கூடு அவரைத் தாக்கவில்லை என்பதை உள்உணர வேண்டும்.

மக்களே, ஆழ்ந்து தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள், எத்துனைதான் தாக்கப்பட்டாலும், ஆன்ம பலத்தினால், ஆன்ம பலம் கொடுத்த தெளிவினால், யாரையும் திருப்பித் தாக்காமல், யாரையும் ஒரு வார்த்தையும் இடராமல், நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்தவிதத்திலும், யாருக்கும் ஒரு துக்கமும் அளிக்காமல், அதேபோல், நம்மீதும் நம் அனுபவத்தின் மீதும், நம் நம்பிக்கை குறையாமலும், ஸ்திரமாக, இந்த மிகப்பெரிய மதத் தாக்குதலை எதிர்கொண்டதின் மூலமாகவே ஜீவன் முக்த சமுதாயத்தை உருவாக்க வந்திருக்கும் வாழையடி வாழையென திருநாவுக்கரசரின் வாரிசுகள் நாம் என்று நிருபித்துவிட்டோம். நாம் நம்மை ஜீவன் முக்தர்கள் என்று நிரூபித்துவிட்டோம்.

கேள்வி: எதற்காக நீங்கள் தாக்கப்பட்டீர்கள்?

காலம் காலமாக, ஒரு அரசர் இன்னொரு அரசர் மீது போர்த் தொடுப்பார், யார் ஜெயிக்கிறார்களோ, அவர்களுக்கு அந்த நாடு. இன்றைய கால கட்டத்தில் போர் சாத்தியமில் லை. அதனால் இயங்குகின்ற துறையில், தங்கள் துறையில் இல்லாதவர்களாக இருந்தாலும் யாரையாவது தாக்கவேண்டும் என்ற வேகத்தோடு இயங்குவது என்பது ராட்சஸ தன்மை. இந்த ஆசனத்தில் அமர்ந்து, நான் செய்கின்ற வேலையைச் செய்ய விரும்புபவர்கள், என்னை அடித்து, இந்த ஆசனத்தைப் பிடிங்கிக்கொள்ள நினைத்தால் அது அரசியல், அது வாழ்க்கையின் வழக்கம். ஒரு அரசன் இன்னொரு அரசனை அழிப்பது அல்லது ஒரே துறையில் இருப்பவர்கள், ஒருவர் இன்னொருவரை எதிர்ப்பது வாழ்க்கையின் போக்கு.

ஆனால், எந்தத் துறைக்கும், எந்த வம்பிற்கும் செல்லாமல் 'சிவனே' என்று தன் வேலையைப் பார்த்துக் கொண்டே இருப்பவர்களையும், கண்ணில் பட்டார்கள் என்பதற்காக, யாரைவேண்டுமானலும் பழிப்பது என்ற நோக்கோடு, அழிக்க வேண்டும் என்ற நோக்கோடு செயல்படுவது ராட்சஸ தன்மை. எவ்வளவுப் பேரைத் தாக்குகிறோம் என்பதை வைத்துத்தான் தங்கள் பலம் இருக்கிறது என்று எண்ணும் பொழுது 'பாவம்' அவர்கள் இன்செக்கியூரிட்டிலத்தான் (Insecurity) வாழ்ந்தாக வேண்டும். ராட்சஸர்கள் போன்று எல்லோரையும் தாக்கிக் கொண்டே இருந்தாக வேண்டும்.

தங்கள் துறையைச் சார்ந்த எதிரிகளாக இருந்தால்மட்டும் தாக்குவது என்பது ஒரு அரசு முறை. அதைகூட ஒரு அரசியல் நீதி என்றேகூட சொல்லலாம். ஆழ்ந்து புரிந்துகொள்ளுங்கள், எத்துனைப் பேரைத்தாக்குகிறோம் என்பது சிலதுறையில் வேண்டுமானால் பலமாக இருக்கலாம் எத்துனை தாக்குப்பிடிக்கிறோம் என்பதுதான் ஆன்மீக துறையில் பலம். தாக்குதல் நடத்திய ராட்சஸர்களும் வியக்கும் வகையில் நாங்கள் மீண்டெழுந்துவிட்டோம்.

கேள்வி: தங்களுடைய 2021 புத்தாண்டு அருளுரை...

இந்துக்களே... பக்தர்களே, அன்பர்களே...

தலைநிமிர்ந்து நில்லுங்கள். நாம் நம்மை நிரூபித்து விட்டோம். நம் வெற்றியை நிரூபித்து விட்டோம். கைலாஸா - ஜீவன் முக்த சமுதாயத்தை உருவாக்குவதற்கான விதையாக அழிக்க முடியாத விதையாக நாம் உருவாக்கிவிட்டோம். வன்முறையால் எங்கள் பலத்தை நிரூபிக்கும் அரசியல்வாதிகள் அல்ல. தாக்குவதால் எங்கள் பலத்தை நிரூபிக்க நாங்கள் அரசியல் வாதிகள் அல்ல. தாக்குப்பிடிப்பதனால், எங்கள் பலத்தை நிரூபிக்கும் ஆன்மீகவாதிகள்.

ஒரு ஜீவன் முக்த சமுதாயத்தை உருவாக்க வேண்டுமானால், அடிப்படையாக எப்பேர்ப்பட்ட தாக்குதலையும் எதிர்கொண்டு, அந்த தாக்குதலின் போதும்கூட, தன் ஜீவன் முக்த தன்மையில் இருந்து தடுமாறாமல், நிலைமாறாமல், வாழ்க்கையின் ஆன்ம ஞானத்தின், ஆனந்தத் தன்மையை, உலகத்திற்கு வெளிப்படுத்திக் கொண்டே, தன் உடலாலும், சொல்லாலும், செயலாலும், யாருக்கும் எந்தப் பதிலடியும் கொடுக்காமல்,

வார்த்தைகளை வாரி இறைக்காமல் ஆழ்ந்த பொறுமையோடு, ஆழ்ந்த அமைதியோடு இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய மதத்தாக்குதலை எதிர் கொண்டிருக்கின்றோம். தாக்குப் பிடித்திருக்கின்றோம். நாம் வெற்றி அடைந்துவிட்டோம். தாக்குதல் நமக்கு புதிதல்ல. ஆழ்ந்து பார்த்தோமானால், காலம்காலமாக யுகம் யுகமாக, இந்தப் பூமியில் பூத்த ஜீவன் முக்தர்கள், மீண்டும் மீண்டும் மீண்டும் வாழ்க்கையில் தங்களின் அளவிடமுடியாத, எதிரிகளும் கண்டு நடுநடுங்கும் ஸ்திரதன்மையை, உறுதியை, தெளிவை, வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். அதில் நாம் இணைந்துவிட்டேபம். இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய மதத்தாக்குதலை எதிர்கொண்டாலும் நாம் எதனாலும் கலங்காது எல்லோரையும் வாழவைத்து கொண்டிருக்கின்றோம்.

உங்கள்முன் இரண்டு சாத்தியமான வாழ்க்கை உள்ளது...

ஒன்று: எத்துனைதான் துக்கம் கொடுக்கப்பட்டாலும், எத்துனைதான் தாக்கப்பட்டாலும், ஞானத்தின் ஸ்திர தன்மையால், ஆன்மபலத்தால், வாழ்க்கையை ஆனந்தமயமாக வாழ்ந்து அதை உலகிற்கு சொல்லுகின்ற ஜீவன் முக்தர்கள். இன்னொருபுறம்: எத்துனைதான் சுகம் இருந்தாலும், பண பலமிருந்தாலும், கூலிப்படை ரவடிப் பலம் இருந்தாலும், பதவி பலம் இருந்தாலும், அரசியல் பலம் இருந்தாலும், ஊடகத்துறை பலம் இருந்தாலும், வாழ்க்கையை துக்கமாக, வாழ்ந்து மடியும் சாதாரணமாக மனிதர்கள்.

நீங்கள் எவ்வாறு வாழ விரும்புகின்றீர்கள்? இவ்வருடம் அதை முடிவு செய்யுங்கள். இதுதான் என்னுடைய ஆசிர்வாத செய்தி.

ஜீவன்முக்தர்களாக வாழ முடிவெடுக்க விரும்பும் அனைவருக்கும் "கைலாஸா" உறுதுணையாக இருக்கும். உங்கள் வாழ்விற்கு பெபறுபெடுத்து வழிகாட்டும் என்ற நற்செய்தியை நல்குகிறேன்."கைலாஸா" பரமசிவ பரம்பொருளின் பேரருளால் உருவானது. எதனாலும் அழியாது. எதனாலும் அழிக்கப்படமுடியாது என்ற செய்தியை தாக்குதல் நடத்துபவர்களுக்கும் தெரிவித்து கொள்கிறேன். அனைவரும் பரமசிவனின் பேரருளால் பரமசிவபதத்தைப் பற்றி, பரமசிவத்துவத்தில் இருந்து, பரமசிவ சக்திகளை வெளிப்படுத்தி, பரமசிவனின் இருப்பாகி, பரமசிவனின் பரம்பொருளாகி, கைலாஸத்தை அடைந்து நித்யானந்தத்தில் நிலைபெற ஆசிர்வதிக்கின்றேன். ஆனந்தமாக இருங்கள்.

*- பகவான் நித்யானந்த பரமசிவம்*

# மனிதனின் கலக்கமும், விஞ்ஞானமும்

விஞ்ஞான கண்டுபிடிப்புகளினால் பல நன்மைகள் கிடைக்கின்றன என்று நம்புகின்றோம் உண்மை என்றாலும். நிறைய தீமைகளும் இருகின்றன. மருத்துவக் கண்டுபிடிப்புகளினால் ஆயுள் காலம் கூடுகின்றது என்கிறோம். தேவைக்குமேல் இயற்கை வளங்கள் சுரண்டுதல், இயற்கைச் சீரழித்தல், மாசுபடுத்தல், இயற்கையை மாற்றி அமைக்க முயற்சித்தல் இப்படி பலவற்றை சொல்லிக்கொண்டே போகலாம். மரங்களை அழித்ததில் மழை குறைந்தது. பெரும் காடுகளை அழித்து சீரற்ற பருவ நிலையால் அவதிப்படுகின்றோம். தேவைக்கு மேல் எண்ணையைப் பூமித்தாயிடம் இருந்து உறிஞ்சுகின்றோம் என்பதை தெரிந்து செய்கின்றோம். எண்ணையிலிருந்து காரியமில் வாயுவை உற்பத்தி செய்ய வழி வகுத்து ஓசான் படலத்தில் ஓட்டையை ஏற்படுத்தி விட்டோம்.

இதற்கு மேலாக இயற்கையாகிய நீ என்ன நோய்களை கொடுத்து மனிதர்களை கட்டுப்படுத்துவது? நாங்கள் நோய்க்கிருமிகளை உற்பத்தி செய்து உலகம் மழுவதையும் கட்டி ஆழுகின்றோம் என்று கூறிச் செயல்படுத்தி இயற்கையைச் சீண்டியதன் விளைவே இப்பொழுது நாம் அனுபவித்து வரும் அனைத்து நோய்களுக்கும் காரணம். அபிமன்யு கரட்செத்திரப் போரில் சக்கர வியூகத்தை அமைத்து உள்ளே சென்றது போல நோய்க்கிருமிகளை உற்பத்தி செய்து பரவ விட்டு விட்டார்கள். சக்கர வியுகத்திலிருந்து வெளியே வரத்தெரியாதது போல இந்த நோய்க்கிருமிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வழிதெரியாமல் மானிட இனம் மருண்டு கிடக்கின்றது.

மனிதன் தன்னுடைய மூதாதையர்களை நினைத்து அவர்களுக்கு இன்றைய நவீன வசதிகள் கிடைக்கவில்லையே, அனுபவிக்க கொடுத்து வைக்கவில்லையே என்று பரிதாபப்பட்டு கொண்டிந்தான். அனால் இப்பொழுது அவனுக்கே மனதில் அமைதியில்லை. வெளியில் பாதகாப்பு இல்லை. அவன் தன்னைத்தானே பார்த்துப் பரிதாப்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றான். நமக்கு விஞ்ஞானம் வாழ்நாளை நீடித்துக்கொண்டிருக்கின்றது என்ற நிலமாறி, நோய் எப்பொழுது வரும், எப்படி வரும். ஏன் வருகின்றது, மருந்து எப்பொழுது வரும் நாம் உயிரோடு வாழுவோமா என்றும் அச்சத்தோடு பாமரன் முதல் பணக்காரன் வரை அனைத்துத் தரப்பினரும் நிலை குலைந்து அச்சத்துடன் காலத்தைக் கழித்து வருகின்றார்கள்.

இன்னும் சிலர் நோய்கள் வந்து மயக்க மருந்து கொடுத்தால் உடல் வலிகள் குறைக்கப்படுகின்றன. சில மயக்க மருந்து இல்லாமலே சிகிச்சை பெறக்கூடிய வலியில்லா நிலையை அடைகின்றார்கள். சிகிகச்சைமுறை தெரியாத நிலையில் இந்த மருந்து, வேலை செய்யாவிட்டால்! வேறு மருந்து என்று மருந்துக்கு மேல் மருந்தாக, வீரியம் மிக்க மருந்துகளை உடலில் செலுத்தும் பொழுது ஒவ்வாமையினால் உடல் நலமிழந்து விடுகின்றது. ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் வலுவிழக்கும் பொழுது எங்கள் உடல் அதிர்வு அதிகமாகி இந்த உடல் இனிமேல் நமக்கு பயன்படாது என்ற காலக்கெடு வந்து விடுகின்றது. நாட்டில் நிலவி வரும் நிலையும். நம்பிக்கையும். விஞ்ஞான முறைகளும் பயத்தை மனிதன் மனதில் நிரப்பியுள்ளது என்றுதான் சொல்லலாம்.

# துன்பங்கள் ஏன் வருகின்றன...

தனிப்பட்ட முறையில் நாம் இந்தப் பிறவியிலும். பழம்பிறவியிலும் சேர்த்தக்கொண்ட பாவங்களின் தொகுப்பையே உன் அழுக்கு என்கிறார்கள் அன்னை. குடும்பத்திலே இருந்த முன்னோர் செய்த பாவங்கள் குடும்பத்தலைவன் செய்த பாவங்கள் மற்றும் பிற காரணங்களின் தொகுப்பைக் குடும்ப அழுக்கு என்கிறார்கள்.

1. முற்பிறவியில் செய்த ஊழ்வினை காரணமாக சில கஷ்டங்கள் வருகின்றன.
2. குடும்பத்தில் முன்னோர் செய்த பாவங்கள் காரணமாகவும் சில கஷ்டங்கள் வருகின்றன.
3. இறந்தபோன தாய், தந்தையரை நினைத்து ஆன்மா சாந்தி அடையவும், அவர்கள் நற்கதி அடையவும் அவர்தம் வாரிசுகள் செய்ய வெண்டிய கடமைகள் உண்டு. அது கருதியை அவர்களை நினைத்து திதி ஏற்பாடுகளைச் செய்தார்கள். அவற்றைச் செய்யாது விட்டால் பிதிர்சாபம், பிதிர் தோகூம் வுரும் என்று கூறப்படுகின்றது.
4. வயிறு எரிந்து ஒருவர் சாபமிட்டால் அது நம்மைப்பரிக்கும். எண்ணத்திற்குச் சக்தி உண்ட. யாரோ இட்ட சாபத்தால் வெந்து தவிக்கும் குடும்பங்கள் உள்ளன. பல குடும்பங்களுக்குப் பெண் சாபம் உண்டு.
5. அநியாயம், அக்கிரகம் செய்து சேர்த்த வைத்த சொத்தை அனுபவிக்கின்ற சில குடும்பங்கள் அல்லல்படுகின்றன.
6. தோகூமுள்ள மனையில் வீடு கட்டிவிட்டு அதனால் சில பிரச்சனைகள் ஏற்பட்டு அவதிப்படுகின்ற குடும்பங்கள் உள்ளன.
7. சில குடும்பங்களில் தீய ஆவிகள், துர்தேவதைகள் ஆதிக்கம் செலுத்துவதால் அல்லல் படுகின்றன.
8. சில வீடுகள் கட்டிடகலை அமையாததாலும், வாசற்கதவின் அளவு சரியானபடி அமையாததாலும் கூட பிரச்சனை ஏற்படுகின்றன.
9. எதிகளின் பொறாமை காரணமாக வைக்கப்பட்ட ஏவல், பில்லி. சூனியம் வைப்பு ஆகியற்றால் சில குடும்பங்கள் அல்லல்படுகின்றன.
10 இவை எல்லாவற்றுக்கும் மேலாக புரிந்து கொள்ளமுடியாத தேவரகசியங்களை உண்டு. பிறவி ரகசியங்கள் உண்டு. தெய்வ வழிபாடே எல்லாவற்றுக்கும் விடையளிக்கும் என்பதே உண்மை.

இவை தனிமனிதப் பிரச்சனைகள். இவை தவிர சூழல், சமுாயம் அமைப்பு, உத்தியோக வர்க்கம், பொரளாதார அமைப்பு ஆகிய பொதுவான காரணங்களினால் நாட்டு மக்கள் அவதிப் படுகின்றார்கள். பஞ்சம் வெள்ளம், நோய் முதலிய இயற்கை இடர்பாடுகளால் ஏற்படுகின்ற பாதப்புகள் வேறு.

***"நன்றி - சக்தி ஒளி"***

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# அன்பின் தொனி - 598

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.

**கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதியும்,**

கர்த்தாவே, உமது செவியைச் சாய்த்து, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும், நான் சிறுமையும் எளிமையுமானவன். என் ஆத்துமாவைக் காத்தருளும், நான் பத்தியுள்ளவன், என் தேவனே, உம்மை நம்பியிருக்கிற உமது அடியேனை நீர் இரட்சியும். ஆண்டவரே, எனக்கு இரங்கும், நாடோறும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். உமது அடியேனுடைய ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கும், ஆண்டவரே, உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன். ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர். கர்த்தாவே, என் ஜெபத்திற்குச் செவிகொடுத்து, என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கவனியும். நான் துயரப்படுகிற நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் என்னைக் கேட்டருளுவீர். ஆண்டவரே, தேவர்களுக்குள்ளே உமக்கு நிகருமில்லை, உம்முடைய கிரியைகளுக்கு ஒப்புமில்லை. ஆண்டவரே, நீர் உண்டாக்கின எல்லா ஜாதிகளும் வந்து, உமக்கு முன்பா கப்பணிந்து, உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள். தேவரீர் மகத்துவமுள்ளவரும் அதிசயங்களைச் செய்கிறவரு மாயிருக்கிறீர், நீர் ஒருவரே தேவன். கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதியும், நான் உமது சத்தியத்திலே நடப்பேன், நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும். என் தேவனாகிய ஆண்ட வரே உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து, உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன். நீர் எனக்குப் பாராட்டின உமது கிருபை பெரியது, என் ஆத்துமாவைத்தாழ்ந்த பாதாளத்திற்குத் தப்புவித்தீர். தேவனே, அகங்காரிகள் எனக்கு விரோதமாய் எழும்புகிறார்கள், கொடுமைக்காரராகிய கூட்டத்தார் என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள், உம்மைத் தங்களுக்கு முன்பாக நிறுத்தி நோக்காதிருக்கிறார்கள். ஆனாலும் ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன். என்மேல் நோக்கமாகி, எனக்கு இரங்கும், உமது வல்லமையை உமது அடியானுக்கு அருளி, உமது அடியாளின் குமாரனை இரட்சியும். கர்த்தாவே, நீர் எனக்குத் துணைசெய்து என்னைத் தேற்றுகிறதை என்பகைஞர் கண்டு வெட்கப்படும்படிக்கு, எனக்கு அநு கூலமாக ஒரு அடையாளத்தைக் காண்பித்தருளும். - **சங்கீதம் 86: 1-17**

அவர் அஸ்திபாரம் பரிசுத்த பர்வதங்களில் இருக்கிறது. கர்த்தர் யாக்கோபின்வாசஸ்தலங்களெல்லாவற்றைப் பார்க்கிலும் சீயோனின் வாசல்களில் பிரியமாயிருக்கிறார். தேவனுடைய நகரமே! உன்னைக் குறித்து மகிமையான விசேஷங்கள் வசனிக்கப்படும். என்னை அறிந்தவர்களுக்குள்ளே ராகாபையும் பாபிலோனையும் குறித்துப் பேசுவேன், இதோ, பெலிஸ்தியரிலும், தீரியரிலும், எத்தியோப்பியரிலுங்கூட, இன்னான் அங்கே பிறந்தான் என்றும், சீயோனைக்குறித்து, இன்னான் இன்னான் அதிலே பிறந்தானென்றும் சொல்லப்படும், உன்னதமானவர் தாமே அதை ஸ்திரப்படுத்துவார். கர்த்தர் ஜனங்களைப் பேரெழுதும்போது, இன்னான் அதிலே பிறந்தான் என்று அவர்களைத் தொகையிடுவார். எங்கள் ஊற்றுகளெல்லாம் உன்னில் இருக்கிறது என்று பாடுவாரும் ஆடுவாரும் ஏகமாய்ச் சொல்லுவார்கள். - **சங்கீ. 87:1-7**

**கர்த்தாவே, ஏன் என் ஆத்துமாவைத் தள்ளிவிடுகிறீர்?**

என் இரட்சிப்பின் தேவனாகிய கர்த்தாவே, இரவும் பகலும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். என் விண்ணப்பம் உமது சமுகத்தில் வருவதாக, என் கூப்பிடுதலுக்கு உமது செவியைச் சாய்த்தருளும். என் ஆத்துமா துக்கத்தால் நிறைந்திருக்கிறது, என் ஜீவன் பாதாளத்திற்குச் சமீபமாய் வந்திருக்கிறது. நான் குழியில் இறங்குகிறவர்களோடு எண்ணப்பட்டு, பெலனற்ற மனுஷனைப்போலானேன். மரித்தவர்களில் ஒருவனைப்போல் நெகிழப்பட்டிருக்கிறேன், நீர் இனி ஒருபோதும் நினையாதபடி, உமது கையால் அறுப்புண்டுபோய்ப் பிரேதக்குழிகளிலே கிடக்கிறவர்களைப்போலானேன் என்னைப் பாதாளக்குழியிலும் இருளிலும் ஆழங்களிலும் வைத்தீர். உம்முடைய கோபம் என்னை இருத்துகிறது, உம்முடைய அலைகள் எல்லாவற்றினாலும் என்னை வருத்தப்படுத்துகிறீர். எனக்கு அறிமுகமானவர்களை எனக்குத் தூரமாக விலக்கி, அவர்களுக்கு என்னை அருவருப்பாக்கினீர், நான் வெளியே புறப்படக்கூடாதபடி அடைபட்டிருக்கிறேன். துக்கத்தினால் என் கண் தொய்ந்து போயிற்று, கர்த்தாவே, அநுதினமும் நான் உம்மை நோக்கிக் கூப்பிட்டு, உமக்கு நேராக என் கைகளை விரிக்கிறேன். மரித்தவர்களுக்கு அதிசயங்களைச் செய்வீரோ? செத்துபோன வீரர் எழுந்து உம்மைத் துதிப்பார்களோ? பிரேதக்குழியில் உமது கிருபையும், அழிவில் உமது உண்மையும் விவரிக்கப்படுமோ? இருளில் உமது அதிசயங்களும், மறதியின் பூமியில் உமது நீதியும் அறியப்படுமோ? நானோ கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், காலையிலே என் விண்ணப்பம் உமக்குமுன்பாக வரும். கர்த்தாவே, ஏன் என் ஆத்துமாவைத் தள்ளிவிடுகிறீர்? ஏன் உமது முகத்தை எனக்கு மறைக்கிறீர்? சிறுவயதுமுதல் நான் சிறுமைப்பட்டவனும் மாண்டுபோகிறவனுமாயிருக்கிறேன், உம்மால் வரும் திகில்கள் என்மேல் சுமந்திருக்கிறது, நான் மனங்கலங்குகிறேன். உம்முடைய எரிச்சல்கள் என்மேல் புரண்டுபோகிறது, உம்முடைய பயங்கரங்கள் என்னை அதம்பண்ணுகிறது. அவைகள் நாடோறும் தண்ணீரை ப்போல் என்னைச் சூழ்ந்து, ஏகமாய் என்னை வளைந்துகொள்ளுகிறது. சிநேகிதனையும் தோழனையும் எனக்குத் தூர மாக விலக்கினீர், எனக்கு அறிமுகமானவர்கள் மறைந்து போனார்கள்.
**- சங்கீதம் 88: 1- 18**

**எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது**

ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர். பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர். நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர். உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள் போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது. அவர்களை வெள்ளம்போல் வாரிக்கொண்டுபோகிறீர், நித்திரைக்கு ஒத்தி ருக்கிறார்கள், காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அது காலையிலே முளைத்துப் பூத்து, மாலையிலே அறுப்புண்டு உலர்ந்துபோம். நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து, உமது உக்கிரத்தினால் கலங்கிப்போகிறோம். எங்கள் அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும், எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர். எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது, ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங் களைக் கழித்துப்போட்டோம். - **சங்கீதம் 90: 1-9**

*தொடரும்*


நெடுந்தீவுத் தோன்றலும் உதவிக் கல்விப் பணிப்பாளரும்
சுப்பிரமணியம் தெய்வானை இணையரின் அருந்தவப் புதல்வரும்
காலம்சென்ற தனலட்சுமி அம்மையாரின் அருந்திறல் துணைவருமான

**திரு.சுப்பிரமணியம் சிவநாயகமூர்த்தி அவர்கள்**

**இப்புவி வாழ்வை நீத்து இயற்கை யெய்திய காலை இரங்கியவை**

அன்னைமடியில்
28.08.1934



ஆண்டவனடியில்
30.01.2021

பண்பின் இருப்பிடமே பாசத்தின் நிறைகுடமே
மண்ணின் மாமணியே மனதத்தின் மாவிளககே
கண்ணின் கருணைவிழி கருத்தூட்டும் கலங்கரையே
தண்ணொளியாய் தரணிபோற்ற வாழ்ந்த கோவே!

வெள்ளை உள்ளம்தான் உன்னுள்ளத் தாமரையோ
கொள்ளை இன்பம்நாம் பெறவைத்த உத்தமனே
துள்ளித் திரிந்திருந்த தூயவனே துக்கந்தான் நாமடைய
தள்ளிதான் எமைவைத்து சென்றதும் ஏனையா?

கலங்கரை விளக்கமென்ன குலம்விளங்க வைத்தவரே
துலக்கமுற பிள்ளைகளை அரவணைத்து வழிநடந்தாய்
கலக்கமுற அவரின்று கருத்துரை கருவதற்கு நீயில்லை
விலக்கித்தான் வைத்தின்று சென்றதேனோ தலைமகனே!

அப்பா எனவழைத்து ஆறுதல் பெற்றநும் வாரிசுகள்
தப்பாது வந்துதினம் எம்தங்கமென இன்புற்றார்
அப்பா இன்றில்லை அம்மாவும் எமக்கில்லை எனஏங்கி
எப்போ நாம்காண்போம் எப்பிறப்பிலென அழுகின்றார்.

இறப்பினிலும் இருப்பினிலும் உன்னரிய திருமகளை
இறுகத்தான் பற்றி பிள்ளைப் பாக்கியப் பேறகளாய்
துறைபோகக் கல்வியறிவூட்டி மகற்காற்றும் உதவதனை
கறையின்றிச் செய்துவந்த கற்பகமே விற்பனரே!

இன்முகமாய் என்றென்றும் இயைபுடனே இருந்த
இன்பப்புதையல் ஐயா இன்முகத்தைக் காணாது
இன்னலுற்று அழுகின்றார் உன்னுதிரத் துதித்தோர்
கன்னல் கருஞ்சுவையே கனிமுககே சென்றதேனோ?

அன்றில் பறவையென அணைந்திருந்த பத்தினியை
முன்றில் இழந்த முனைப்பால் துணைநாடிச் சென்றிட
மன்னவனே மருட்கொண்டு மறைந்தனையோ மாதேசம்
நன்முத்தே நயனதுவானால் அமைதிதான் நாம் காண்போம்

பிரிவால் வாடும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்
மற்றும் உறவினர்களின் துயரில் பங்குகொள்ளுவதோடு
அன்பின் நண்பரின் ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி
அன்பின் சிவபாலு தயாதேவி குடும்பம்

# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளுர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25 வது வெள்ளி விழா
2021 UTHAYAN
உதயன்

NEW CLASS STARTING
On12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

உதயம் 1296 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 5, 2021

# ஹாங்காங்கிலிருந்து குடிவரவாளர்களை கனடாவுக்கு அழைக்கும் திட்டங்களை கனடிய குடிவரவு அமைச்சர் அறிவித்தார்



ஹாங்காங் தேசத்திலிருந்து குடிவரவாளர்களை கனடாவுக்கு அழைக்கும் புதிய திட்டங்களை கனடிய குடிவரவு அமைச்சர் நேற்று முன்தினம் அறிவித்தார்.

கனடாவையும் ஹாங்காங்கையும் இணைக்கும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் பட்டதாரிகளையும் தொழில் தேர்ச்சிபெற்ற தொழில்நுட்பவியலாளர்களையும் கனடாவில் குடியமர்த்த ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் கனடிய குடிவரவு அமைச்சர் மார்கோ மென்டிசினோ அறிவித்துள்ளார்.

(உள்ளே விபரமான செய்தி: 4ம் பக்கம்)



# வீடுகளை விட பாடசாலைகளே தற்போது பாதுகாப்பு அதிகம் நிறைந்த இடமாக விளங்குகின்றது

## ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் கூறுகின்றார்

“தற்போதைய நோயின் தாக்கம் நிறைந்துள்ள காலத்தில் மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு வீடுகளை விட பாடசாலைகளே தற்போது பாதுகாப்பு அதிகம் நிறைந்த இடமாக விளங்குகின்றது. எனவே தான் எமது அரசாங்கம் பாடசாலைகளில் நேரடியாக கல்வி கற்பதைத் தூண்டி வருகின்றது. எனவே பெற்றோரும் ஆசிரியர்களும் இதனை நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.”

இவ்வாறு தெரிவித்தார் கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் லெச்சே அவர்கள். நேற்று பிற்பகல் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பல் மொழி ஊடகங்களின் பிரதிநிதிகளையும் பத்திரிகை ஆசிரியர்களையும் இணையவழி ஊடாக சந்தித்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

(உள்ளே விபரமான செய்தி: 4ம் பக்கம்)

# "பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை" நடைபயணத்திற்கு ஆதவாக கனடிய பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஹரி ஆனந்தசங்கரி எம்.பி



”பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை” நடைபயணத்தில் “நீதிக்காக நடப்போருக்கு” ஆதவாக கனடிய பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஹரி ஆனந்தசங்கரி ”தமிழ் மக்களின் எழுச்சியை தான் ஆதரிப்பதற்காகவே நான் இங்கு உரையாற்றுகிறேன்” என்று குறிப்பிட்டார்.

அவர்அங்கு உரையாற்றிய காணொளியும் இங்கு காணப்படுகின்றது

அவரது சிறிய உரை பின்வருமாறு அமைகின்றது.

“சபாநாயகர் அவர்களே,

இலங்கை அதன் 73 ஆவது சுதந்திர நாளைக் கடைப்பிடிக்கும் வேளையில், “பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை” “நீதிக்காக நடப்போருக்கு” ஆதரவைத் தெரிவிப்பதற்காக நான் உரையாற்றுகிறேன். உயிர் தப்பியுள்ளோரும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் மேற்கொள்ளும் இந்தப் பயணத்தில் குடிசார் சமூக செயற்பாட்டாளர்களும், அரசியல் தலைவர்களும் இணைந்துகொண்டுள்ளார்கள். இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராகப் புரிந்த போர்க் குற்றங்கள், மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை என்பவற்றுக்கான பொறுப்புக்கூறலே அவர்களது நோக்கம்.

சபாநாயகர் அவர்களே, இலங்கைத் தீவு சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து குற்றம்புரிவோர் தண்டிக்கப்படாத நிலை காணப்படுவதுடன், சட்டத்தின் ஆட்சியும் செயலிழந்துள்ளது.

இலங்கை அரசு கடந்த சில மாதங்களில் மட்டும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை இடித்தழித்து, போர்க் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கி, முஸ்லிம் சிறுபான்மையினரின் உடல்களைப் பலவந்தமாகத் தகனம் செய்ததுடன், குடிசார் அமைப்புக்கள் பலவற்றை இராணுவம் பொறுப்பேற்றும் உள்ளது. இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்தவேண்டுமெனக் கடந்த வாரம் முடிவு செய்த மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர், இலங்கை தொடர்ந்தும் கட்டுப்பாடுகள் இன்றிச் செயற்பட அனுமதிக்கப்பட்டால் முன்னரைப்போன்ற அட்டூழியங்கள் மீண்டும் இடம்பெறுமென எச்சரித்துள்ளார்.



ஆகையால், இலங்கைத் தீவில் தமிழர்கள் சமாதானம், நீதி, சுயநிர்ணய உரிமை ஆகியவற்றுடன் வாழ்வதை உறுதி செய்வதற்குச் சர்வதேச சமூகம் அவசரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும்”

Dream Design Build
Paramount Custom Homes Ltd.
416-268-5296
www.paramountcustomhomesltd.net
TARION
Incredible Quality
Quick Turnaround
Competitive Prices
140-100 Cowdray Court, Scarborough, ON M1S 5C8
Paramountcustomhomesltd@gmail.com